Registered as a Newspaper பக்கங்கள் 16+8 விலை ரூ. 60

# உதயன்

சுடர் : 39
கதிர் : 21

ஞாயிற்றுக்கிழமை
17 டிசெம்பர் 2023

முச்சந்தி முரளி



"இப்பவே எல்லாரின்ர தலையிலும் கடும் சுமை. இதுக்குள்ள 'வற்'றும் சேர்ந்தால் கோவிந்தா தான்"

# கொட்டித் தீர்க்கும் மழை வடக்கில் பெரும் பாதிப்பு

யாழ்ப்பாணம், டிசெம்பர் 17

வடக்கு மாகாணத்துக்கு அண்மையாக வளிமண்டலத்தில் ஏற்பட்ட குழப்பநிலையால் கடந்த 3 தினங்களாகத் தொடரும் மழை காரணமாக ஆயிரத்து 600 குடும்பங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்து 200 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று இடர்முகாமைத்துவ மத்திய நிலையம் அறிக்கையிட்டுள்ளது.

14



## இராணுவத்தின் பிரதானியாக பீரிஸ்!

கொழும்பு, டிசெ. 17

இலங்கை இராணுவத்தின் பதவி நிலைப் பிரதானியாக மேஜர் ஜெனரல் பீரிஸ் நியமிக்கப்பட்டுள்ளார். நேற்று முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இந்தப் பதவி வழங்கப்பட்டுள்ளது. (ஓ-இ)

## இந்து சமயத் தலைவர்களுடன் தூதுவர்கள் சந்திப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 17

ஜப்பான், சுவிஸ் மற்றும் தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளின் இலங்கைக்கான தூதுவர்கள் நேற்றுச் சனிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் நல்லை ஆதீனத்தில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் தலைமையிலான இந்துசமயத் தலைவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

14

## இமயமலைப் பிரகடனம் கூட்டாக நிராகரிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 17

தமிழ் மக்களின் நிலைப்பாடுகளைக் கருத்திற்கொள்ளாத 'இமயமலைப் பிரகடனத்தை' வடக்கு - கிழக்கைச் சேர்ந்த மதத் தலைவர்கள், தமிழ் சிவில் - சமூக அமைப்புகள், மாணவர்கள் மற்றும் பாதிக்கப்பட்ட தரப்பினர் இணைந்து கூட்டாக நிராகரித்துள்ளனர்.

14

## தவறான முடிவு எடுத்து பெண் உயிர்மாய்ப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 17

குடும்பத் தகராறு காரணமாக தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துக்கொள்ள முயன்ற பெண்ணொருவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் நேற்று உயிரிழந்துள்ளார்.

கோப்பாய் மத்தியைச் சேர்ந்த 41 வயதான பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த 7 ஆம் திகதி இவரது கணவர் மதுபோதையில் வீட்டுக்குச் சென்றிருந்த நிலையில் இருவருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. குடிக்க வேண்டாம் என மனைவி கூறியிருந்த நிலையில் கணவர் வாக்குவாதப்

14

## குடும்பத் தகராறு; ஒருவர் மரணம்

முல்லைத்தீவு, டிசெ. 17

குடும்பத் தகராறால் விபரீத முடிவெடுத்த குடும்பத் தலைவர் உயிரிழந்த சம்பவம் முல்லைத்தீவில் இடம்பெற்றுள்ளது.

கள்ளப்பாடு, முல்லைத்தீவைச் சேர்ந்த 47 வயதான ஒருவரே உயிரிழந்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை குடும்பத் தகராறு காரணமாக அவர் தவறான முடிவை எடுத்ததால், அவரது உடலில் தீக்காயங்கள் ஏற்பட்டுள்ளன. உடனடியாக

14

## கார்த்திகைக் கிழங்கு பறித்தது உயிரை!

இளம் குடும்பத்தலைவருக்கு நேர்ந்த கதி

பருத்தித்துறை, டிசெ. 17

கார்த்திகைக் கிழங்கை உட்கொண்ட இளம் குடும்பத் தலைவர் நேற்று சனிக்கிழமை உயிரிழந்துள்ளார்.

14

செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுணிற்கு...
அதிகபட்ச முற்பணம்
130,000/=
வட்டிவீதம் மேலும் குறைக்கப்பட்டுள்ளது.
அதிகபட்ச இரகசியத்தன்மை
நேசபூர்வமான உடனடி சேவை
சிறந்த பாதுகாப்பு
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள்
011 200 88 88

5 வருடங்களாக

## அனுமதிப்பத்திரம் பெறாத வாகனப் பதிவுகள் நீக்கம்

கொழும்பு, டிசெ. 17

வருமான அனுமதிப்பத்திரத்தைக் கொண்டிராத வாகனங்கள் தொடர்பான தகவல்களைத் திரட்ட மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது. 5 வருடங்களுக்கு அதிக காலம் வருமான அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளாத வாகனங்கள்

14

## யாழ்ப்பாணத்தில் பல்கலை மாணவருக்கு மன அழுத்தம் அதிகரிப்பு

மூத்த விரிவுரையாளர் சிவநந்தினி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 17

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் குறிப்பிட்ட விகிதாசார மாணவர்கள் மன அழுத்தம் மற்றும் வேறு பல பிரச்சினைகளுக்கு ஆளாகிறார்கள். இவ்வாறான மாணவர்கள் தமது கற்கைநெறியை முடித்து வெளியேறுவதற்கு மிகவும் சிரமப்படுகிறார்கள். இதன்காரணமாக இந்த மாணவர்களுக்கு உள ரீதியான

14

## ஒவ்வொரு குடும்பத்துக்கும் வற்வரி ரூ. 20,467

கொழும்பு, டிசெ. 17

2024ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஒவ்வொரு குடும்பமும் 20 ஆயிரத்து 467 ரூபா வற்வரி மாதாந்தம் செலுத்த வேண்டும் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொருளாதாரம் மற்றும் புள்ளிவிவரவியல் பிரிவின் மூத்த பேராசி

14

சஞ்சீவி


ZEE தமிழ்
Zee Tamil ச ரி க ம ப நிகழ்ச்சியில்
இறுதிச்சுற்றுக்குத் தெரிவாகிய எமது மண்ணின் பிள்ளை கில்மிஷா அவர்களுக்கு
கட்டாயமாக வாக்களித்து வெற்றிக்குப் பங்களிப்போம்
இன்று மாலை 4.00 மணி வரை மாத்திரமே.
வாக்களிக்கும் முறை
+918657865761
என்ற இலக்கத்துக்கு Missed Call கொடுக்கவும்
எமது பிள்ளை எமது கடமை
தகவல் : தனோ 0779080009

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதை ஒழிப்புக்கு 6 மாத காலத் திட்டம்!

**கொழும்பு, டிசெ.17**

**நாட்டில் தலைத்தூக்கியுள்ள போதைப்பொருள் கலாசாரத்தை ஒழிக்கவும் கட்டுப்படுத்தவும் ஆறுமாத காலத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.**



இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
இதற்காக ஆறுமாதகாலத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்த எண்ணியுள்ளோம். இன்று முதல் இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.
எதிர்வரும் 6 மாதங்களுக்கு இந்த வேலைத்திட்டத்தை நடைமுறைப் படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.
இந்த வேலைத்திட்டத்துக்கு இடையூறு ஏற்படுத்தும் எந்தத் தரப்பினரிடமும் நானும், பொலிஸாரும் எந்தவிதக் கருணையும் காட்டப்போவதில்லை.
நாட்டில் சட்டம் மற்றும் ஒழுங்கைக் கடுமையாகப்பேணுவதற்கான விசேட வேலைத்திட்டமாக இது அமையும் - என்றார். (எ-இ)

# வெற்றிடமாகும் தேசிய அமைப்பாளர் பதவி!

கொழும்பு, டிசெ.17
ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பதவியை வெற்றிடமாக வைக்க கட்சி தீர்மானித்துள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.
ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உத்தியோகபூர்வ அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
பஸில் ராஜபக்ச ஒரு நிறுவுநராக கட்சி அமைப்புப் பணிகளைச் செய்கிறார்.
அதனால் தேசிய அமைப்பாளர் பதவியை வெற்றிடமாக விடுவது என அவரும் கட்சியினரும் உடன்பாட்டுக்கு வந்துள்ளனர்.
எதிர்காலத்தில் நாம் எடுக்கும் அரசியல் தீர்மானங்களின் அடிப்படையில் அதற்குத் தேவையான ஒருவரை நியமிப்போம் - என்றார். (எ-இ)

# கைபேசிக்கு வற்விதிப்பு பாதுகாப்பு அச்சுறுத்தல்

## இறக்குமதியாளர் சுட்டிக்காட்டு

கொழும்பு, டிசெ. 17
வற்விலக்குப் பட்டியலிலிருந்து கைபேசி இறக்குமதி நீக்கப்பட்டமை மறுபரிசீலனை செய்யப்படவேண்டும் என்று கைபேசி இறக்குமதியாளர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.
கைபேசி இறக்குமதிக்கு வற் அறவிடப்படும் பட்சத்தில் சட்டவிரோதமாக கைபேசிகள் நாட்டுக்குள் கொண்டுவரப்படலாம். அதன் மூலம் தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படலாம்.
சட்டவிரோத இறக்குமதி அதிகரித்தால் அரசாங்கத்துக்கு அந்நியச் செலாவணி இழப்பு ஏற்படும் என்றும் அந்தச் சங்கம் சுட்டிக் காட்டியுள்ளது. (ச-இ)



# 3 நாட்டுத் தூதுவர் யாழுக்கு வருகை

யாழ்ப்பாணம், டிசெ. 17
3 நாடுகளின் தூதுவர்கள் யாழ்ப்பாணம் வருகைதந்து வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.
சுவிட்ஸர்லாந்து, ஜப்பான், தென்னாபிரிக்கா ஆகிய மூன்று நாடுகளின் தூதுவர்களே யாழ்ப்பாணம் வருகை தந்திருந்தனர்.
இந்தச் சந்திப்பு யாழ்ப்பாணத்திலுள்ள ஆளுநரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.
இதன்போது வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்கள், நல்லிணக்கச் செயற்பாடுகள், மாகாணத்தில் எதிர்நோக்கப்படும் சவால்கள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன. (ச-27)



# சிறுமி துஷ்பிரயோகம்; இந்தியப் பிரஜை கைது


கொழும்பு, டிசெ. 17
கட்டுநாயக்க விமானநிலையத்தில் 9 வயதுச் சிறுமி ஒருவரைப் பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்படுத்திய குற்றச்சாட்டில் இந்தியப் பிரஜை ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
இந்தச் சிறுமி தனது தாய், சகோதரியுடன் சவூதியில் பணிபுரியும் அவரது தந்தையிடம் சென்று திரும்பிய வேளையிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.
சந்தேகநபர் விமானநிலைய அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ச-6)

# வேறுவழியின்றியே பட்ஜெட்டுக்கு ஆதரவாம்

## ஆளுங்கட்சி தெரிவிப்பு

மக்கள்மீது வரிச்சுமைகளைத்திணிப்பதற்கு பெரமுன உடன்படவில்லை. தற்போதைய சூழ்நிலையில் வேறு வழியின்றியே பாதீட்டை ஆதரித்தோம். விரும்பிவாக்களிக்கவில்லை.
-இவ்வாறு இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த தெரிவித்துள்ளார்.
'அரகலயவுடன் பொதுஜன பெரமுனக் கட்சியின் கதை முடிந்துவிட்டது என்றனர். கட்சி இன்று சிறந்த நிலையில் உள்ளது.
மக்கள்மீது வரிச்சுமைகளைத் திணிப்பதற்கு எமது கட்சி உடன்படவில்லை. இருப்பினும் ஆளுங்கட்சி பக்கம் இருப்பதால்தான் வரவு-செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்தோம் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ச-44)


## முதலாம் ஆண்டு நினைவு நிகழ்வு



தோற்றம் 25.02.1950 மறைவு 28.12.2022

2022.12.28 அன்று இறைபதம் அடைந்த எமது குல விருட்சம்

**அமரர்**
**நடராஜா சிவரட்ணம்**

அவர்களின் 01ம் ஆண்டு நினைவு நாள் 2023.12.18 (திங்கட்கிழமை) முருகையன் கோவிலடி, வல்வெட்டித்துறை எனும் முகவரியில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறவுள்ள மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
இவ்வழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

**குடும்பத்தினர்.**
**தொடர்பு: 077 236 7407**

(CS 27397)A-1


# சீதாவாக்கை பல்கலைக்கு லலித் பெயர்சூட்டும் ரணில்

கொழும்பு, டிசெ. 17
சீதாவாக்கை பட்டப்படிப்புகள் பல்கலைக்கழகத்துக்கு மறைந்த பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலியின் பெயர் சூட்டப்படவுள்ளது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.
மகாபொல புலமைப்பரிசில் திட்டத்தை அறிமுகம் செய்தமைக்காகவே இந்தக் கௌரவம் அவருக்கு வழங்கப்படுகிறது.
மகாபொல புலமைப்பரிசில் மூலம் பல அறிஞர்கள் உருவாகியுள்ளனர் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.
இதேவேளை பாதுகாப்பு அமைச்சராக லலித் அத்துலத் முதலி இருந்த காலத்திலேயே வடக்கு- கிழக்கில் அப்பாவிப்பொதுமக்களின் படுகொலைகள் பெருமளவில் நிகழ்ந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (ச-6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 19ஆம் திகதிவரை மழைக்கு வாய்ப்பு

**யாழ்ப்பாணம், டிசெ. 17**

**வடக்கு மற்றும் கிழக்கு மாகாணம் உட்பட்ட நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் எதிர்வரும் 19ஆம் திகதிவரை கனமழை நீடிக்கும் என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கைக்குக் கீழாகக் காணப்படுகின்ற காற்றடுக்கு சுழற்சி காரணமாக தற்பொழுது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தின் பல பகுதிகளுக்கும் தொடர்ச்சியாக கனமழை கிடைத்து வருகிறது. இந்த மழையை பொறுத்தவரை எதிர்வரும் 19ஆம் திகதி வரை நீடிக்கக்கூடிய வாய்ப்பு இருக்கின்றமையை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

ஏற்கனவே இலங்கையினுடைய வடக்கு மாகாணத்தினுடைய தரை மேல் நீர்ப் பரப்புக்கள் அவற்றினுடைய உவர் நீரை வெளியேற்றுகின்ற இந்தச் சூழ்நிலையில் தொடர்ந்து கிடைத்து வருகின்ற கனமழை காரணமாகவும் பல்வேறு பகுதிகளில் உள்ள தாழ் நிலங்களில் வெள்ள அனர்த்தத்துக்கான வாய்ப்புகள் இருப்பதாக அறியப்படுகிறது. எனவே தொடர்ச்சியாக மழை கிடைக்கும் என்பதனால் தாழ்வான பகுதிகளில் உள்ள மக்கள் அவதானமாக இருப்பது அவசியமானதாகும்.

மீண்டும் ஒரு காற்றுச் சுழற்சி இலங்கையினுடைய தென்கிழக்குவங்காளவிரிகுடாவில் தோன்றுவதற்கான வாய்ப்புகள் காணப்படுவதால் தொடர்ச்சியாகவும் மழை நீடிப்பதற்கான வாய்ப்புகள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணப்படுகின்றன - என்றார். (ம-27)



புலோலி கிழக்கு அ.த.க. பாடசாலையின் சிறுவர் பூங்கா கையளிப்பு மற்றும் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு என்பன குறித்த பாடசாலையில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றன. நிகழ்வில் 521ஆம் படைப்பிரிவின் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் வை.ஏ.பி.எம்.யகம்பத் கலந்து சிறப்பித்தார். (ம-100)

# மாற்றுத்திறனாளிகள் பராமரிப்புப் பயிற்சி



யாழ்ப்பாணம், டிசெ.17

மாற்றுத்திறனாளிகளை பராமரிப்பதற்கான பயிற்சி நெறி பெயார் மெர் நிறுவனத்தின் அனுசரணையுடன் கரைச்சி பிரதேச செயலக சமூக சேவைகள் உத்தியோகத்தர் ந.கீதரோகினி தலைமையில் கிளிநொச்சி மாவட்டச் திறன்விருத்தி நிலையத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் வளவாளராக உளவளத்துணை மருத்துவர் கீர்ஶ்ரீ கலந்து கொண்டார்.

நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட செயலக சமூக சேவைகள் உத்தியோகத்தர், கரைச்சி மற்றும் பூநகரி பிரதேச செயலகங்களின் சமூக சேவைகள் உத்தியோகத்தர்கள், மொழிபெயர்ப்பாளர், வீடுகளில் மாற்றுத்திறனாளிகளை பராமரிப்பவர்கள், மாற்றுத் திறனாளிகள் இல்லங்களில் மாற்றுத்திறனாளிகளை பராமரிப்பவர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (ரி-75)

# கடற்றொழில் சட்டம் தொடர்பில் மக்களைக் குழப்ப வேண்டாம்

## கிராமியச் சங்கங்களின் தலைவர் தெரிவிப்பு

புதிய கடற்றொழில் சட்டம் இன்னும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத நிலையில், மீனவ மக்களைக் குழப்ப வேண்டாம் என்று யாழ்ப்பாணம் மாவட்டத் தொழிலாளர் கிராமிய அமைப்புக்களின் சங்கத் தலைவர் நற்குணம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

புதிய கடற்றொழில் சட்டங்களால் ஆபத்து என சிலர் மக்களிடம் தெரிவித்து கையெழுத்தும் வாங்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். புதிய கடற்றொழில் சட்டமானது வரைவாகவே இன்னும் உள்ள நிலையில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு விவாதம் இடம்பெற்ற பின்னரே சட்டமாகும். நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் மீனவர்களுக்கு எதிரான விடயங்கள் இருக்குமாயின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது எதிர்ப்பைத் தெரிவிப்பார்கள். ஆனால் புதிய சட்டத்தில் ஆபத்து உள்ளது என சிலர் ஒவ்வொரு மாவட்டத்திலும் கையெழுத்து வாங்குவது மீனவ சமூகத்தை குழப்பும் முயற்சியில் ஈடுபடுவதும் சிலரின் தனிப்பட்ட தேவைகளை நிறைவேற்றுவதற்காகவா என எண்ணத் தோன்றுகிறது - என்றார். (ம-27)

# முல்லையின் அபிவிருத்திக்கு திட்டமிடல் சரியாக இல்லை!

## பொது அமைப்புகள் குற்றச்சாட்டு

**முல்லைத்தீவு, டிசெ. 17**

**முல்லைத்தீவில் சரியான திட்டமிடல்கள் இல்லாமையால் தொடங்கப்பட்ட அபிவிருத்திப் பணிகள் யாவும் இடைநடுவில் கைவிடப்பட்டுள்ளன என்று நகர பொது அமைப்புகள் குற்றஞ்சுமத்தியுள்ளன.**

அவை மேலும் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவிலுள்ள நீர்ஏந்து குளத்தை அபிவிருத்தி என்ற பெயரில் பொழுதுபோக்கு மையமாக மாற்றியமைக்க கடந்த 10 வருடங்களுக்கு முன் தூர்வையாக்கப்பட்டது.

ஆயினும் அவற்றின் பணிகள் முழுமைபெறாது தற்போது கைவிடப்பட்டுள்ளன.

அத்துடன் வட்டுவாகல் பாலம் புனரமைப்பு, வெளிச்ச வீடு மீள அமைத்தல் உள்ளிட்ட பணிகளும் கைவிடப்பட்டுள்ளன.

இதற்கான நிதி திரும்பிச் சென்றமையே இதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எனவே முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் கைவிடப்பட்டுள்ள வேலைத்திட்டங்களை சரியான திட்டமிடல்களோடு மீளத் தொடங்கி செயற்படுத்த வேண்டும் என்று பொது அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன. (ச-13)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** உறவினர்கள் மூலம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். சகோதரர்கள் குடும்ப விடயமாக உங்கள் யோசனையைக் கேட்டு வருவார்கள். முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். மனதில் ஏற்பட்டிருந்த குழப்பங்கள் நீங்கும். விற்பனை அதிகரிக்கும்.

**இடபம்:** எதிர்பாராத செலவுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. கடன் வாங்கவும் நேரிடும். மற்றவர்களிடம் பேசும்போது நிதானம் அவசியம். சங்கடங்கள் நீங்கும். சக வியாபாரிகளிடம் இணக்கமாக நடந்துகொள்ளவும். நன்மைகளை அதிகரிக்கும்.

**மிதுனம்:** மனதுக்கு மகிழ்ச்சி தரும் சம்பவம் நடைபெறும். உறவினர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைப்பதற்கு வாய்ப்புண்டு. மனவருத்தங்கள் நீங்கும். எதிர்பார்த்த காரியம் சாதகமாக முடியும்.

**கடகம்:** திடீர் செலவுகளும் ஏற்பட்டு கையிருப்பைக் குறைக்கும். உங்கள் ஆலோசனைக்கு மிகுந்த முக்கியத்துவம் கிடைக்கும். ஆதாயம் உண்டாகும். பிள்ளைகளின் விருப்பத்தை நிறை வேற்றுவீர்கள்.

**சிம்மம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும்.

**கன்னி:** புதிய முயற்சிகளைத் தவிர்த்துவிடவும். உறவினர்கள் வகையில் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும் என்பதால் பொறுமை அவசியம். இளைய சகோதரர்களால் உதவியும் உற்சாகமும் உண்டு. மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

**துலாம்:** காரியங்கள் அனுகூலமாகும். தேவையான பணம் கிடைக்கும். தாய்வழி மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். கணவன் ஆதாயம் உண்டாகும். வியாபாரத்தில் விற்பனை அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகளில் ஒரு முறைக்குப் பலமுறை யோசித்து ஈடுபடவும். உடல்நலனில் கவனம் தேவை. வீட்டுப் பராமரிப்புச் செலவுகள் ஏற்படும். உறவினர்களால் சில குழப்பங்கள் ஏற்படக்கூடும்.

**தனுசு:** அவப்பெயர் நீங்கும். நண்பர்களை தொடர்பு கொண்டு பேசுவீர்கள். தட்சிணாமூர்த்தி வழிபாடு தடைகளைத் தகர்க்கும். முக்கியமான முடிவுகள் சாதகமாகும், வியாபாரத்தில் மாற்றம் செய்து இலாபம் ஈட்டுவீர்கள்.

**மகரம்:** எதிரிகளின் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். எதிர்பாராத பணவரவு மகிழ்ச்சி தரும். ஆதாயம் கிடைக்கும். உங்கள் முயற்சிகளுக்கு ஆதரவு கிடைக்கும். முக்கியமான முடிவு எடுக்க உகந்த நாள்.

**கும்பம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். தாயிடம் கேட்ட உதவி கிடைக்கும். உடல் நலனில் கவனம் தேவை. சிலருக்கு எதிர்பாராத செலவுகளுடன் தேவையற்ற அலைச்சலும் ஏற்படக்கூடும்.

**மீனம்:** எதிலும் நிதானமாகச் செயற்படவும். சிலருக்கு தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். குடும்பத்தில் வீண்விவாதம் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் வருடாந்த விருதுகள் - 2023



வாழ்நாள் சாதனையாளருக்கான விருது
**நாகலிங்கம் பத்மசீலன்**



சிறந்த சுயாதீன ஊடகவியலாளருக்கான விருது
**இராமச்சந்திரன் சனத்**



பிராந்தியச் செய்தியாளருக்கான விருது
**ஐயன் கிருஷ்ணன்**



வருடத்தின் சிறந்த பணியாளர் மற்றும்
சிறந்த பக்கவடிவமைப்பாளருக்கான விருது
**ஆனந்த வேணி**



தனித்துவமான செய்திகளுக்கான விருது
**குணாளன் டிலீப் அமுதன்**



இளம் ஊடகவியலாளருக்கான விருது
**ஜெயச்சந்திரன் சுலக்சன்**



சிறந்த பத்தியெழுத்தாளருக்கான விருது
**றூபநாதன் றாஜப்பிரகாஷ்**



பல்துறை ஆளுமைக்கான விருது
**தங்கராஜசிங்கம் மயூரன்**



சிறந்த ஒப்புநோக்குநருக்கான விருது
**தவராஜா நாராயணன்**



சிறந்த உள்ளக ஒருங்கிணைப்பாளருக்கான விருது
**றாஜ்மோகன் தரணியா**



அர்ப்பணிப்பான நூலக ஆவணமாக்கலுக்கான விருது
**வீரசிங்கம் ரவீந்திரன்**

உதயன் குழுமத்தின் வருடாந்த விருது வழங்கும் வைபவமும் நிர்வாக இயக்குநரின் 70 ஆவது பிறந்ததின நிகழ்வும் நேற்று உதயன் அலுவலகத்தில் இடம்பெற்றன. இதன்போது சிறப்பான அடைவு மட்டங்களை வெளிப்படுத்தியோர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**TECHNICAL SUPPORT ENGINEERS - JAFFNA**



A unique and ambitious Software company based in Jaffna, Colombo, and London is seeking **3 Technical Support Engineers** to help support the team in Colombo while being able to kick start your IT career with on-the-job experience.

**Technical Support Engineers - Responsibilities**

~ Ask clients targeted questions to quickly understand the root of the problem.
~ Talk clients through a series of actions, either via phone, email or chat, until they've solved a technical issue.
~ Ensure all issues are properly logged.

**Requirements and skills**

~ HND in Information Technology or Degree in Computer Science or relevant field.
~ Excellent problem-solving and communication skills.
~ Good understanding of computer systems, mobile devices and other tech products.
~ Ability to diagnose and troubleshoot basic technical issues.

Please apply via email to **career@visualbusinessretail.com**
Closing Date: **31st DEC 2023**

**VBR Asia Pvt (Ltd)**
**255, KKS Road, Chunnakam,**
**Jaffna-Sri Lanka**

ஓம் விராட் விஷ்வப்பிரம்மனே நமஹ

**நான்காம் ஆண்டு நினைவஞ்சலி**

தோற்றம்
25 . 02 . 1963



மறைவு
30 . 12 . 2019

**அமரர் கலாநிதி ஜெயராமநாதன்**

திதி: பூர்வபக்க பஞ்சமி

எங்கள் குடும்பத்தின் குலவிளக்காய்
பண்பும் பாசமும் நிறைந்த ஒளி விளக்காய்
ஊரே போற்றும் உத்தமியாய்
தலைவனிற்கு தலைவியாய்
பார் போற்றும் அன்னையாய்
இல்லறத்தில் மருமகள்மாரிற்கு முன்னுதாரணமாய்
குலம் தழைத்துயர வளம் தரும் பேர்த்தியாய்
இறைபணியால் எமக்கோர் வழிகாட்டியாய்
நானிலம் போற்ற வாழ்ந்த அன்னையே
நான்காம் ஆண்டில் உம்பாதம் பணிகின்றோம்

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

இல.08,
கண்டுவில் வீதி,
சாவகச்சேரி.

உங்கள் பிரிவினால் துயருறும்
குடும்பத்தினர்

# கடும் மழை காரணமாக தபாலகத்தில் வெள்ளம்

## பேசாலையில் இந்தநிலை

மன்னார், டிசெ. 17

மன்னார் பகுதியில் பெய்துள்ள கன மழை காரணமாக பேசாலை தபாலகத்துக்குள் மழை வெள்ளம் தேங்கியுள்ளது. இதனால், மக்கள் தபாலகத்தில் தமது கடமைகளை நிறைவேற்ற முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

மன்னாரில் கடந்த சில தினங்களாக பெய்துவரும் கனமழை காரணமாக, பல தரப்பினரும் பல்வேறு பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளனர். குளங்கள் வான்பாய ஆரம்பித்துள்ளதால், குளங்களின் கீழ் உள்ளவர்கள் பாதுகாப்புக் காரணங்களுக்காக இடம்பெயர்ந்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (ம-60)



# சுழல் காற்றால் வீடுகள் சேதம்!

கிளிநொச்சி, டிசெ. 17

திடீரென ஏற்பட்ட சுழல் காற்றால் கிளிநொச்சி, கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 8 வீடுகள் வரையில் சேதமடைந்துள்ளன.

அத்துடன் வாழ்வாதாரத்துக்காக வளர்க்கப்பட்ட பயன்தரு மரங்கள் அழிவடைந்துள்ளதுடன், 30 க்கும் மேற்பட்ட கோழிகளும் இறந்துள்ளன.

இதுதொடர்பில் இடர்முகாமைத்துவ பிரிவினருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது என்று கண்டவளை பிரதேச செயலாளர் தெரிவித்துள்ளார். (ச-113)

# அதிகாரம் இதழ் -2 நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், டிசெ. 17

'அதிகாரம் இதழ்- 2' நூல் வெளியீட்டு நிகழ்வு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயத்தில் நடைபெற்றது.

அரசறிவியல் மன்ற தலைவி செல்வி பா.அகல்யா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராம், சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்வி வலயத்தின் சமூக விஞ்ஞான உதவிக் கல்விப் பணிப்பாளர் லதிக்கி றேஸ் விக்ரர் ஜெயக்குமார் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-27)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# ஒன்றுபட்டு ஆதரிப்பீர்!


ஈழத்தமிழர்களின் இனப்பிரச்சினைக்கு சுயநிர்ணய அடிப்படையிலான தீர்வுதான் அவசியம் என்று அழுத்தம் திருத்தமாக வலியுறுத்தியுள்ளார் அமெரிக்கக் காங்கிரஸின் உறுப்பினர் டொன்டேவிஸ். இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக இப்போதும் அடக்குமுறைகள் தொடர்கின்றன, ஆதலால்தான் தமிழர்களுக்கு சுயநிர்ணயத்தின் அடிப்படையிலான தீர்வு இப்போது தேவையாகவுள்ளது என்றும் அவர் தன் கருத்தை - நிலைப்பாட்டைப் பதிவு செய்திருக்கின்றார். நல்லது.


ஈழத்தமிழர்களுக்கு அமெரிக்கக் காங்கிரஸினரோ அல்லது கனேடிய நாடாளுமன்றத்தினரோ ஆதரவைத் தெரிவிப்பது இதுவொன்றும் முதல்தடவையல்ல. 2009 ஆம் ஆண்டு விடுதலைப்புலிகளின் ஆயுதங்கள் மௌனிக்கப்பட்ட காலம்முதல் இந்தக் கோரிக்கையை - வலியுறுத்தல்களை - அவர்கள் முன்வைத்தே வந்திருக்கின்றார்கள். இந்த விடயத்தில் கனடா ஒருபடி மேற்சென்று' இலங்கையில் இறுதிப்போரின்போது தமிழர்கள் இனப்படுகொலைக்கு உள்ளாக்கப் பட்டனர்' என்று தீர்மானமும் நிறைவேற்றியிருக்கின்றது. கனடாவுக்கு அடுத்தபடியாக அமெரிக்கப் பிரதிநிதிகள்தான் அன்றுமுதல் இன்றளவும் குரல்கொடுத்து வருகின்றனர். ஆனால், அவர்களின் இந்தக் குரலால் ஈழத்தமிழர்களுக்காக எதையாவது சாதிக்க முடிந்ததா? என்ற கேள்வியும் இங்கெழுவது தவிர்க்க முடியாததாகின்றது.

தமிழர்களுக்கு எதிரான நெருக்குவாரங்கள் தொடர்ந்துகொண்டுதான் இருக்கின்றன, தமிழர்களின் வாழ்விடங்களில் அவர்களின் தாயகத்தில் சிங்கள - பௌத்த பேரினவாதத் திணிப்பு நாளுக்குநாள் வேகம்பெற்றுக்கொண்டுதான் இருக்கின்றது, தமிழர்களின் காணிகள் அடாத்தாகக் கையகப்பட்டுக் கொண்டேதான் இருக்கின்றன, அரசியல் கைதிகள் இன்னமும் சிறைகளில்தான் இருக்கின்றார்கள், பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழான கைதுகள் இன்னும் தொடர்கின்றன. எனில், அமெரிக்க - கனேடியப் பிரதிநிதிகளின் கொழும்புக்கு எதிரான இந்த நிலைப்பாடு எத்தகையது? இவர்களின் எதிர்ப்பால் கொழும்பின் மீது கனதியான தாக்கத்தைச் செலுத்தமுடியவில்லை என்றால், இந்த எதிர்ப்பின் பாற்பட்ட பயன்தான் என்ன?

இந்த இடத்தில்தான், 'வல்லரசுப் பிரதிநிதிகளின்' ராஜதந்திரத்தின் பலவீனம் பட்டவர்த்தனமாகின்றது. சர்வதேசத்தில் தனக்கிருக்கும் எதிர்ப்பைச் சமாளிக்க, தனக்கு ஆதரவானவர்களை ஒன்றிணைக்கும் போக்கில் கொழும்பு ஒப்பாரும் மிக்காரும் இல்லாநிலையிலேயே செயற்பட்ட; செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது. அதேபோல், கொழும்புக்கு எதிரான - ஈழத்தமிழர்களின் ஆதரவு மனோநிலையில் உள்ள இத்தகைய பிரதிநிதிகள் நாடுகளைக் கடந்து கட்சிகளைக் கடந்து ஒன்றுபட்டு ஒரு பொதுப் பொறிமுறையூடாக ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாகக் குரல்கொடுத்திருந்தால், அ ந்தக் குரல் இலங்கையால் கேட்கப்படாவிட்டாலும் சர்வதேசத்தின் அழுத் தத்துக்கு உள்ளாகும் விடயமாக அமைந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

ஈழத்தமிழர்களுக்கு நீதிகேட்பவர்கள் முதலில், எமக்கு ஆதரவான 'வல்லரசுப் பிரதிநிதிகளின்' குரலை ஒன்றுசேர்க்கவேண்டும். அவர்கள் தம் எதிர்ப்பை நிலைப்பாட்டை பொதுக்கட்டமைப்புக்குள் நின்றுகொண்டு வெளிப்படுத்த உரிய வழிவகைகளை ஏற்படுத்தவேண்டும். இதற்கான ஆரம்பப் படிநிலை கொஞ்சம் கடினம்தான். ஆனால், ஆரம்பித்தால் அதன் செயற்பாட்டு வேகம் வேறு ரகத்தில் இருக்கும். அதனால் ஏற்படும் விளைவுகளும் தாக்கங்களும் தனித்து நிற்கும். செய்வார்களா?



# சுண்ணக்கல் ஆய்வுக்கு மக்கள் முட்டுக்கட்டை!

## திருப்பிச்சென்ற அதிகாரிகள்
## பொன்னாவெளியில் சம்பவம்

**கிளிநொச்சி, டிசெ. 17**

**கிளிநொச்சி, பூநகரிப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பொன்னாவெளிக் கிராம அலுவலர் பிரிவில், சுண்ணக்கல் அகழ்வுப் பணிகளை முன்னெடுக்கும் வகையில் ஆய்வுகளை மேற்கொள்ளச் சென்ற கனியவளத் திணைக்கள அதிகாரிகள் உள்ளிட்டோரை அந்தப் பகுதி மக்கள் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தித் திருப்பி அனுப்பியுள்ளனர்.**

மேற்படி சுண்ணக்கல் அகழ்வால் தமது கிராமத்தின் இருப்பே இல்லாமற்போய்விடும் என்று தெரிவித்தே அவர்கள் அதிகாரிகளைத் திருப்பியனுப்பியுள்ளனர். சுண்ணக்கல் அகழ்வுக்கு எதிராக பொன்னாவெளி மக்கள் அண்மைக் காலமாகத் தொடர் போராட்டங்களை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

# வடமராட்சியில் டெங்கு தீவிரம் 2 வாரங்களில் 78 பேர் பாதிப்பு!

யாழ்ப்பாணம், டிசெ. 17

வடமராட்சியில் டெங்குத் தொற்று தீவிர மடைந்துள்ளது. கடந்த இரண்டு வாரங்களில் 78 பேர் டெங்குத் தொற்றுக்கு உட்பட்டுள்ளனர் என்று பருத்தித்துறை ஆதார மருத்துவமனையின் தகவல்கள் தெரிவிக்கின்றன. மழை நிலை காரணமாக வடமராட்சிப் பிரதேசத்தில் டெங்குக் காய்ச்சலால் பாதிக்கப்படுபவர்களது எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளது. கடந்த 13ஆம் திகதி மட்டும் 19 பேர் டெங்குத் தொற்றுடன் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர். (ச-100)

## நாளை

18.12.2023
**திங்கட்கிழமை**
**டிசெம்பர் 02**
சுபநேரம் : 12.23 - 01.53
ராகுகாலம் : 07.53 - 09.53

**விநாயகர் சஷ்டி விரதம்**

## நாளொரு நல்வார்த்தை

**நீங்கள் வெற்றியாளராக இருக்க அழகான முகமோ, வலிமையான உடலோ தேவையில்லை; மாறாக திறமைமிக்க மனமும், செயற்படும் திறனும்தான் தேவை**

**- ரோவன் அற்கின்சன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைகுண்ட ஏகாதசி திருவிழா ஆரம்பம்

வரலாற்றுச் சிறப்புமிக்க பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலய மார்கழி மாத வைகுண்ட ஏகாதசித் தின திருவிழா நேற்றுமுன்தினம் வெள்ளிக் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. தொடர்ந்தும் பத்து நாட்கள் திரு விழா நடைபெறவுள்ளது. (ரி-66)

## ஆமை இறைச்சியுடன் யாழில் ஒருவர் கைது


யாழ்ப்பாணம் - பாஷையூர் பகுதியில் ஆமை இறைச்சியுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்டப் பொலிஸ் புல னாய்வுப் பிரிவு பொறுப்பதிகாரிக் குக் கிடைத்த இரகசி யத் தகவலின் அடிப் படையில் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட் டது. சந்தேகநபரிட மிருந்து 6 கிலோ 55 கிராம் ஆமை இறைச்சி மீட்கப்பட் டது. (ம-20)



# மரண அறிவித்தல்

பிறப்பு 22 . 12 . 1961



இறப்பு 16 . 12 . 2023

## இராசையா வேலாயுதம்

சாயுடை மாவிட்டபுரத்தை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா வேலாயுதம் அவர்கள் நேற்று (16.12.2023) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா சின்னம்மா தம்பதியரின் இளைய மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை செல்லாச்சி தம்பதி யரின் அன்பு மருமகனும், விமலாதேவியின் அன்புக் கணவரும், அஜந்தினி, கிரிசாந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவரூபன் அவர்களின் மாமனாரும், திவ்யரூபினி, தனரூபி ஆகியோரின் பேரனும், தெய்வராணி, தவமணிதேவி, கதிரமலை மற்றும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி, சண்முகநாதன், ஆறுமுகம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சத்தியபாமா (பிரான்ஸ்), கேதாரேஸ்வரி, ஞானேஸ்வரி மற்றும் காலஞ்சென்ற முருகையா, சிவஞானம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.12.2023) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மாவிட்டபுரம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்று கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

தொ.பே.இல:077 466 7603

(CS 27394) A-1

# மரண அறிவித்தல்

தோற்றம் 10 . 05 . 1945



மறைவு 15 . 12 . 2023

## சட்டநாதன் சங்கரநாதன்

அரியாலை மேற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சட்டநாதன் சங்கரநாதன் கடந்த (15.12.2023) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சட்டநாதன் - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான தாதபிள்ளை - தங்கம்மா தம்பதியரின் மூத்த மருமகனும், சிவபாக்கியவதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சண்முகநாதன், பூநாதன் மற்றும் புஸ்பராணி, செல்வராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற அருளம்பலம், நடேசபிள்ளை, அரியரட்ணம், தர்மரட்ணம் மற்றும் இந்திராணி, யோகம்மா, செல்வரட்ணம், உதயரட்ணம், சந்திரகலா, அசோகரட்ணம் ஆகியோரின் மைத்துனரும், சசிதா (VTA போதனாசிரியர் - வல்வெட்டித்துறை), சுஜாதா, நிமால்சங்கர் (பிராந்திய முகாமையாளர்- ஊவா மாகாணம் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்), விமல்சங்கர் (சிரேஸ்ர விரிவுரையாளர் - யாழ்ப்பாண பல்கலைக்கழகம்), ஜெனில்சங்கர் (ஆசிரியர் - யா/சென் ஜேம்ஸ் மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், யோகேஸ்வரன் (யாழ். மாநகர சபை), பிரசாந்தி, மேகலப்பிரியா, கௌசிகா ஆகியோரின் மாமனாரும், சந்துரு, கீர்த்தனா, ஜதீஸ்மன், சங்கரர், சங்கீதன், எடிஷனன், மோசிகா, பர்மிகா, கிருத்திக், லக்ஸ்மன், யாதவன், மஹதிகா, கிருஸ்டிக் ஆகியோரின் பேரனும், சத்விக் இன் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.12.2023) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளு மாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 27398) A-1


# வீடு வாடகைக்கு

யாழ். நகரில் பிரபல பாடசாலைகள், தனியார் கல்வி நிலையங்களுக்கு அருகாமையில் இருவர் தங்கக் கூடியதாக வீட்டின் ஒரு பகுதி வாடகைக்கு உண்டு. சைவ உணவு உண்பவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும். பூசகர்கள், மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தொடர்பு : 076 807 9283

NORTHERN UNI
EXPERIMENT. EXPERIENCE. EXCEL.

NEED ACCOMMODATION !

SLIIT NORTHERN UNI யில்
கல்வி பயிலும் மாணவர்களுக்கு தங்குமிட வசதி தேவைப்படுகிறது
எனவே யாழ்ப்பாணம் கந்தர்மடத்திற்கு அருகாமையில்
உள்ள வீடுகள் பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ
வாடகைக்கு வழங்குபவர்கள்
எங்களுடன் பதிவு செய்து கொள்ளலாம்

தொடர்புகளுக்கு
0761412881 , 0771471471

# விசேட வகுப்பு

தரம் 01 முதல் தரம் 05 வரையான தனி மற்றும் குழு வகுப்புக்கள் தத்தம், பொருத்தமான இடத்தில் கற்பிக்கப்படும் விசேட புலமைப்பரிசில் வினாத்தாள் வகுப்பு தரம் 6 தொடக்கம் 11 வரையான கணித வகுப்புக்களுக்கும்

தொடர்புக்கு : ஆசிரியர் (NDT)
076 155 4532

# ஆரம்பகால திருமண சேவை

1. மணமகள் தேவை (லண்டன், சீதனம் எதிர்பார்க்கப்படாது) (V)
2. (V) (அவுஸ்திரேலியா, 12 இல் செவ்வாய்)

எம்மிடம் மேலும் பல உள்நாட்டு, வெளிநாடு ஜாதகக்குறிப்புகள் உள்ளன.

தொடர்பு: 077 528 9851


# மரண அறிவித்தல்

## சின்னத்துரை நவரத்தினராசா



கோண்டாவில் கிழக்கை பிறப்பிட மாகவும் புன்னாலைக்கட்டுவன் வடக்கை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்துரை நவரத்தினராசா நேற்று (16.12.2023) சனிக்கிழமை கால மானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - அன்னபூரணம் தம்பதி யரின் மூத்த புதல்வனும், காலஞ் சென்றவர்களான மூத்ததம்பி - பொன்னம்மா தம்பதியரின் மருமக னும், கனகம்மாவின் அன்புக் கண வரும், காலஞ்சென்ற சிவகுமார் மற்றும் உயதயகுமார், காலஞ்சென்ற செல்வகுமார் தயாளினி (Holland) ஆகியோரின் அன்புத் தந்தையும், மிது சாளினி, பிறிநாத், சாருசன் ஆகி யோரின் பேரனும், காலஞ்சென்ற தவமணிதேவி, சிறிஸ்கந்தராசா, வசந்தகுமாரி, விமல்ராணி, சாந்தகுமாரி, கிறிஸ்ணகுமாரி வனசகுமாரி, வைரவநாதன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.12.2023) திங்கட்கிழமை கோண்டாவில் அம்மா முதியோர் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோண்டாவில் கட்டையால் மயானத்தில் நண்பகல் 12.00 மணியளவில் தகனம் செய்யப்படும்.

இவ்வறித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
மகன் உதயகுமாருக்காக
நிர்வாகம்- அம்மா முதியோர் இல்லம்.

(CS 27256) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்



பிறப்பு 08 . 04 . 1965 — இறப்பு 15 . 12 . 2023

### மயில்வாகனம் மகாராசா (மது)

மட்டக்களப்பு கிரானை பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் இருபாலையை வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் மகாராசா (மது) (ஜோதி இன்டஸ்ரி மில் உரிமையாளரும், முன்னாள் The Halo Trust உறுப்பினரும்) அவர்கள் நேற்று முன்தினம் (15.12.2023) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மயில்வாகனம் மற்றும் வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சிவகுருநாதன் இராசநாயகி தம்பதியரின் அன்பு மருமகனும், ஜெயசிறிராணியின் (ஜெயா) பாசமிகு கணவரும், மோகனவர்மன், பிரியவர்மன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான செல்வராசா, சற்குணராசா மற்றும் விக்னேஸ்வரராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.12.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இருபாலை நொச்சிக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்.
076 6688 244

(CS 27376) A-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 13 03 1945 — மறைவு 12 12 2023



அமரர்.

### திரு. கனகரத்தினம் செவ்வந்திநாதன்

(விவசாய ஆராய்ச்சி அலுவலர்)

யாழ்ப்பாணம் வேலணை கிழக்கை பிறப்பிடமாகவும், தெஹிவளையை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. கனகரத்தினம் செவ்வந்திநாதன் அவர்கள் 12.12.2023 செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கனகரத்தினம் பாக்கியலட்சுமி தம்பதிகளின் அன்புமகனும், காலஞ்சென்ற கனகரத்தினம் பரிமளகாந்தி தம்பதிகளின் அன்பு மருமகனும், ஸ்ரீமதிதேவியின் அன்புக்கணவரும், மீனாருளினி (இலண்டன்), கோகுலன் (சிங்கப்பூர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவரூபன் (இலண்டன்), தர்சிகா (சிங்கப்பூர்) ஆகியோரின் மாமனாரும், சிவானி, கீத்தன், கவின், ஆகியோரின் பாசமிகு பேரனும், திருமணி, தவமணி, சட்டநாதன், காலஞ்சென்றவர்களான மனோன்மணி, ரகுநாதன், மகேந்திரநாதன் ஆகியோரின் அன்புச்சகோதரனும், அருள்அன்னதேவி, தயாநிதி, ஸ்ரீகுமார், கிரிஜா, காலஞ்சென்றவர்களான செல்வராஜா, நாகேஷ், ஜெயலஷ்மி, சிதம்பரப்பிள்ளை ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் மகிந்த மலர்ச்சாலையில் 16.12.2023 சனிக்கிழமை காலை 9.30 மணி முதல் மாலை 4.00 மணி வரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் 17.12.2023 ஞாயிற்றுக்கிழமை காலை 11.30 மணியளவில் ஈமக்கிரியைகள் நடைபெற்று மதியம் 2.00 மணியளவில் கல்கிசை பொதுமயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் : குடும்பத்தினர் தொ.இல: 077 343 6262 078 643 0847


## கஜமுக சங்காரம்

பிள்ளையார் ஆலயங்களில் கஜமுக சங்காரம் இன்று இடம்பெற வுள்ளது. கடந்த 21 தினங்கள் இடம்பெற்று வந்த பிள்ளையார் கதை படிப்பு இன்று நிறைவடையும் நிலையில் கஜமுக சங்காரம் இடம்பெற வுள்ளது. இதேவேளை நாளை திருவெம்பாவை உற்சவம் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும்.

(ஒ-9)

# மரண அறிவித்தல்

## சின்னையா தனலட்சுமி (செல்லம்)



தோற்றம் 05.03.1944 — மறைவு 16.12.2023

புங்குடுதீவு 6 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், கனடா மொன்றியலை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா தனலட்சுமி அவர்கள் நேற்று (16.12.2023) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயம்பிள்ளை சின்னையா அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கந்தையா மற்றும் சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகளும், கிருஷ்ணபிள்ளை (ஜேர்மனி), மங்கையற்கரசி (கனடா), காலஞ்சென்ற சற்குணநாதன் மற்றும் ஜெயலட்சுமி (கனடா), ஸ்ரீகாந்தன் (கனடா), வரதலட்சுமி (இலங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற நாகேஸ்வரி, காலஞ்சென்ற தங்கராசா மற்றும் புஸ்பமலர், காலஞ்சென்ற பசுபதிப்பிள்ளை மற்றும் மல்லிகா, கனகலிங்கம் ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், ஞானசேகரம் (ஞானம்), திலகமலர் (மலர்), ரஞ்சிதமலர் (ரஞ்சி), சந்திரசேகரம் (சந்திரன் - Exotic கடை - உரிமையாளர்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சுஜாதா, அன்னலிங்கம், ஏகாம்பரநாதன் (பரம்), சுகந்தா ஆகியோரின் அன்பு மாமியாரும், அபிராம், நிதர்சனா, ஷிராம், விதுஷா, ஆர்த்தி, துக்ஷா, நிலுப்குமார், தர்ஷிஸ், துளசிகன், சரண்யா, சாரங்கன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ரேணா, ஆரவ் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் தொடர்பான விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

தொடர்புகளுக்கு:

| | | |
|---|---|---|
| ஞானம் | - மகன் | - 514 661 1009 |
| மலர் | - மகள் | - 514 696 5524 |
| ரஞ்சி | - மகள் | - 514 696 3734 |
| சந்திரன் | - மகன் | - 514 758 7279 |
| வசந்தா | - சகோதரி | - 077 618 4407 |
| புஸ்பமலர் | - மச்சாள் | - 077 695 0684 |

தகவல்:
குடும்பத்தினர்
851, நாவலர் வீதி,
அரியாலை.

(cs.27386) (N.1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

எமது விநியோக நிறுவனத்திற்கு காலணி விற்பனை விநியோகத்தில் அனுபவமுள்ள அல்லது விற்பனை விநியோகத்தில் அனுபவமுள்ள பிரதிநிதி தேவை.
கவர்ச்சிகரமான சம்பளமும், தகுந்த ஊக்கத்தொகையும் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு : 076 576 3523

## மருந்தகவியலாளர் (pharmacist) தேவை

மருந்து விற்பனை நிலையம் ஒன்றிற்கு மருந்தகவியலாளர் (pharmacist) தேவை. சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.
(ஓய்வு பெற்றவர்களும் விரும்பத்தக்கது)

தொடர்பு: 076 252 2349


# துயர் பகிர்வு

எமது ஆலயத்தின் முன்னாள் அறங்காவலர்களில் ஒருவரான **அமரர் சரவணமுத்து ஸ்ரீநிவாசன்** அவர்களின் துணைவியாரும், தற்போதைய அறங்காவலர்களில் ஒருவரான **ஸ்ரீநிவாசன் பிரதீபன்** அவர்களின் அன்புத் தாயாருமாகிய



**அமரர் திருமதி தவனேஸ்வரி ஸ்ரீநிவாசன்**

அவர்கள் (13.12.2023) அன்று இறைபதம் எய்தினார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினர் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல வண்ணார்பண்ணை காட்டுத்தறை அருள்மிகு அம்பலவாண விக்னேஸ்வரப் பிள்ளையாரை வேண்டி நிற்கின்றோம்.


**வண்ணார்பண்ணை காட்டுத்தறை**
**அருள்மிகு ஸ்ரீ அம்பலவாணர் விக்கினேஸ்வரப் பிள்ளையார் கோவில்.**
**இல.07, ஒடை ஒழுங்கை, யாழ்ப்பாணம்.**

**முகாமைத்துவ சபையினர்**

(CR 41337) S-1

# நீங்கா நினைவுகளில் ஓராண்டு...

தோற்றம்
21.10.1953



மறைவு
27.12.2022

**அமரர் யோகேஸ்வரன் ஜெயக்குமார்**

**(ஓய்வுநிலை உதவிப்பதிவாளர் - நலச்சேவைகள் கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், உறுப்பினர் - 6ஆம் வட்டாரம், சாவகச்சேரி நகர சபை)**

**திதி:17.12.2023**

எம் வாழ்வில் இருள்மேகம் சூழ்ந்து ஆண்டு ஒன்று ஆகின்றதப்பா.
எம் வாழ்வில் நாமுயர அல்லும் பகலும் அயராது உழைத்தீரே
நற்பண்புகள் யாவற்றையும் அனுபவமாய் ஊட்டி வளர்த்தீரே
சப்பச்சி பிள்ளையாரின் தீவிர பக்தர் நீவிர் பிள்ளையார்கதை நாளில்
அவனடி சேர்ந்தீரே
நீவிர் போதித்த அறவழியில் உமை மனதிருத்தி பயணிப்போம்
கடவுளாய் எம்முடன் கூடவே நீவிர் வருவதை ஒவ்வொரு நொடிப்பொழுதும்
உணர்கின்றோம் அப்பா.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**தாமோதரம்பிள்ளை வீதி,**
**சாவகச்சேரி.**

**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்

**பிறப்பு**
**02.05.1945**

## குணரட்ணம் தங்கமலர்

**இறப்பு**
**15.12.2023**



பளையைப் பிறப்பிடமாகவும் உழவனூர் புன்னைநீராவியை வசிப்பிடமாகவும் கொண்ட குணரட்ணம் தங்கமலர் நேற்றுமுன்தினம் (15.12.2023) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான மகாலிங்கம் நல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், குணரட்ணம் அவர்களின் அன்பு மனைவியும், சிவாஜினி (ஆசிரியை - கலவெட்டித்திடல் நாகேஸ்வரா வித்தியாலயம்), சிறீதரன் (ஜேர்மனி), மாலினி (கனடா), சுகந்தினி (கனடா), ராமேஸ்கரன் (ஜேர்மனி), குணேஸ்தரன் (அவுஸ்திரேலியா), யோகவதனி (பிரமந்தனாறு), குவேந்தினி (ஆசிரியை - கிளி / கண்டா வளை மகாவித்தியா லயம்), வினோதரன் (பிரமந்தனாறு) ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவராசா (அமரர்), காஞ்சனா (ஜேர்மனி), நடராசா (பிரமந்தனாறு), ஸ்ரீகுமார் (கனடா), யசோதா (ஜேர்மனி), யோகேஸ்வரி (அவுஸ்திரேலியா), யோகராசா (பிரமந்தனாறு),. யோகேஸ்வரன் (தோமஸ் - முரசு மோட்டை), சுபாஜினி (பிரமந்தனாறு) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், அபிலாஸ், ஜனகா, துஸ்யந்தன், அபிநாஸ், ஷாமிலா, அபிசேக், கௌதமன், அபிலாஸ், சாமந்தி, ஆசிக்கா, அஸ்விற்றா, கர்ணன், பிரியன், ஷாகித்தியா, தர்ணி, தனோஜன், ஷரண்யா, சோபனன், கோபிசன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.12.2023) திங்கட்கிழமை இல.96/08, பிரமந்தனாற்றில் அமைந்துள்ள அவரது மகனது இல்லத்தில் முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக் காக பிரமந்தனாறு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(cr .41338) (N.1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

யாழ் K.K.S வீதியில் தட்டார் தெரு சந்திக்கு அண்மையில் K.K.S ரோட் முகப்புடன் 10 பரப்பில் அமைந்த மாடி கட்டடமும். கொழும்பு வெள்ளவத்தை விவேகானந்தா ரோட்டில் 6 பேர்ச்சில் அமைந்த மாடி வீடும் காணியும் விற்பனைக்குண்டு

தொடர்பு: 077 723 2535

## காணி விற்பனைக்கு உண்டு

பருத்தித்துறை 1ஆம் கட்டையில் பிரதான வீதிக்கு அருகாமையில் அமைந்துள்ள 2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. விலை பேசித் தீர்மானிக்கலாம்.

தொடர்பு: +94 776096650 (Whatsapp call மட்டும்)

## தேவை

யாழ் நகரில் போன் சொப் இக்கு :

- விற்பனையாளர்,
- திருத்துனர்

**பழக விரும்புவோர், வயது 18 - 22**
**சம்பளம் - 25000 - 30000**
**இருபாலாரும்**

தொடர்பு: 074 109 5649

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கலட்டி சந்திக்கு அருகாமையில் 1 ½ பரப்பு காணி மூன்று பக்கமும் மதில் கட்டப்பட்டு நாலாவது பக்கம் தகர வேலியுடன் விற்பனைக்கு உண்டு

தொடர்பு : 076 292 0303

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் **இந்துக் கல்லூரி. மனோகரா தியேட்டர்** என்பவற் றிற்கு அருகாமையில் 6 1/2 பரப்பு காணி பழைய வீட்டுடன் விற்பனைக்கு உண்டு. 3, 2, 1 1/2 பரப்பாக பிரித்தும் விற்கப்படும்.
தரகர்கள் தேவையில்லை.

077 034 7277
075 837 7576

## வீடு காணி விற்பனை

கிளிநொச்சி உதயநகர் மேற்கு 4ஏக்கர் காணியும் வீடும் கடையும் விற்பனைக்குண்டு. (டிப்போ சந்தியிலிருந்து 2Km)

தொடர்பு: 076 851 9226

## வேலை வாய்ப்பு

PickMe Taxi நிறுவனத்தில் Sales Executive வேலை செய்யக்கூடியவர் தேவை (Jaffna Branch)

077 473 7737, 076 010 6139

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவகுலம்.(V) 1986 சித்திரை கிரகபாவம். 14 1/4. செவ்வாய் 2இல். 2ம் பாதம். சுயதொழில் செய்யும் மணமகனுக்கு மணமகள் தேவை.

தொடர்பு: 0775470631

## விற்பனைக்கு

ஸ்கூட்டிபெப், சுப்பர்கப் - 50 ஆகிய மோட்டார் சைக்கிள்களும் தென்னங்கன்று, செவ்வாழை குட்டி. கப்பல்வாழை குட்டி என்பன விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 656 6508

## விற்பனைக்கு

தென்னங்கன்று, மாங்கன்று, தேசி, தோடை, ஈரப்பலா, ஒட்டுபலா, கயூ, கொய்யா, மாதுளை, கமுகு, ஜம்பு, பசன்புறுட், ரகன் புறுட், செவிளை தென்னை, விலும்பி நெல்லி, முருங்கன், பப்பா, டொமினேசி மா, அல்போன்சா மா, கோப்பி, பட்டர்புறுட், றம்பிட்டான், கறுவா, கராம்பு, மங்குஸ்த்தான், ஏலக்கா, சீதா, அன்னமுன்னா, நாவல், இலுப்பை, பாலை, முதிரை, வாகை, சவுக்கு, தேக்கு, மலைவேம்பு, ஊர்வேம்பு, சித்திரவேம்பு, சமண்டலை, கருங்காளி, காயா கொண்டல்-கொன்றை, நாகமரம், அன்னாசி, பொக்ஸ்பிரல், றெட்பாம், கேவி, கொழும்பு வெற்றிலை, மஞ்சள், இஞ்சி, மிளகு மேலும் பல இன பூங்கன்று வகை, சாடி வகை, துளசி மாடம் ஐந்தூரியம் விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு: நியூ லங்கா பாம்**
**பலாலி வீதி, ஊரெழு மேற்கு.**
**பிள்ளையார் கோயில் வீதி,**
**கணேசா பாடசாலை அருகில்**
**077 612 9343**

**நியூ லங்கா பாம்**
**கிளை:**
K.K.S. வீதி, இணுவில்

## வட இலங்கைச் சங்கீத சபை

### பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோருதல் -2024

வட இலங்கைச் சங்கீத சபையின் 2024 ஆம் ஆண்டுக்கான தரம் 1 தொடக்கம் 6 தரம் வரையான பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் 17.12.2023 ஆம் திகதி முதல் கோரப்படுகின்றன.

விண்ணப்பப்படிவம், அறிவுறுத்தல்கள் ஆகியவற்றை வட இலங்கைச் சங்கீத சபையின் www.ncomsjaffna.com எனும் இணையத்தளத்தில் பதிவிறக்கம் செய்து விண்ணப்பிக்க முடியும்.

**விண்ணப்பிப்பதற்கான முடிவுத் திகதி - 17.01.2024**

17.01.2024 தொடக்கம் 2020, 2023 ஆம் ஆண்டுக்கான கலாவித்தகர் பரீட்சைகள் நடைபெறும்.

குறிப்பு : 2023 ஆம் ஆண்டு நடைபெற்ற பரீட்சையில் சித்தியடைந்த பரீட்சார்த்திகளின் பெறுபேறுகளை எமது இணையத்தளத்தில் பார்வையிட முடியும்.

தலைவர், வட இலங்கைச் சங்கீத சபை
மருதனார்மடம் - சுன்னாகம்

## ப்ரீமியர் கொன்ஸ்டருக்ஷன் மைன்டேனன்ஸ்

Premier Construction & Maintenance (Pvt) Ltd



அழகான நேர்த்தியான Kitchen Pantry, Bathroom and Room Design and Fittings கவர்ந்திழுக்கும் Shop Design and Fittings

077 763 9299

(cs.27975) (N.1)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




பண்டார நாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில்
**14.12.2023 அன்று சட்டமாணி பட்டம்** பெற்ற

**பாலரட்ணம் சிவபாலன்**

அவர்களை பாராட்டுவதுடன் அவர் மேன் மேலும் பட்டங்கள் பெற்று சிறப்புற வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
**ரஞ்சனாஸ் ரெக்ஸ்**
**சாவகச்சேரி**
**மாமா, மாமி**
**மச்சான் மார் மருமக்கள்**

## ஆண் பராமரிப்பாளர் தேவை

ஊரிக்காடு, வல்வெட்டித்துறையில் ஐந்து வருடங்களிற்கு மேலாக இயங்கி வருகின்ற “வல்வை முதியோர் இல்லத்திற்கு” முதியோரை பராமரிப்பதில் அனுபவமுள்ள ஆண் பராமரிப்பாளர் தேவை.

தொடர்புகளுக்கு : 077 810 6857
077 154 2067
021 226 5551

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 01.02.1933 — மறைவு 27.12.2022

**அமரர் வேலுப்பிள்ளை கயிலாயபிள்ளை**

**திதி: பூர்வபக்க பஞ்சமி**
(ஓய்வுபெற்ற பொது முகாமையாளர் கொடிகாமம் ப.நோ.கூ.சங்கம்)

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
அன்பின் திருவுருவாய் எமக்கு வழிகாட்டியாய்
உற்றார், உறவினர், நண்பர்களுக்கு இனியவனாய்
வாழ்ந்து எம்மை விட்டு பிரிந்து ஆண்டு ஒன்று
மறைந்ததையா எம் உள்ளங்களில் என்றும்
நிலைத்திருக்கின்றீர்கள் உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

பார்வதி வாசம்
[illegible]
கொடிகாமம்.

**குடும்பத்தினர்**
077 900 9420, 021 205 0626

## சுகாதார சீர்கேடு தங்கநகத்துக்கு சீல்

கிளி., டிசெ. 17

கிளிநொச்சி பரந்தன் பகுதியில் நீண்ட கால மாக இயங்கி வந்த பிரபல தங்ககம் ஒன்றின் கழிவு நீர் சீராக வெளியே றாமை மற்றும் சுகாதார நடைமுறையைப் பேணாமை ஆகிய குற்றச்சாட்டில் திடீர் சுற்றிவளைப்பை மேற்கொண்ட பொது சுகாதார அதிகாரிகளால் குறித்த தங்ககத்துக்கு 14நாட்கள் சீல் வைத்துள்ளனர்.

நீதிமன்றக் கட்டளை பணி பொது சுகாதார அதிகாரிகளால் தண்டப் பணமும் ஒரு லட்சம் தண்டப்பணமும் 14நாள்கள் தற்காலிக தடையும் விதிக்கப்பட்டது. (ரி-113)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் வருடாந்த விருதுகள் - 2023



சிறந்த சந்தைப்படுத்தல் உத்தியோகத்தருக்கான விருது
**தியாகராஜா மயில்வாகனம்**



சிறந்த வாடிக்கையாளர் சேவைக்குரிய விருது
**பத்மநாதன் சஞ்சீவன்**



சிறந்த வெளிக்கள உத்தியோகத்தருக்கான விருது
**சிவராஜா நிரஞ்சன்**



சிறந்த அச்சியந்திர தொழில்நுட்பவியலாளருக்கான விருது
**மகேந்திரன் சுரேந்திரன்**



விநியோக உத்தியோகத்தருக்கான விருது
**பசுவன் சுதர்சன்**



சிறந்த வரைகலை வடிவமைப்புக்கான விருது
**கிருபாகிரி சூரியகுமார்**



சிறந்த அச்சிடல் இணைப்பாளருக்கான விருது
**மகாலிங்கம் மதிவதனன்**



சிறந்த விநியோகஸ்தருக்கான விருது
**சுப்ரமணியம் சுகந்தன்**



சிறந்த விநியோக ஒருங்கிணைப்பாளருக்கான விருது
**விமலேந்திரன் கபில்ராஜ்**



சிறந்த கணக்கியல் உத்தியோகத்தருக்கான விருது
**செல்வராணி அம்பலவாணர்**



சிறந்த கிளை அலுவலக உத்தியோகத்தருக்கான விருது
**வைஷ்ணவி ரவீந்திரன்**



அர்ப்பணிப்பான சேவையாளருக்கான விருது
**நீலலோஜினி தர்மலிங்கம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாணி ரெக்ஸ்

## விசேட விலைக் கழிவுகள்

**வேக்கிங் விசா / விசிற்றிங் விசா** மூலம் கனடா அல்லது ஏனைய வெளிநாடுகளுக்கு செல்பவரா நீங்கள் அந்த நாட்டு கால நிலைக்கேற்றதான அனைத்து விதமான

- Jacket (ஆண் / பெண்/சிறுவர்கள்)
- கோட் சூட் (ஆண்/பெண்)
- Sweater வகைகள்
- Cap / மௌப்ளர் வகைகள்
- பிளாங்கற் வகைகள்
- Luggage Bag அனைத்து அளவுகள்



மேலும் ஆண்கள் பெண்கள் சிறுவர்களுக்கான தரமான ஆடைகள் அனைத்தையும் ஒரே கூரையின் கீழ் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்

## வாணி ரெக்ஸ்

No-81, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.
021 222 5578, 021 222 9286

# விநியோகத்தர்கள் தேவை

வரையறுக்கப்பட்ட ரோடெக்ஸ் நிறுவனம், கடந்த 60 வருடங்களுக்கும் மேலாக ஒரு முன்னணி மின்சாரத் தீர்வு வழங்குநராகத் திகழ்ந்து வருகிறது. அது, தெற்கு மற்றும் வட பிராந்தியங்களில், விநியோகத்தராகக் கடமையாற்றுவதற்குப் பொருத்தமான ஆற்றல்மிக்க நபர்களைத் தேடிவருகிறது.

அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட விநியோகத்தர்கள், நிறுவனத்தின் வெற்றிக்காகவும், சந்தை மேலாதிக்கத்திற்காகவும் அதன் எதிர்கால நடவடிக்கைகளை இணைந்து மேற்கொள்ளக் கூடியதாக இருப்பர்.

பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்

**இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியில்**
**போதுமான வங்கி உத்தரவாத்தைக் கொண்டிருத்தல்**
**விரிவாக்கத்திற்கான சிறந்த நிதித் திறன்**
**போக்குவரத்து மற்றும் பொருத்தமான களஞ்சிய வசதிகள்**

உங்கள் விண்ணப்பங்களை
**ajanthay@rochegroup.lk**
என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்
தொடர்புகளுக்கு: **077 3404 465**

# விற்பனை நிறைவேற்றுநர்

தென் மாகாணத்தில் சேவை செய்வதற்காக, விற்பனை மற்றும் விநியோகத்தில் நிருபிக்கப்பட்ட சாதனைகளைக் கொண்டுள்ள, ஒரு ஆற்றல்மிக்க தொழிலில் தேர்ச்சி பெற்ற அனுபவம், மேலதிகத் தகைமையாகக் கருதப்படும்.

மின்சாரத் தீர்வுகளை விற்பனை செய்வதிலுள்ள முன் அனுபவம், முன்நிபந்தனையாக இல்லாவிடினும், ஒரு தகைமையாக அமைந்திருக்கும்.

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரி வாகனத்துடன் கூடிய அனுகூலப் பொதி காத்திருக்கிறது.

உங்கள் கல்வித் தகைமைகளை **careers@rochegroup.lk**
என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்

Rotax Limited




# விவாகம் திருமண சேவை

Vivaakam

- உலகெங்கிலும் பரந்து வாழும் இலங்கைத் தமிழர்களின் இணை தேடலில் இடையீடுகளை இயன்றவரை குறைத்து இரு தரப்புக்குமான விரைவான நேரடித் தொடர்பாடலினூடாக பொருத்தமானவர்களை கண்டறியவேண்டும் என்ற நோக்கிலானது எம் திருமண சேவை.
- எங்கள் திருமண சேவையினூடாக முற்றாகும் திருமணங்களுக்கு எந்தவொரு தரகர் கூலியும் பெற்றுக்கொள்ளப்படமாட்டாது.
- உங்களுக்கு திருமணம் பொருந்தும்வரை பதிவை குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு முறை இலவசமாகப் புதுப்பித்துக்கொள்ளலாம்.
- பதிவு செய்யப்பட்ட விபரங்களை திருமணசேவையில் இணைந்திருப்பவர்கள் மட்டுமே பார்க்கமுடியும். பொதுவெளியிலிருந்து பார்வையிடமுடியாது.
- எத்தனை பதிவுகளையும் ஒருவர் பார்வையிடமுடியும். அதற்கு எண்ணிக்கை வரையறை எதுவும் இல்லை.
- பதிவு செய்யும் உங்களின் புகைப்படம், தொடர்பு இலக்கம் போன்றவற்றை உங்களுடைய ஏனைய விபரங்கள் பிடித்திருக்கும் ஒருவர் உங்களின் நேரடி அனுமதி மூலமே பெற்றுக்கொள்ளமுடியும்.இந்த நேரடி அனுமதி முற்றிலும் உங்கள் தனிப்பட்ட விருப்பம் சார்ந்தது.திருமணசேவை அதில் எந்தவித தலையீடோ, கட்டண அறவீடோ செய்யாது.



குறிப்பிட்ட காலத்துக்குள் பதிவு செய்பவர்களுக்கு முற்றிலும் இலவசம். பதிவுக் கட்டணம் எதுவும் இல்லை.

தொடர்புநேரம் - காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை
075 683 3563
நேரடியாகப் பதிவு செய்துகொள்ள WWW.VIVAAKAM.COM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரண்டாம் மொழிக் கற்கை இறுதிநாள் நிகழ்வு



கிளிநொச்சி, டிசெ. 17
கிளிநொச்சி மாவட்ட செயலகம் மற்றும் திணைக்களங்களைச் சேர்ந்த தமிழ் பேசும் அரச உத்தியோகத்தர் களுக்கான சிங்களமொழி பாடநெறியின் இறுதிநாள் நிகழ்வு கடந்த புதன்கிழமை நடைபெற்றது. (ரி-75)

### இமயமலைப்...

இது தொடர்பில் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில் மேலும் உள்ளதாவது:-
இமயமலைப் பிரகடனத்தை நாம் கவனமாக வாசித்தோம். ஆனால், இந்தப் பிரகடனம் தமிழ் மக்களின் கருத்துக்களையோ, இலங்கைத்தீவு சுதந்திரம் அடைந்த நாளிலிருந்து தமிழ் மக்கள் சிங்கள பேரினவாதத்தினால் அனுபவித்த துன்பங்கள், கொடுமைகளையோ கருத்திற் கொள்ளாமை தொடர்பில் நாம் எமது கடும் அதிருப்தியை வெளியிடுகின்றோம்.
வெளிப்படையாகவே பௌத்த மதகுருமார் தமிழ் மக்களின் துன்பங்கள் தொடர்பில் தெளிவற்றவர்களாகவே உள்ளார்கள். ஏனெனில், அவர்கள் தமிழ்ப் பகுதிகளுக்கு வெளியே சிங்களவர்களிடையே வாழ்கிறார்கள். மேலும் நாம் அனுபவித்த, அனுபவித்துக் கொண்டிருக்கும் அடக்குமுறைகள் தொடர்பாக அவர்கள் எவ்வித கரிசனைகளையும் கொண்டிருக்கவில்லை.
14 வருடங்களுக்கு முன்னர் யுத்தம் முடிவடைந்த பின்னர், 2021 ஆம் ஆண்டு, பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை மக்கள் பேரெழுச்சியின் ஊடாக தமிழ் மக்களின் அபிலாஷைகளை வெளிப்படுத்தியுள்ளோம். சிறிலங்கா இராணுவத்தின் மிரட்டல்கள், அச்சுறுத்தல்கள் மற்றும் கைதுகளுக்கு மத்தியிலும் ஏறக்குறைய சுமார் ஐந்து இலட்சம் தமிழர்கள் இணைந்து பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை ஐந்து நாள் மக்கள் பேரெழுச்சி மூலம் தமிழ் இனத்தின் நிலைப்பாட்டினை வெளிப்படுத்தி இருந்தனர். தமிழ்ப் பல்கலைக்கழக மாணவர்களும், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் போன்ற பாதிக்கப்பட்ட அமைப்பினரும் பல போராட்டங்களையும் பேரணிகளையும் நடத்தி தமிழர்களின் நிலைப்பாட்டினை தொடர்ந்தும் வெளிப்படுத்தி வருகின்றனர். இவை எதுவும் இந்தப் பிரகடனத்தில் கவனத்தில் கொள்ளப்படவில்லை - என்றுள்ளது. (அ-ம-66-27)

### இந்து சமயத்...

மேற்படி சந்திப்பில் ஜப்பான், சுவிஸ் மற்றும் தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளின் இலங்கைக்கான தூதுவர்களை நல்லை ஆதீன முதல்வர், சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன், கோப்பாய் சுப்பிரமுனிய கோட்ட முதல்வர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துக்கற்கைகள் துறையின் பீடாதிபதி பிரம்ம சிறி ச.பத்மநாபன் ஆகியோர் சந்தித்துக் கலந்துரையாடினர்.
சந்திப்பில் வடக்கு-கிழக்கு மற்றும் மலையகப் பகுதிகளில் பல இளைஞர், யுவதிகள் வேலைவாய்ப்பற்றிருப்பதால் அவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் நோக்கில் தொழிற்சாலைகளை நிறுவுமாறு ஜப்பான் நாட்டின் இலங்கைக்கான தூதுவரிடமும், யாழ்.மாவட்டத்தில் சிறுவர் மருத்துவமனையொன்றை அமைப்பதற்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குச் சொந்தமான இணுவில் காணியில் கட்டடங்களை அமைப்பதற்கான உரிய நிதிப் பங்களிப்பை வழங்குமாறு சுவிஸ் தூதுவரிடமும் இந்து சமயத் தலைவர்கள் கோரிக்கை விடுத்தனர். அத்துடன் நீண்டகாலமாகத் தீர்க்கப்படாதுள்ள இனப்பிரச்சினைத் தீர்வுக்கான ஆக்கபூர்வமான முன்னெடுப்புகளை மேற்கொள்ளுமாறும் அவர்கள் வலியுறுத்தினர். (அ-ஒ-27-66)

### தவறான...

பட்டு வீட்டைவிட்டு வெளியே சென்றுள்ளார்.
இந்நிலையில், அன்று இரவு 8.30 மணியளவில் மனைவி தவறான முடிவு எடுத்துள்ளார். இதனால் அவரது உடலில் தீக்காயங்கள் ஏற்பட்டதால், இரவு 9 மணியளவில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.
அவர் அங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று சனிக்கிழமை காலை உயிரிழந்துள்ளார்.
உயிரிழப்புத் தொடர்பில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம் குமார் இறப்பு விசாரணைகளை மேற்கொண்டார். (அ-ஒ-100)

### குடும்பத்..

மாஞ்சோலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். அன்று இரவே யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மேலதிக சிகிச்சைக்காக மாற்றப்பட்டுள்ளார்.
இந்நிலையில் நேற்று சனிக்கிழமை உயிரிழந்துள்ளார். உயிரிழப்புத் தொடர்பில் யாழ். போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டார். (அ-ஒ-100)

### ஒவ்வொரு...

ரியர் வசந்த அத்துக்கோரல தெரிவித்துள்ளார். 15 வீதமாக இருக்கும் வற் வரியை 18 வீதமாக அதிகரிக்கும் வரி திருத்தச் சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. அரசாங்கம் எதிர்பார்க்கும் வரி வருமான இலக்கை அடைந்துகொள்ள ஒவ்வொரு குடும்பத்திடமும் இருந்து மாதாந்தம் 20 ஆயிரத்து 467 ரூபாவை வரியாக அறவிட வேண்டும் என பேராசிரியர் வசந்த அத்துக்கோரள தெரிவித்துள்ளார்.
வற்வரி அதிகரிப்பின் மூலம் பல இலட்சக்கணக்கான குடும்பங்கள் ஒருவேளை அல்லது இரண்டு வேளை உணவுகளை மாத்திரமே தினமும் எடுத்துக்கொள்ளும் சூழ்நிலை உருவாகும். வற்வரி அதிகரிப்பு நடுத்தர மற்றும் ஏழ்மையான குடும்பங்களை பெரியளவில் பாதிக்கும் எனவும் பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (அ-ஒ-இ)

### பல்கலை...

ஆலோசனை வழங்கப்படுகிறது என யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீட உடற்கூற்றியல்துறை மூத்த விரிவுரையாளர் மருத்துவர் திருமதி சிவநந்தினி உதயகுமார் தெரிவித்தார்.
கோண்டாவில் கிழக்கு சிறி அற்புதநர்த்தன விநாயகர் சனசமூக நிலையம், குமரன் விளையாட்டுக் கழகத்தின் ஆதரவில் இயங்கும் குட்டிச்சுட்டி முன்பள்ளி மற்றும் அகம் குழந்தைகள் பகல்நேரக் காப்பக மாணவர்களின் ஆண்டு இறுதிக் கலைவிழாவும் பரிசளிப்பு நிகழ்வும் நேற்றுச் சனிக்கிழமை கோண்டாவில் இராஜேஸ்வரி திருமண மண்டபத்தில் இடம் பெற்றபோது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டபோது அவர் மேலும் தெரிவித்ததாவது:-
ஒருவருக்கு கல்வி, பணம் என்பன இருந்துவிட்டால் மாத்திரம் போதாது. மனமகிழ்ச்சி, உடல் ஆரோக்கியம் என்பனவும் அவசியம் வேண்டும். வேலைப் பளுக்கள் நிறைந்த, இயந்திரமயமான தற்போதைய காலகட்டத்தில் மன அழுத்தங்களைக் குறைப்பதற்கான முக்கியமான வழி குழந்தைகளுடன் கொஞ்சிக் குலாவுவதும், குழந்தைகள், சிறார்களுடன் உரையாடுவதுமென உளவியலாளர்கள் கூறுகிறார்கள்.
முன்பள்ளிக்கல்வி அல்லது குழந்தைகளுக்கானகல்விபலநூற்றாண்டுகளுக்கு முன்னரே உருவானதொன்று. மருத்துவரான மாண்டிசோரி அம்மையாரின் எண்ணவோட்டத்தில் உருவானதே முன்பள்ளிக் கல்வி.
ஒரு மனிதனின் வாழ்க்கையில் ஐந்து வயது வரையான காலப்பகுதி ஒருவரின் திறன்களை, ஆற்றல்களை விருத்தி செய்வதில் முக்கியமான பங்காற்றும் காலப்பகுதியாக அமைந்துள்ளது. மூளையில் பல பாகங்கள் காணப்படும் நிலையில் ஒவ்வொரு பாகங்களும் ஒருவரின் பல்வேறு திறமைகளை வெளிக்காட்டும் வகையில் அமைந்துள்ளன. இந்தக் காலப் பகுதியில் சிறார்கள் கலை மற்றும் இணைப்பாட விதானச் செயற்பாடுகளில் ஈடுபடும் போது அவர்களின் மூளை விருத்தி நன்றாக அமையும் - என்றார். (அ-ஒ-66)

### அனுமதிப்பத்திரம்...

தொடர்பில் அனைத்து மாகாண சபைகளிடமிருந்தும் தகவல்களைக் கோரியுள்ளதாக மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் நிஷாந்த வீரசிங்க தெரிவித்தார்.
அந்தத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு வாகன உரிமையாளர்களுக்கு அது தொடர்பில் அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர் கூறினார்.
வருமான அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளாத வாகனங்களின் பதிவுகளை தமது திணைக்களத்தின் தரவுக் கட்டமைப்பிலிருந்து நீக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுவதாக மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்கள ஆணையாளர் நாயகம் தெரிவித்தார். (அ-ஒ-இ)


### கார்த்திகைக்...

கொடுக்குளாய், உடுத்துறையைச் சேர்ந்த மாரிமுத்து சுப்ரமணியம் (வயது-47) என்ற இளம் குடும்பத் தலைவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.
சில தினங்களுக்கு முன்னர் காத்திகைச் செடியின் கிழங்கை உட்கொண்ட குறித்த நபர் வீட்டில் இருந்த நிலையில் திடீர் சுகவீனம் ஏற்பட்டதைத் தொடர்ந்து பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.
இந்தநிலையில்நேற்றுஉயிரிழந்துள்ளார். உயிரிழப்புத் தொடர்பில் பருத்தித்துறை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராஜா இன்று விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளார். (அ-ஒ-100)

### கொட்டித்...

வடக்கு மாகாணத்தில் தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக குளங்களின் நீர் மட்டம் சடுதியாக அதிகரித்து அவற்றின் கொள்ளவை எட்டியுள்ளன. இதனையடுத்து குளங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. இதனால் தாழ்நிலப் பகுதிகள் பலவும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. வடக்கில் முல்லைத்தீவு மாவட்டத்தில் 880 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 687 பேரும், கிளிநொச்சியில் 716 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 258 பேரும், மன்னாரில் 17 குடும்பங்க ளைச் சேர்ந்த 73பேரும், வவுனியா மாவட்டத்தில் 22 குடும்பங்களைச் சேர்ந்த 84 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர். (அ-ஒ-5-19-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தில் பெயார் மெட் நிறுவனத்தினரால் மாற்றுத்திறனாளிகளை பராமரிப்போருக்கான பயிற்சிநெறி உதவிப்பிரதேச செயலாளர் தலைமையில் பிரதேச செயலக சிறிய மாநாட்டு மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. (ரி-75)




கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புதநர்த்தன விநாயகர் சனசமூக நிலையம், குமரன் விளையாட்டுக் கழகத்தின் ஆதரவில் இயங்கும் குட்டிச்சுட்டி முன்பள்ளி மற்றும் அகம் குழந்தைகள் பகல்நேரக் காப்பக மாணவர்களின் ஆண்டிறுதிக் கலைவிழாவும் பரிசளிப்பு நிகழ்வும் நேற்றுச் சனிக்கிழமை சனசமூக நிலைய உபசெயலாளர் சா.பபிசன் தலைமையில் இடம்பெற்றது. (ம-66)



வவுனியா, வவுனிக்குளம் வான் பாய ஆரம்பித்துள்ளமையை முன்னிட்டு பொங்கல் வழிபாடுகள் கடந்த திங்கட்கிழமை நீர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் கமக்கார அமைப்புகளால் முன்னெடுக்கப்பட்டன. (ரி-75)

# கௌரவிப்பும் பிரியாவிடையும்

யாழ்ப்பாணம், டிசெ.17

வரணி நிதி அக்கடமி மற்றும் சாவகச்சேரி லைசியம் உயர் கல்லூரியின் சாதனையாளர் கௌரவிப்பும் பிரிவுபசார நிகழ்வும் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளது

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக் கழக சைவசித்தாந்தத்துறை இந்துக் கற்கைகள் பீடம் இந்து நாகரிகத்துறை முன்னாள் தலைவர் பேராசிரியர் கலாநிதி திருமதி விக்னேஸ்வரி பவநேசன் கலந்து கொள்ளவுள்ளார். (ச-159)

## மரண அறிவித்தல்

தோற்றம் 07 . 06 . 1936

மறைவு 15 . 12 . 2023



### திருமதி யோகரட்ணம் கனகசபாபதி

யாழ்ப்பாணம் மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோகரட்ணம் கனகசபாபதி நேற்றுமுன்தினம் (15.12.2023) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கைலாயபிள்ளை (ஸ்தாபகர், மாப்பியன் மில்) தங்கரத்தினம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கனகசபாபதி (இளைப்பாறிய புகையிரத தலைமைப் பாதுகாவலர்) அவர்களின் அன்பு மனைவியும், ரஜனி (ஓய்வுபெற்ற உப அதிபர், யா/ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாலயம்), ரஞ்சித் (U.S.A) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற ஸ்ரீகரன் (ஓய்வுபெற்ற உப அதிபர், யா/பரியோவான் கல்லூரி) மற்றும் பூம்பா (U.S.A) ஆகியோரின் அன்பு மாமியாரும், தர்மரட்ணம் (London), காலஞ்சென்ற ஞானரட்ணம் மற்றும் அமிர்தரட்ணம் (Canada), பஞ்சரட்ணம் (மானிப்பாய் - மில்), சுகிர்தரட்ணம் (Colombo) மற்றும் காலஞ்சென்ற விஜயரட்ணம் அவர்களின் பாசமிகு சகோதரியும், ரகுராஜ் (ஆராய்ச்சி உத்தியோகத்தர், TRI, தலவாக்கலை), ரூபினி (சுற்றாடல் உத்தியோகத்தர், CEA) - பிருத்வி (பொறியியலாளர், NWS&DB), டிலக்ஷனா (U.S.A), அர்ச்சனா (U.S.A) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், பிரஹாசினியின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 19.12.2023 செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"விஜயாபதி"
கல்லூரி ஒழுங்கை, மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்
077 627 9325

(CS27357) (CS/A-1)

## மரண அறிவித்தல்

தோற்றம் 29 - 10 - 1958

மறைவு 15 - 12 - 2023



### திருமதி கைலாயநாதன் அருந்ததி

கந்தர்மடத்தை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட கைலாயநாதன் அருந்ததி நேற்று முன்தினம் (15.12.2023) வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபாபதி குணபூசனி அம்மாளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்லையா பராசக்தி தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற கைலாயநாதனின் அன்பு மனைவியும், பிரியதர்சினி, சிவதர்ஜன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், கௌரியின் அன்புமிகு சகோதரியும், ஜெயந்தன், நிஷாந்தன் கனகசபாபதியின் சின்னம்மாவும், றஞ்சிற்காந்தன், ஜானுவி, மானஸ் ஆகியோரின் மாமியும் அனிக்காவின் பேர்த்தியும், ஆனந்தீஸ்வரன், கார்த்திகேசு, கணேசநாதன், பூலோகநாயகி, இலட்சுமணநாதன், மகேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்ற சண்முகநாதன் மற்றும் தேவபாலன், பரமேஸ்வரி, தனலட்சுமி ஆகியோரின் சகலியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.12.2023) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அம்மன் வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்

(CS 27388) (AX 1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வான்கதவுகள் திறப்பு!

டிசெ. 17 முத்துஜயன் கட்டு குளத்துக்கான நீர்வரத்து அதிகமாக இருப்பதால், குளத்தின் வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. நேற்றுக் காலை 10 மணியளவில் அந்தக் குளத்தின் வான்கதவுகள் திறக்கப்பட்ட நிலையில், குளத்தின் கீழ்ப் பகுதியில் வசிக்கும் மக்களை பாதுகாப்பாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

(ம-75)


## பெண் வேலையாள் தேவை

திருநெல்வேலியில் அமைந்துள்ள 4 பேர் கொண்ட குடும்பத்திற்கு வீட்டு வேலைக்கு ஆள் தேவை (பெண்) அருகில் இருப்போர் விரும்பத்தக்கது
**சம்பளம் 36,000/=**

தொடர்பு : 0777 898 862

## மின்சார பைசிக்கிள் விற்பனைக்கு

077 993 5844

## வீடு வாடகைக்கு தேவை

திருநெல்வேலியில் இருந்து 3Km சுற்றாடலுக்குள் ஓய்வூதியம் பெறும் இருவர் வசிப்பதற்கு அனெக்ஸ்/ சிறிய வீடு தேவை

தொடர்புகளுக்கு :
071 937 6185, 077 729 8562

## வாடகைக்கு தேவை

காங்கேசன்துறை வீதியில் மனோகரா சந்திக்கும் தட்டாதெரு சந்திக்கும் இடைப்பட்ட பகுதியில் அலுவலகம் ஒன்றினை அமைப்பதற்கு கடை அல்லது வீடு வாடகைக்கு தேவை.

தொடர்புகளுக்கு :
077 468 2560, 077 956 8516

## மணமகள் தேவை

1981ம் ஆண்டு பிறந்த லண்டனில் வசிப்பவர் இந்து கௌரவ குடும்பம் (N) இலங்கை, லண்டனிலும் படித்தவர் இவருக்கு நன்றாக படித்த ஆங்கிலம் எழுத கதைக்க தெரிந்த உத்தியோகம் பார்க்கும் பெண்ணை வரும்புகின்றோம்

தொடர்பு : 077 668 3717

## முழுநேர / பகுதிநேர வேலைவாய்ப்பு

**இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துக்கு ஆலோசகர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

**அடிப்படைத் தகைமைகள்**

- **G.C.E (O/L) பரீட்சையில் கணிதம், தமிழ் உட்பட 6 பாடங்களில் சித்தி**
- **18 - 60 வயதுக்குட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்**

**தொலைபேசி இலக்கம் உள்ளடங்கலாக சுயவிபரக்கோவையை (Bio Data) கீழ்வரும் Whatsapp இலக்கத்துக்கு அல்லது மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்**

Whatsapp : 077 756 3781
jenyjude77@yahoo.com

## மணமகள் தேவை

யாழிந்து (v) 30 வயது பொறியியலாளர் (Engineer) மணமகனுக்கு பொறியியல் பட்டதாரி மணமகள் தேவை.

தொடர்பு : 077 071 1924

## A/L PHYSICS

தனிப்பட்ட, குழு வகுப்பு
Ranjit Sir - 0777 600 4896
2nd Cross St, Jaffna
YMCA Thampasitty

## SPOKEN ENGLISH WITH GRAMMAR

யாழ் இந்துக்கல்லூரி வீதியில்
தனி, குழு வகுப்பு
ஆண்டு 7 to GCE OL, AL,
பட்டதாரிகள் - தொழில்புரிவோர்.

K.Ganesh B.A 077 766 8725

## சிறுநீரகம் தேவை

சிறுநீரக செயலிழப்பால் பாதிப்படைந்த A+ இரத்த வகை உடைய நபர் சிறுநீரக மாற்று சிகிச்சைக்காக சிறுநீரக தானம் செய்ய விரும்பும் A மற்றும் O இரத்தவகை உடையவர்களை தேடுகிறார். HLA Report உடையவர்கள் வரவேற்கப்படுவர்

தொடர்புக்கு: 077 301 6651

## விசாக்கான Show money

வங்கி இருப்பு உறுதிப்படுத்தி தரப்படும்.
visit visa
student visit visa
fixed & saving
All travel documents
மிகக் குறைந்த கட்டணத்தில்!

தொடர்பு:
075 033 6759

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ (v) குடும்ப 1976 இல் பிறந்த B.Sc அரச உத்தியோக திருமணமாகாத மணமகனுக்கு நற்குணமுள்ள படித்த திருமணமாகாத மணமகள் தேவை

தொடர்பு : 076 667 8996

## மணமகள் தேவை

1984 இல் பிறந்த, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கண்பார்வையற்ற நிரந்தர வருமானம், சொந்த வீடும் உள்ள மணமகனுக்கு மணமகள் தேவை.

Viber or Whatsapp
0044 7578 626565, 077 251 9150
Email add: rajasasikumar@gmail.com

## பெண் வேலையாள் தேவை

பருத்தித்துறை, அல்வாய் வடமேற்கு பகுதியில் அமைந்துள்ள வீடு ஒன்றிற்கு வீட்டு வேலை பார்ப்பதற்கும் 3 வயது குழந்தையை பராமரிப்பதற்கும், தங்கிநின்று வேலை செய்யகூடிய வேலையாள் தேவை.
**சம்பளம் 30,000 - பேசித்தீர்மானிக்கலாம்**

077 078 4411

## விற்பனைக்கு

மாற்றுத்திறனாளிகளிற்கான மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 911 6297

## குழு மற்றும் தனிப்பட்ட வகுப்புகள்

தரம் 1 முதல் 8 வரை Spoken English, நுண்ணறிவு, கணிதம், தமிழ் கற்பித்து கொடுக்கப்படும்.

076 173 9807, 076 832 7227

## காணி விற்பனைக்குண்டு

யாழ். நாயன் மார்கட்டு சந்திக்கு அருகாமையில் 3 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 930 8363
077 545 3785

## மணமகன் தேவை

யாழ் றோமன் கத்தோலிக்க (V) 1995ம் ஆண்டு பிறந்த 5'7" உயரமுடைய IT விரிவுரையாளராக பணிபுரியும் மணமகளுக்கு (தனியார் துறை) பெற்றோர் தகுந்த மணமகனை எதிர்பார்க்கின்றார்கள். (32 வயதிற்கு உட்பட்ட வெளிநாடு விரும்பத்தக்கது)

தொடர்புகளுக்கு:
070 119 4515, 077 429 3570

விரைவு - நம்பிக்கை - பாதுகாப்பு

# அண்ணா

விரைவுப் பொதிகள் சேவை

976, K.K.S. Road, Jaffna. SRI LANKA.





கிளைகள்:
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, திருகோணமலை, நீர்கொழும்பு, கொழும்பு

விசேட கட்டண கழிவு

770 330 5500
075 330 5500
076 122 1566
021 221 5656

தொடர்பு கொள்ளுங்கள்...
- விமான பணயச் சீட்டு பதிவு
- வீசா சேவைகள்
- உள்ளூர் பொதிகள் சேவை
- யாழ்ப்பணத்தில் தங்குமிட வசதி

PICKUP
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, கொழும்பு ஆகிய பகுதிகளில் உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும்.

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடிச் சந்திக்கு அருகாமையில் A-9 வீதி முகப்புடன் 22 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

* 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்
* **நிலப்பரப்பு,** நன்னீரூற்று
* 20 அடிப்பாதையுடன்
* சித்த மருத்துவமனைக்கு எதிரே பிரதான வீதியுடனான காணி
* யாழ். பஸ்நிலையத்திலிருந்து 6 KM தூரம்
* நல்ல சூழல், குடியிருப்புகள் சூழவுள்ள காணி
* நன்னீர் ஊற்று நிலம்
* தரகர் தேவையில்லை.
* உரிய அனைத்து ஆவணங்களையும் சரிபார்த்து கொள்முதல் செய்து கொள்ள முடியும்.
* **பார்வையிடும் நேரம்:** காலை 6.00 - மாலை 6.00 மணிவரை.

தொடர்பு: 077 468 3354
076 755 8606

(CS 27307) A-1


செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : .news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் [illegible] இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 17.12.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கங்கள்: 08

# சஞ்சீவி

Registered as a Newspaper

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை யிலாதானே!

– மாணிக்கவாசகர்

மலை : 33 வள்ளுவர் ஆண்டு : 2053 மார்கழி 2 ஞாயிற்றுக்கிழமை (17.12.2023) சிகரம் : 178



# இமாலயப் பிரகடனம்: தமிழ் மக்களுக்கு யார் பொறுப்பு?

நிலாந்தன்

நோர்வீஜிய மதகுருவாகிய அருட்தந்தை. ஸ்டிக் உட்னெம் (Fr.Stig Utnem) இலங்கைத்தீவின் நல்லிணக்க முயற்சிகளில் மதத்தலைவர்கள் பங்களிப்புச் செய்யலாம் என்று சிந்திப்பவர். அதற்காக உழைப்பவர். 2014 இல் நான் நோர்வேக்குச் சென்றபொழுது அவரைச் சந்தித்தேன். இலங்கையில் திருச்சபைகளின் பங்களிப்போடு இனநல்லிணக்க முயற்சி ஒன்றினை முன்னெடுக்கவிருப்பதாக அவர் என்னிடம் சொன்னார். அதற்கு நான் சொன்னேன், நல்ல விஷயம். ஆனால் நல்லிணக்கமுயற்சிகளை திருச்சபைகளில் இருந்து தொடங்குவதற்குப் பதிலாக விகாரைகளில் இருந்து தொடங்குவதுதான் பொருத்தமாக இருக்கும் என்று. ஏனென்றால் யுத்தம் அங்கிருந்துதான் தொடங்குகின்றது. எனவே அங்கிருந்துதான் சமாதானமும் தொடங்க வேண்டும். மாறாக திருச்சபைகளில் இருந்து அதைத் தொடங்க முற்பட்டால் புலம்பெயர்ந்த தமிழர்களும் அவர்களுக்குச் சார்பான வெள்ளைக்கார நாடுகளும் கிறிஸ்தவ அமைப்புகளுக்கூடாக தமது யுத்த வெற்றியைத் தட்டிப்பறிக்கப் பார்க்கின்றனர் என்று சிங்கள-பௌத்த அரசியல்வாதிகள் வியாக்கியானம் செய்வார்கள் என்று.

கடந்த மாதம் 23 -29 ஆம் திகதி வரையும் இலங்கையிலிருந்து மதத் தலைவர்களின் குழு ஒன்று நோர்வேக்கு விஜயம் செய்தது. ஒஸ்லோ முருகன் ஆலயத்தில் கடந்த 24 ஆம் திகதி ஒரு மதநல்லிணக்க ஒன்றுகூடல் ஒழுங்கு செய்யப்பட்டது. அதில் உரையாற்றிய திருகோணமலை கத்தோலிக்க மறைமாவட்டத்தின் ஆயர் தன்னுடைய மறைமாவட்டத்தில், சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் இரு வேறு சட்டங்கள் நடைமுறையில் உள்ளன என்ற தொனிப்பட கருத்துத் தெரிவித்துள்ளார். அதாவது திருகோணமலையில் சிங்கள-பௌத்தமயமாக்கல் தொடர்பில் சட்டம் அப்படித்தான் பிரயோகிக்கப்படுகிறது என்று பொருள்.

மேற்படி மதத்தலைவர்கள் குழுவின் நோர்வேப் பயணத்துக்குரிய ஏற்பாடுகளின் பின்னணியிலும் அருட்தந்தை. ஸ்டிக் உட்னெம் இருந்திருக்கிறார். இலங்கைத்தீவில் இனங்களுக்கிடையிலான நல்லிணக்க முயற்சிகள் தொடர்பில் அவர் இப்பொழுது ஏறக்குறையக் களைத்துப் போய்விட்டார் என்று அவரைத் தெரிந்தவர்கள் கூறுகிறார்கள்.

இப்படிப்பட்டதோர் மத அரசியல் பின்னணியில் தான் கடந்த வாரம் இமாலயப் பிரகடனம் என்ற ஒரு பிரகடனம் வெளியிடப்பட்டிருக்கிறது. ஜி.ரி.எஃப் என்று அழைக்கப்படும் உலகத் தமிழர் பேரவையும், "சிறந்த இலங்கைக்கான பௌத்த சங்கமும்" இணைந்து உருவாக்கியதே மேற்படி இமாலயப் பிரகடனம் ஆகும். கடந்த ஏப்ரல் மாதம் நேபாளத்துக்கு ஒரு தொகுதி பிக்குகளை அழைத்துச் சென்ற ஜி.ரி. எஃப்., அங்கு வைத்து அந்தப்பிரகடனத்தைத் தயாரித்திருக்கின்றது. கிட்டத்தட்ட 9 மாதங்களின் பின் அதை இப்பொழுது வெளியிட்டிருக்கிறார்கள். கடந்த ஒரு நூற்றாண்டு காலத்தில் இனப்பிரச்சினைக்கான தீர்வைக் கண்டுபிடிக்கும் நோக்கத்தோடு பௌத்த குருமாரோடு இணைந்து ஒரு தமிழ்த் தரப்பு இவ்வாறு பிரகடனம் ஒன்றை வெளியிட்டிருப்பது இதுதான் முதல் தடவை.

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தனி நாட்டைத் தவிர வேறு எந்த ஒரு தீர்வைப் பெறுவதாக இருந்தாலும், பௌத்த மகா சங்கத்தோடு உரையாடத்தான் வேண்டும். சமாதானம் ஆகட்டும், நல்லிணக்கமாகட்டும் எதுவும் பௌத்த விகாரைகளில் இருந்துதான் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

கடந்த ஒரு நூற்றாண்டு காலம் முழுவதிலும் இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகளின் போது, அவற்றைத் தடுத்ததில் அல்லது குழப்பியதில் மகா சங்கத்துக்கு முக்கியமான பங்கு உண்டு. இலங்கைத் தீவின் பௌத்தம், ஓர் அரச மதம், அரசியலில் தீர்மானிக்கும் சக்திகளாக காணப்படும் அரசியல்வாதிகள், படைத்தரப்பு, சிங்கள - பௌத்த ஊடகங்கள் என்பவற்றோடு பௌத்த மகாசங்கமும் ஒன்று. எனவே மகாசங்கத்தின் ஆசீர்வாதங்களின்றி இலங்கைத்தீவில் சமாதானத்தைக் கொண்டு வர முடியாது.

ஆனால் கடந்த ஒரு நூற்றாண்டு காலப்பகுதிக்குள் தமிழ்த் தரப்பிலிருந்து மகா சங்கங்களை நோக்கிச் சென்றவர்கள் மிகக்குறைவு. விக்னேஸ்வரன் முதலமைச்சராகப் பதவியேற்றதும் மகாநாயக்கர்களைச் சந்திக்கச் சென்றார். அதில் ஒரு பீடம் அவரை மதித்து நடத்தியதாகவும் மற்றொரு பீடம் அவரை மதிக்கவில்லை என்றும் கூறப்பட்டது. அதன் பின் தமிழ் அரசியற் சமூகத்தில் இருந்து யாரும் மகாநாயக்கர்களோடு உரையாடவில்லை. அரசாங்கம் தமிழ்ப் பகுதிகளுக்குத் திட்டமிட்டு நியமிக்கும் தமிழ் ஆளுநர்கள் மகாநாயக்கர்களிடம் சென்று ஆசீர்வாதங்களைப் பெற்றார்கள். அது போல அண்மையில் கொழும்பில் பெரிய அளவில் முதலீடு செய்வதற்கு வந்த புலம் பெயர்ந்த தமிழ் முதலாளி ஒருவரும் தன் மனைவியோடு சென்று மகா சங்கத்தினரிடம் ஆசீர்வாதங்களைப் பெற்றிருந்தார். மேலும் இந்தியாவில் இருந்து வரும் அமைச்சர்களும் தூதுவர்களும் மகா சங்கத்தினரிடம் சென்று ஆசீர்வாதங்களைப் பெறுகிறார்கள். இப்படிப்பட்டதோர் பின்னணியில், மகா சங்கத்தின் ஆசீர்வாதத்தோடு ஒரு தீர்வு முயற்சியை ஜி.ரி.எஃப் தொடங்கியிருக்கிறது. மகாசங்கத்தின் ஆசீர்வாதம் கிடைத்திருப்பதால் அம்முயற்சிக்கு அதிக கவனிப்புக் கிடைத்திருக்கிறது. இமாலயப் பிரகடனம், இனப்பிரச்சினைக்கான தீர்வுக்குரிய மென்மையான வரையறைகளைக் கொண்டிருப்பதாக ஜி.ரி.எஃப்பின் தலைவர் சுரேன் சுரேந்திரன் கூறுகிறார். ஆம். அவை மென்மையான வரையறைகள்தான். ஆனால், அதை மிகச்சரியான வார்த்தைகளிற் சொன்னால், மகா சங்கத்தின் ஆசீர்வாதங்களைப் பெறுவதற்காகத் தமிழ் மக்களின் கோரிக்கைகள் அங்கே மென்மையாக்கப்பட்டிருக்கின்றன என்பதே உண்மை.

மகாநாயக்கர்களை வணங்க வேண்டும். மதிக்க வேண்டும். எப்பொழுது என்றால் புத்தபகவான் கூறியதுபோல அவர்கள் சகலவற்றையும் துறந்த சன்னியாசிகளாக இருக்கும்பொழுது அவர்களை வணங்கலாம். அது ஆன்மிகம். ஆனால் புத்தபகவான் வாழ்ந்து காட்டியதற்கு மாறாக மகா சங்கம் அதிகாரத்தின் ஒரு பகுதியாக இருக்கும் பொழுது. அந்தக் கட்டமைப்புடன் பேசப் போகும் தமிழர்கள் மண்டியிட முடியாது. ஏனெனில் அது அரசியல். தமிழ் மக்கள் தமது கோரிக்கைகளை நீர்த்துப் போகச்செய்து மகாசங்கத்தின் ஆசீர்வாதங்களைப் பெறத் தேவையில்லை. பதிலாக தமிழ் மக்கள் தங்களுடைய பேரபலத்தை அதிகப்படுத்திக் கொண்டு மகா சங்கத்தோடு பேசப் போகலாம்.

ஜி.ரி.எஃப் உடனான சந்திப்பின்போது அஸ்கிரிய பீடாதிபதி கூறியதாக ஒரு தகவலை சுரேன் சுரேந்திரன் தெரிவித்திருந்தார். யுத்த காலத்தில் தான் வன்னிக்கு வர விரும்பியதாக மகாநாயக்கர் கூறியுள்ளார். இருக்கலாம். அப்பொழுது தமிழ் மக்களிடம் பேரபலம் இருந்தது. அதனால் மகாநாயக்கர் வன்னிக்கு வர விரும்பியிருக்கலாம். இப்பொழுது தமிழ் மக்களின் பேரபலம் குறைந்து போய்விட்டது. அதனால் தான் தாயகத்துக்கு வெளியில் இருந்து தாயகத்தின் தலைவிதியைத் தீர்மானிக்கும் பிரகடனங்களை உருவாக்கும் ஒரு நிலை. ஜி.ரி. எஃப் புலம் பெயர்ந்த தமிழ்ச் சமூகத்தை முழுமையாகப் பிரதிநிதித்துவ படுத்தவில்லை. முதலில் அவர்கள் புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகள் மத்தியிலும் இது தொடர்பாக விவாதித்திருக்க வேண்டும். அதன்பின் தாயகத்தில் உள்ள தமிழ்க் கட்சிகள், செயற்பாட்டாளர்கள், குடிமக்கள் சமூகங்களோடு உரையாடியிருந்திருக்க வேண்டும். ஆனால் அப்படி எதுவும் வெளிப்படையாக நடக்கவில்லை. யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த இமாலயப் பிரகடனக் குழுவினரோடு வடமராட்சியைச் சேர்ந்த ஒரு முன்னாள் மாகாண சபை உறுப்பினர் காணப்பட்டார். இவர் சுமந்திரனுக்கு நெருக்கமானவர். ஆனால் யாழ்ப்பாணத்துக்கு வந்த பிரகடனக்குழு வெளிப்படையாக எந்த அரசியல்வாதியோடும் தன்னை நெருக்கமாகக் காட்டிக் கொள்ளவில்லை.

ஜி.ரி.எஃப் பிரதிநிதிகளும் பிக்குகளும் நல்லை ஆதீனத்தில் சைவ சமயத் தலைவர்களைச் சந்தித்தபொழுது. அதில் பங்குபற்றிய சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் ஆறு. திருமுருகன் ஒரு விடயத்தைச் சுட்டிக் காட்டினார். உங்களை எனக்குத் தெரியாது என்பதே அது. அதுதான் உண்மை. அதாவது தாயகத்தில் உள்ள தரப்புகளோடு ஜி.ரி. எஃப் உரையாடியிருக்கவில்லை. இதுபோன்ற முயற்சிகளை தாயகத்தை மையமாகக் கொண்டுதான் முன்னெடுக்க வேண்டும். தாயகத்துக்கு வெளியில் இருந்து அல்ல. அந்த அடிப்படையில் பார்த்தால், இது ஒரு தலைகீழ் முயற்சி.

இது புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகம் ஒரு திரட்சியாக இல்லை என்பதைக் காட்டுகின்றது. அங்கேயும் தனி ஓட்டங்கள் பலமாக உள்ளதைக் காட்டுகின்றது. அதுமட்டுமல்ல, மேற்கு நாடுகளிடம் கடனுக்காகத் தங்கியிருக்கும் ஒரு ஜனாதிபதியை; ஐ.நா.வுக்கு வீட்டு வேலைகள் செய்ய வேண்டிய ஒரு ஜனாதிபதியை; அந்த வீட்டு வேலைகளில் ஒன்று ஆகிய உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை உருவாக்க முயற்சிக்கும் ஒரு ஜனாதிபதியை ; அடுத்த ஆண்டு நடக்கவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடக் கூடிய ஒரு ஜனாதிபதியை; பாதுகாப்பதுதான் இந்த நகர்வின் உள்நோக்கமா என்ற சந்தேகங்களை அதிகப்படுத்துகின்றது.

இந்த இடத்தில் தாயகத்தில் உள்ள கட்சிகளும் செயற்பாட்டாளர்களும் குடிமக்கள் சமூகங்களும் ஒரு விடயத்தை ஒப்புக்கொள்ள வேண்டும். தாயகத்தில் பலமான ஒரு அரசியல் இயக்கம் அல்லது கட்சிகளின் கூட்டு இல்லாத வெற்றிடந்தான் இதற்கெல்லாம் காரணம். தாயகத்தில் பலமான ஒரு மக்கள் இயக்கம் அல்லது மக்கள் அதிகாரம் இருந்திருந்தால் புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகள் தாயகத்தை நீக்கிவிட்டு இதுபோன்ற செயற்பாடுகளில் ஈடுபடமுடியாது. அல்லது தாயகத்தில் உள்ள சில அரசியல்வாதிகளின் மறைமுக அனுசரணையோடு இதை முன்னெடுத்திருக்முடியாது. தாயகத்தில் தமிழ்மக்கள் ஒரு பலமான பேரம் பேசும் சக்தியாக இல்லை. அதனால்தான் தமிழ்மக்களின் தலைவிதியை பெருமளவுக்கு வெளிச்சக்திகளே தீர்மானிக்க முயற்சிக்கின்றன. ஜெனிவாவில் தீர்மானங்களை நிறைவேற்றுகிறார்கள். அல்லது, துவாரகா வருகிறார் என்று படங்காட்டுகிறார்கள். அல்லது தமிழ் மக்களுக்குத் தெரியாமல் ஒரு பிரகடனத்தைத் தயாரித்துவிட்டு, அதைக் கொழும்பில் வைத்து வெளியிடுகிறார்கள். தமிழ் மக்களுக்கு யார் பொறுப்பு?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இமாலயப் பிரகடனம்; பின்னணியும் வரலாறும்

○ அ.நிக்ஸன்



அதிகளவு சிங்கள உறுப்பினர்களைக் கொண்ட இலங்கை ஒற்றையாட்சி நாடாளுமன்றத்தில் ஈழத்தமிழர் விவகாரத்துக்குரிய தீர்வை முன்வைக்க முடியாது என்பதாலேயே "தமிழ்த்தேசியம்" என்ற கோட்பாடு எழுந்தது.

சிங்களம், தமிழ் ஆகிய இரு அரசியல் சமூகங்களும் ஒற்றையாட்சி நாடாளுமன்றத்துக்கு வெளியே கூட்டாக நின்று அதிகாரங்களைப் பங்கிடுவதன் மூலமே இனப்பிரச்சினைக்குரிய நிரந்தர அரசியல் தீர்வை எட்ட முடியும். இதற்கான கூட்டுச் செயற்பாடுகளை முன்னெடுக்கவேண்டிய தமிழ்த் தேசியக் கட்சிகள் தனித்தனியாகச் செயற்பட்டு ஒற்றையாட்சி நாடாளுமன்ற ஆசனங்களைக் கைப்பற்றும் வியூகங்களுடன் மாத்திரம் இயங்கி வருவதால் பலவீனமான நிலைமை மேலோங்கியுள்ளது. இதனால் புலம்பெயர் அமைப்பு என்று கூறிக்கொள்ளும் சில தனி நபர்கள், வல்லாதிக்க நாடுகளின் புவிசார் அரசியல் பொருளாதாரத் தேவைகளுக்குரிய சக்திகளாக மாறுவதற்குரிய காரண - காரியங்களாக அமைந்துள்ளனர். யதார்த்த அரசியல் என்று பேசுவோரும் முற்போக்குத் தமிழர் மற்றும் மிதவாத அரசியல் தலைவர்கள் என்று மார் தட்டுவோரும் 2009 மே மாதத்துக்குப் பின்னரான சூழலில் அதிகரித்துள்ளதைச் சாதகமாக்கி ஈழத் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையானது 'இன நல்லிணக்கம' 'மத நல்லிணக்கம்' என்ற பொறிக்குள்ளும் தள்ளப்பட்டுள்ளது. 2015 மைத்திரி-ரணில் அரசாங்கத்தில் ஆரம்பித்த இந்த 'நல்லிணக்கப் பொறி' கோத்தாபய ராஜபக்ச 2020 இல் ஜனாதிபதியான பின்னர் மேலும் விரிவடைந்தது. நல்லிணக்கப் பொறி என்ற பொருத்தமற்ற கதைக்கும், சென்ற மாதம் துவாரகாவின் பெயரில் வெளியான போலி மாவீரர் நாள் உரைக்கும் பலமான சக்திகள் பின்னணி என்பது இங்கே பட்டவர்த்தனம். குறிப்பாக 2009 க்குப் பின்னரான சூழலில் அமெரிக்கா போன்ற மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளின் புவிசார் அரசியல் பொருளாதார நிலைமைகளுக்கு ஏற்பச் செயற்படும் சர்வதேச தன்னார்வ நிறுவனங்களின் செயற்பாடுகள் ஊடக விளைந்ததுதான் இந்த இமாலயப் பிரகடனம்.

சுரேன் சுரேந்திரன் தலைமையிலான உலகத் தமிழர் பேரவை சர்வதேச தன்னார்வ நிறுவனங்களின் தேவைக்கு ஏற்ப இயைந்துள்ளது. சிறந்த இலங்கைக்கான சங்கங்கள் (Sangha for Better Sri Lanka) என்ற அமைப்பும் சுரேந்திரனின் திட்டத்துடன் இணைந்துள்ளது.

சுயநிர்ணய உரிமையைக் கைவிடுதல், இன அழிப்பு பற்றிய பேச்சை தவிர்த்தல், இலங்கை அரச கட்டமைப்புக்குள் ஐக்கியமாக வாழ்தல் மற்றும் இலங்கையர் என்ற அடையாளத்தைப் பேணுதல் போன்றவற்றுக்குத் தமிழ்த்தேசியக் கட்சிகள் மற்றும் சிவில் சமூக அமைப்புகளை இணங்க வைப்பதுதான் இந்தத் தன்னார்வ நிறுவனங்களின் பிரதான நோக்கம்.

இதனை அடிப்படையாகக் கொண்டு வெளிநாடுகளில் குறிப்பாக ஸ்கண்டிநேவிய நாடுகளில் கூட்டங்கள் நடத்தப்பட்டிருக்கின்றன. இந்தக் கூட்டங்களில் தமிழரசுக் கட்சியின் பேச்சாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் உலகத் தமிழர் பேரவையின் தலைவர் சுரேன் சுரேந்திரன், பிரித்தானியத் தமிழர் பேரவையின் தலைவர் ரூட் ரவி மற்றும் சட்டத்தரணி கலாநிதி குமாரவேல் குருபரன் ஆகியோர் உள்ளிட்ட பல தமிழர்கள் இந்தக் கூட்டங்களில் பங்குபற்றியிருக்கின்றனர்.

இந்தக் கூட்டங்கள் வெவ்வேறாகவும், கூட்டாகவும் தனித் தனியாகவும் மிக இரகசியமான முறையில் நடத்தப்படும். கூட்டங்களில் பேசப்பட்ட விடயங்கள் எந்த ஒரு ஊடகங்களிலும் வெளிவராது. ஆனாலும் கூட்டங்களில் பேசப்பட்ட விடயங்களை இந்தத் தன்னார்வ நிறுவனங்கள் ஓர் அறிக்கையாகத் தொகுத்துக் கூட்டத்தில் கலந்துகொண்ட அனைவருக்கும் அனுப்பும். இருந்தாலும் இந்தக் கூட்டங்களில் நடந்த பல விடயங்கள் வெளியே கசிந்திருக்கின்றன. அத்துடன் கூட்டங்களில் கலந்துகொண்ட சுரேன் சுரேந்திரன் போன்ற சிலரைத் தவிர ஏனைய தமிழ்ப் பிரதிநிதிகள் ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலைக்கான பிரதான காரண காரியங்களை விட்டுக்கொடுக்கவும் இல்லை. ஆனாலும் 'உங்கள் இலக்கு' அதாவது தமிழ்த் தேசியம் என்ற இலக்கை அடைவதற்கு கூட்டத்தில் தங்களால் முன்மொழியப்பட்ட விடயங்களை ஆரம்பப் புள்ளியாக ஏற்றுக்கொள்ளுங்கள் என்றும், பின்னர் உங்கள் இலக்கை அடைய முடியும் எனவும் இந்தத் தன்னார்வ நிறுவனங்கள் அறிவுறுத்தியிருக்கின்றன. சுயநிர்ணய உரிமையைக் கைவிடுதல், இலங்கையர் என்ற அடையாளத்தை ஒப்புக்கொள்ளுதல் என்ற பிரதான நோக்கங்களை சுமந்திரன், சுரேன் சுரேந்திரன் ஆகிய சிலரைத் தவிர கஜேந்திரகுமார் பொன்னம்பலம், குருபரன் உள்ளிட்ட ஏனையோர் ஏற்க மறுத்திருந்தனர்.

இதன் காரணமாக இந்தத் தன்னார்வ நிறுவனங்களின் செயற்பாடுகள் பிசுபிசுத்துப் பேயிருந்தன. 2009 க்கு முன்னர் இருந்தே உலகம் முழுவதிலும் செயற்பட்டு வந்த 14 புலம்பெயர் அமைப்புகளை இணைத்து உலகத் தமிழர் பேரவை 2009 இல் உருவாக்கப்பட்டது.

இதன் முதல் தலைவராக இலங்கையின் புகழ்பெற்ற ஒலிம்பிக் வீரர் நாகலிங்கம் எதிர்வீரசிங்கம் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டிருந்தார். தனது நெருங்கிய நண்பராக இருந்ததால், ரூட் ரவி உலகத் தமிழர் பேரவைக்கு இவரைத் தலைவராகத் தெரிவு செய்திருந்தார்.

2010 இல் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் தமிழர்கள் சார்பான பொது வேட்பாளராக போட்டியிடுமாறு வழங்கப்பட்ட அறிவுறுத்தலுக்கு அமைவாக கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தை எதிர்வீரசிங்கம் நாடியிருந்தார்.

ஆனால் அதற்கு கஜேந்திரகுமார் மறுத்துவிட்டார். ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட வைப்பதன் மூலம் இலங்கையர் என்ற அடையாளத்தை ஈழத்தமிழர்கள் பேணமுடியும் என்ற ஒரு நம்பிக்கையுடன் சர்வதேச தன்னார்வ நிறுவனங்கள் அப்போது அறிவுறுத்தியிருக்க வேண்டும். இப்படிப் பல முயற்சிகள் தோல்வியடைந்த பின்னணியிலேதான் 2013 இல் முன்னாள் அமைச்சர் அமரர் மங்கள சமரவீரவை மையப்படுத்தி சிங்கப்பூரில் நடத்தப்பட்ட மாநாட்டில் பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருந்தன.

இந்த மாநாட்டில் சுமந்திரன், சுரேன் சுரேந்திரன் மற்றும் கொழும்பில் இருந்து நில்மிகா பெர்னாண்டோ உள்ளிட்ட சிங்கள மிதவாதிகள், முற்போக்குவாதிகள் பலரும் பங்குபற்றியிருந்தனர். இலங்கையர் என்ற அடையாளத்துடன் இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்பதை மையமாகக் கொண்ட இந்த மாநாட்டுத் தீர்மானங்கள் இரகசியமாகப் பேணப்பட்டாலும் 2015 இல் மெதுவாகக் கசிய ஆரம்பித்தன.

இதனால் இந்த மாநாட்டுத் தீர்மானமும் பிசுபிசுத்துப் போகவே சுரேன் சுரேந்திரன் இரகசியங்களைப் பாதுகாக்கக் கூடியவர் என்ற நம்பிக்கையில் சர்வதேச தன்னார்வ நிறுவனங்கள் அவரை நம்பி வேறு சில முயற்சிகளை மேற்கொண்டன.

அந்த முயற்சியின் வெளிப்பாடுதான் இந்த இமாலயப் பிரகடனம். சிங்கப்பூர் மாநாட்டுக்கு முன்னரே 2011 இல் ரூட் ரவி, சுரேன் சுரேந்திரனுடன் முரண்பட்டு வெளியேறி பிரித்தானியத் தமிழர் பேரவையை உருவாக்கியிருந்தார். இருவருக்கும் இடையே அமைப்பு ரீதியான முரண்பாடுகளே தவிர, இலங்கையர் என்ற அடையாளத்தை பேணும் கொள்கையில் வேறுபாடுகள் இல்லை. ரூட் ரவி தற்போது மோடி தலைமையிலான பா.ஜ.க.வுடன் இணைந்து ஈழத் தமிழர்களை மையப்படுத்தி இந்திய நலன் சார்ந்த அரசியலில் ஈடுபட்டு வருகின்றார்.

பிரித்தானிய நாடாளுமன்றத்தில் இரண்டு வாரங்களுக்கு முன்னர் இடம்பெற்ற ஈழத்தமிழர் தொடர்பான விவாதத்துக்கு காரணமான புலம்பெயர் அமைப்புகளில் ரூட் ரவியின் அமைப்பும் முக்கியம் பெறுகின்றது.

அந்த விவாதத்திலும் சுயநிர்ணய உரிமை, இன அழிப்பு என்ற விடயங்களுக்கு பிரித்தானிய அரசு பதிலளிக்க மறுத்துவிட்டது. ஆகவே தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அடகுவைக்கும் சர்வதேச தன்னார்வ நிறுவனங்களின் நோக்கங்களுக்கு ஏற்ப ஏட்டிக்குப் போட்டியாகச் செயற்பட்டு வரும் இந்த இருவரிலும் தற்போது சுரேன் சுரேந்திரன் உலகத் தமிழர் பேரவையின் ஊடாக இமாலயப் பிரகடனம் என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளார்.

எதிர்வீரசிங்கம் தலைமைப் பதவியில் இருந்து விலகிச் சென்றதும் அருட்தந்தை எஸ்.ஜே.இமானுவல் 2010 இல் உலகத் தமிழர் பேரவைக்குத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். எதிர்வீரசிங்கம் இணக்க அரசியலுக்குள் செல்கிறார் என்ற குற்றச்சாட்டை முன்வைத்தே அப்போது அருட்தந்தை இமானுவல் உலகத்தமிழர் பேரவையின் தலைவராகத் தெரிவாகியிருந்தார். 2013 ஜனவரி மாதம் அப்போதைய வடமாகாண ஆளுநர் சந்திரசிறியின் கல்வி மற்றும் விளையாட்டுத்துறை ஆலோசகராக எதிர்வீரசிங்கம் பதவி ஏற்றிருந்தன் மூலம் அவரின் இணக்க அரசியல் வெளிப்பட்டது.

இமானுவல் தமிழ்த்தேசிய நிலைப்பாட்டில் உறுதியாக உள்ளவர். சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டியிலும் தெளிவுடன் செயற்பட்டவர். ஆனால் தலைவராகப் பதவியேற்று இவர் அமெரிக்காவுக்குச் சென்றபோது அங்கு அறிவுறுத்தப்பட்டதன் பிரகாரம் "ஐக்கிய இலங்கை" "இலங்கையர் என்ற அடையாளம்" ஆகியவற்றைப் பேணி "இன அழிப்பு" விசாரணையைக் கைவிட வேண்டும் என்ற வல்லரசுகளின் புவிசார் அரசியல் பொருளாதார வியூகங்களுக்கு ஏற்பச் செயற்படும் நிலைமைக்கு இமானுவல் தள்ளப்பட்டார்.

இருந்தாலும் அருட்தந்தை இமானுவல் வயது மூப்பின் காரணமாக [illegible] இருந்ததால் [illegible] சுரேன் [illegible]. தாயகம் திரும்பித் தற்போது யாழ். ஆயர் இல்லத்தில் இமானுவல் தங்கியுள்ளார். எதிர்வீரசிங்கமும் யாழ்ப்பாணத்தில் குடியேறியுள்ளார்.

இந்த நிலையில் தற்போது தனித்து இயங்கும் சுரேன் சுரேந்திரன், சர்வதேச தன்னார்வ நிறுவனங்களின் விருப்பங்களுக்கு ஏற்ப மிக இரகசியமாகத் தனிப்பட செயற்பட்டு இமாலயப் பிரகடனம் என்ற திட்டத்தை அரங்கேற்றியிருக்கிறார். அதன் முகவுரை மாத்திரமே ஊடகங்களில் வெளியிடப்பட்டிருக்கிறது. உண்மையான உள்ளடக்கம் முழுமையாகத் தெரியாது.

சிங்கப்பூர் மாநாட்டுத் தீர்மானம் இரண்டு வருடங்களின் பின்னர் வெளியே கசிந்தது போன்று இந்தப் பிரகடனமும் ஒன்று இரண்டு வருடங்களின் பின்னர் கசியக்கூடிய வாய்ப்புகள் இல்லாமலில்லை.

நோர்வேயின் முன்னாள் சமாதானத் தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் காலநிலை மாற்றம் குறித்த விவகாரங்களுக்கான இலங்கை ஜனாதிபதியின் ஆலோசகராகக் கடமையாற்றினாலும் அவர் சீனா நிறுவனம் ஒன்றிடம் இருந்தே சம்பளத்தைப் பெறுகிறார். இதனை அவரே வெளிப்படுத்தியுமுள்ளார்.

தமிழ் நாட்டுக்குள் எரிக்சொல்ஹெய்ம் சில நகர்வுகளை முன்னெடுத்தும் வருகிறார். புதுடில்லியுடன் உறவைப் பேணக்கூடிய முறையில் அவருடைய வியூகங்கள் அமைந்துள்ளன.

சுரேன் சுரேந்திரனைப் பொறுத்தவரை ஐக்கிய இலங்கைக்குள் அரசியல் தீர்வு என்ற விடயத்தில் எவருடனும் பேசவேண்டும் என்ற நிலைப்பாட்டில் உறுதியாக உள்ளார். அந்த அடிப்படையில் அமெரிக்கா-சீனா போன்ற நாடுகளுடனும் சேர்ந்து பயணிக்கக் கூடிய ஒருவர். இமாலயப் பிரகடனத்தை அவர் அங்கும் கொண்டு செல்லக்கூடியவர்.

இமாலயப் பிரகடனம் தொடர்பாக இந்தியாவுடனும் பேசக்கூடிய வாய்ப்புகளும் உண்டு. ஆயினும் இந்தத் திட்டம் தனியே இலங்கைத்திட்டம்தான். அதில் மாற்றுக் கருத்தில்லை.

ஆனால் இந்தத் திட்டம் யாருக்காக என்பது, சுரேன் சுரேந்திரனை இயக்கும் குறித்த சர்வதேச தன்னார்வ நிறுவகத்துக்கு மாத்திரமே தெரிந்திருக்கும் அதேநேரம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மங்கள சமரவீரவின் முயற்சியைத் தொடருகிறார் என்பதற்கும் இந்தத் திட்டம் சிறந்த உதாரணம். சுமந்திரன் பின்னணியாக இருக்கிறார் என்பதும் தெரிகிறது. ஏனெனில் 2015 இல் ரணில் பிரதமராக இருந்தபோது ஒற்றையாட்சிக்குள் சமஷ்டி என்ற கோஷத்துடன் முன்வைக்கப்பட்ட தீர்வுப் பொதிக்கு ஒப்பானதாக இமாலயப் பிரகடனத்துக்குரிய அணுகுமுறை அமைந்துள்ளது.

13 ஆவது திருத்தச் சட்டத்தை இரத்துச் செய்ய வேண்டுமென மார் தட்டிய மிலிந்த மொறகொட, இலங்கை ஒற்றையாட்சி அரசின் அமைச்சர்களுக்குரிய முழு அந்தஸ்துடனும் இந்தியாவில் இலங்கைக்கான தூதுவராகக் கடமையாற்றுகிறார். இவர் எரிக்சொல்ஹெய்முடன் மிக நெருக்கமானவர். ஆகவே இலங்கை ஒற்றையாட்சி என்ற கட்டமைப்புக்கு ஏற்றவாறும் வல்லாதிக்க நாடுகளின் புவிசார் அரசியல் பொருளாதார நோக்கிலும் இமாலயப் பிரகடனம் அமைந்துள்ளது என்பது பகிரங்கமான உண்மை.

உலக அரசியல் ஒழுங்கு இன்று குழம்பியுள்ள நிலையிலும் பலஸ்தீனம் மீதான இஸ்ரேலின் இன அழிப்பு வெளிப்பட்டுள்ளது. இதனால் "இரு அரசுகள்" என்பதுதான் தீர்வு என்ற கருத்து உலகில் தற்போது பலமாகப் பேசப்பட்டு வருகின்றது. இந்தப் பின்னணியில் போலித்துவாரகா பற்றி பல முனைகளில் ஆராய்ந்து கொண்டிருக்கும் சில தமிழ் ஆய்வாளர்கள், இமாலயப் பிரகடனத்தின் பின்புலம் பற்றி ஆராயாமல் அமைதியாக இருப்பதன் நோக்கம் என்ன?

இந்தத் திட்டத்தை அமெரிக்காவும் சுவிட்ஸர்லாந்து போன்ற ஸ்கண்டிநேவிய நாடுகளும் வரவேற்றிருக்கின்றன. தென்னாபிரிக்க வாழ்த்தியுள்ளது. அமெரிக்கா போன்ற மேற்கு மற்றும் ஐரோப்பிய நலன்கள்சார்ந்து செயற்பட்டு வரும் ஜேர்மன், சுவிஸ் நாடுகளை மையமாகக் கொண்ட சர்வதேச தன்னார்வ நிறுவனங்கள், ஈழத்தமிழர் விவகாரத்தில் ஆங்கில நாடுகளில் வாழும் புலம்பெயர் தமிழர்களையே இந்தத் திட்டத்தில் ஈடுபடுத்தியிருப்பதையும் இங்கு நோக்க வேண்டும். இந்தத் தன்னார்வ நிறுவனங்களின் தேவைக்கும் அந்த நிறுவனங்களில் தலைமையிலும் நடத்தப்படும் கூட்டங்களில் பங்குகொள்ளாமல், தமிழ்த் தேசியக் கட்சிகளும் சிவில் சமூக அமைப்புகளும் புலம்பெயர் தமிழ் அமைப்புகளும் ஒரு புள்ளியில் ஒருமித்த குரலில் செயற்பட்டாலேயே எந்த ஒரு வல்லாதிக்க நாடுகளையும் அணுக முடியும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புராதனகால யாழ்ப்பாணத்தில் பௌத்தமும் தமிழும்



சி. பத்மநாதன்
*தகைசார் பேராசிரியர்*
*பேராதனைப் பல்கலைக்கழகம்*
*வேந்தர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

**கந்தரோடையிற் பௌத்த சமயச் சின்னங்கள்**

யாழ்ப்பாணக் குடாநாட்டில் இதுவரை, கி.பி. ஏழாம் நூற்றாண்டு வரையான காலத்துக்குரிய தொல்பொருட் சின்னங்கள் 18 இடங்களில் அடையாளங் காணப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்பது இடங்களில் பௌத்தசமயச் சின்னங்கள் கிடைத்துள்ளன. அவை கந்தரோடை, வல்லிபுரம், மாகியப்பிட்டி, சுன்னாகம், நிலாவரை (நவக்கிரி), திருவடிநிலை, காரைநகர்(வேரப்பிட்டி), வேலணை(திசைமமுவை), நெடுந்தீவு என்பனவாகும்.

யாழ்ப்பாணத்திலே புராதன காலத்தில் நிலவிய பௌத்த சமயம் மூன்று விதமான சிறப்புக்களை உடையது என்பது அறிஞர் சிலரின் கருத்தாகும். அவை மகாயானம் சார்ந்தவை, வாணிபத்தை ஆதாரமாகக் கொண்டவை, பெருங்கற் பண்பாட்டுத் தொடர்புடையவை என்பனவே அவ்வாறு அவர்கள் அடையாளங் கண்டுள்ள சிறப்பம்சங்களாகும். இவற்றில் முதலிரண்டும் மேலும் ஆய்வு செய்து உறுதிப்படுத்தப்பட வேண்டியவை. ஆயினும் அவை பெருங்கற்காலப் பண்பாட்டுடன் தொடர்புடையவை என்பது உறுதியான ஒன்றாகும். அந்தத்தொடர்பு ஈமக் கல்லறைகளின் கட்டுமான முறை, கட்டுமாணங்களிலும் சிற்பங்களிலும் பாவனைப் பொருட்களிலும் எழுதப்பட்டுள்ள மொழி என்பன அந்த அம்சங்களாகும். கந்தரோடையில், ஒரு சிறிய இடத்தில், அதிக இடைவெளிகளின்றிச் செறிந்து காணப்படும் தூபிவடிவங்கள் விசித்திரமானவை. அவ்வாறான கட்டுமானங்களை இலங்கையில் வேறெங்கும் காணமுடியவில்லை. ஆயினும், ஆந்திர தேசத்திலே பௌத்தசமய தலங்களான அமராவதி, நாகார்ஜுன கொண்ட, குண்டுபள்ளி போன்றவற்றில் இவற்றைப் போன்ற கட்டுமானங்கள் அமைந்துள்ளன. அவற்றை ஈமத்தலங்களிலுள்ள கட்டுமானங்களாக அறிஞர் சிலர் அடையாளங் கண்டுள்ளனர். பெருங்கற்காலப் பண்பாட்டு மக்களிடையிலே பௌத்தசமயம் பரவிய பொழுது பௌத்தசமயச் சிந்தனைகளுக்கு ஏற்றவாறு ஈமத்தலத்துக்குரிய கட்டுமான முறையை மாற்றியமைத்தமையின் அடையாளங்களாகவே அமராவதி முதலான இடங்களிற் செறிந்து காணப்படும் அளவிற் சிறிய கட்டமானங்களைக் கொள்ளமுடிகின்றது.

தொல்குழிப்படுத்தல், தாழியிற் கவித்தல், தாழ்வையின் அடைத்தல் என்னும் மூவகையான ஈம அடக்கறைகளைப் பற்றி மணிமேகலையிற் குறிப்பிடப்பட்டுள்ளது. ஈமப் பள்ளிப் படை (Dolmen) ஈமக்கல்லறை, ஈமக்கல்லறையினை மூடிய கற்குவை, கல்வட்டம் என்பன பெருங்கற் காலப் பண்பாட்டு ஈமக் கட்டுமானங்களின் தரைமேலான தோற்றங்களாகும். அந்தப் பண்பாட்டுக்குரிய மக்கள் பௌத்தராகி விட்டதும் அண்டவடிவமான சேதியம் அவர்களின் ஈமக்கட்டுமானங்களின் தரைத்தோற்ற வடிவமாகிவிட்டது.


தாதுக்களைப் பேழைகளிற் புதைக்கும் இடங்களிலே தாது கோபுரங்களைப் அமைக்கவேண்டும் என்பது பௌத்தசமய நூல்கள் சொல்லும் நியதியாகும். தாதுக்கள் சரீர தாது, பரிபோகிகதாது என இருவகைப்படும்.

கந்தரோடையில் அமைந்திருக்கும் சேதியம் போன்ற சிறிய அல்லது மிதமான அளவுடைய கட்டுமானங்களிடையே அவற்றை வலம் வந்து வழிபடுவதற்கான சுற்றுப் பாதைகளுக்குப் போதிய அளவான இடைவெளிகள் காணப்படவில்லை. எனவே, அவை வழிபாட்டிற்குரிய கட்டுமானங்களாக அமைக்கப்படவில்லை என்பது தெளிவாகின்றது. அவை காலஞ்சென்ற பௌத்த துறவிகளின் ஈமப்பள்ளிப் படைகளாக அமைந்தவை என்று கொள்வதற்கான காரணமுண்டு. அவற்றுட் சிலவற்றை அகழ்வு செய்தபொழுது ஈமத் தாழ்வைகள் அடையாளங் காணப்பட்டுள்ளன.

கந்தரோடையில் ஈமத்தலத்திலே இறந்துபோன பௌத்த துறவிகளின் சடலங்களைத் தாழ்வைகளிற் புதைத்து அவற்றின் மேலே பள்ளிப்படையாகத் தூபி போன்ற கட்டுமானத்தை உருவாக்கி உள்ளனர் போலத் தெரிகின்றது. வல்லிபுரம் பொன்னேட்டின் வரிவடிவங்களும் குடாநாட்டிலுள்ள பௌத்த படிமங்களும் அங்கு ஆந்திரதேசத்துப் பண்பாட்டு மரபுகளின் செல்வாக்கும் கணிசமான அளவில் ஏற்பட்டமைக்கான அடையாளங்களாகும். கந்தரோடையிற் காணப்பட்ட விகாரையினைப் பற்றி கி.பி. பதினான்காம் நூற்றாண்டில் எழுதப் பெற்ற 'நம்பொத்த' என்ற நூல் குறிப்பிடுகின்றது. கி.பி. முதன் மூன்று நூற்றாண்டுகளில் அங்கு பௌத்த பள்ளி இருந்தமைக்கான ஆதாரங்கள் அகழ்வாய்வுகளின்மூலம் கிடைத்துள்ளன. கூரையோடுகள், செங்கட்டிகள், தூண் தாங்கு கற்கள் முதலானவற்றோடு சேதியங்களின் பகுதிகளான ஹர்மிகா, சத்திராவலி என்பனவும் அங்கு கிடைத்துள்ளன. புத்தர் படிமம், புத்தர் பாதம் போன்ற வழிபாட்டுச் சின்னங்களையும் அங்கு கண்டெடுத்தனர்.



ஒரு மறைந்து போன நாகரிகத்தின் தரிசனங்கள்



ஓரிடத்திலே கூரையோடுகள் பெருந் தொகையானவை குவிந்து காணப்பட்டன. அவை பெருங்கட்டடமொன்றின் கூரை இடிந்தமையால் அவ்வாறு தென்பட்டன என்று கருதப்படுகின்றது. அவை வடிவமைப்பிலே தட்டையானவை. கட்டடமொன்றின் இடிபாடுகளிலே எண்ணிக்கையிற் பலவான தூண்தாங்கு கற்கள் கிடந்தன. தூண் தாங்கு கற்கள் நாகரின் கட்டுமானங்களுக்குச் சிறப்பாக உரியவை. அவை நாகர் பரவியிருந்த இடங்கள் எல்லாவற்றிலும் கிடைத்துள்ளன.


வடமாகாணத்திலும் கிழக்கு மாகாணத்திலும் எல்லா மாவட்டங்களிலும் கிடைத்துள்ளன. புத்தளம், கற்பிட்டி ஆகியவற்றிலும் சில இடங்களில் அவற்றை இன்னும் காணமுடிகின்றது. அவற்றில் வேறுபாடின்றித் தமிழ்ப் பிராமி வடிவங்களில் இரு சிறு வசனங்கள் எழுதப்பட்டிருக்கும. அந்த வசனங்கள் இலங்கையிலுள்ள பெருங்கற்காலப் பண்பாட்டு மக்களின் ஈமத்தலங்களிலுள்ள ஈமக் கல்லறைகளிற் காணப்படும் வசனங்களாகும். கந்தரோடையிற் காணப்படும் தூண்தாங்கு கற்களிலும் அதே வசனங்கள் தெரிகின்றன. கந்தரோடையிலுள்ள பௌத்த விகாரைகளை நாகர் இனத்தவர்கள் அமைத்தனர் என்பதற்கு இக்கற்களும் ஒருவகையான சான்றுகளாகும்.

நாகர் கந்தரோடையிற் கட்டுமானங்களை அமைப்பதற்குச் சுண்ணாம்புக்கல், பவளப்பாறை, வைரக்கல் என்பவற்றைப் பயன்படுத்தியுள்ளனர். சேதியங்கள் போன்ற அமைப்புகளின் அடித்தளங்கள் ஒரே அளவில் அறுத்துச் செதுக்கப்பட்ட பவளப் பாறைக்கற்கள், சுண்ணாம்புக் கற்கள் என்பவற்றால் உருவானவை. அண்டப் பகுதியின் உட்புறத்தை நாட்டிலே கிடைக்கின்ற வைரக்கல், சரளைக்கல் என்பவற்றினால் நிரப்பினார்கள். அவற்றின் வெளிப்புறத்தை செதுக்கிய சுண்ணாம்புக்கல், பவளப் பாறைக்கல் என்பவற்றினால் உருவாக்கினார்கள். யாழ்ப்பாணத்திலே கருங்கற்கள் கிடைக்காதமையாற் கட்டுமானங்களுக்கு அவற்றைப் பயன்படுத்தமுடியவில்லை. பௌத்தபள்ளிகளை அமைப்பதற்குச் செங்கட்டிகளே கூடுதலாகப் பயன்படுத்தப்பட்டன. கொட்டியாவத்தை, [illegible] என்பவற்றிலும் பௌத்த கட்டுமானங்களின் அழிபாடுகளிடையில் அவை கூடுதலாகக் காணப்பட்டன. வாசற்கடவு போன்ற கல்லொன்றும் கந்தரோடையில் அடையாளங் காணப்பட்டது. நாகரின் கட்டுமான முறையில் வாசற்கடவு என்பதும் ஒரு சிறப்பான அம்சமாகும். அவர்கள் அமைத்த புராதனமான வழிபாட்டுத் தலங்களில் அரைவட்ட வடிவிலான கல்லொன்று அமைந்திருக்கும். எழுத்துமுறை வழக்கத்தில் வந்தமையின் பின்பு அதிலே கடவுட்பெயரை அல்லது கட்டுமானத்தின் பெயரை எழுதுவது வழமை. திருகோணமலை மாவட்டத்திலுள்ள அகஸ்திய ஸ்தாபனம், மட்டக்களப்பு மாவட்டத்திலே படுவான்கரையிலுள்ள பாலாமடு என்னுமூரில் அமைந்துள்ள நாகவழிபாட்டு நிலையம் என்பன இதற்கான சிறந்த உதாரணங்களாகும்.

நாகர் நாகவழிபாடு, சைவசமய வழிபாடு, பௌத்த சமய வழிபாடு என்பவற்றுக்குரிய நிலையங்களை உருவாக்கிய பொழுது, வேறுபாடின்றி, அவற்றின் நுழைவாசலிற் கடந்து செல்வதற்கென்று ஓர் அரைவட்டக் கல்லை வைப்பது வழமை. பிற்காலத்தில் அமைக்கப்பட்ட பௌத்த சமய கட்டுமானங்கள் நாகரின் கலைப்பாணியை அடிப்படையாகக் கொண்டவை. எனவே வாகல் கட என்னும் அரைவட்டக் கல் பௌத்த கட்டடங்களிலும் ஓரம்சமாகிவிட்டது. வாஹல்கட என்பது வாசல் கடவு என்னும் தமிழ்மொழித் தொடரின் சிங்கள மயமாக்கம் பெற்ற வடிவமாகும். இடைக்காலத்திலே பௌத்த சமயக் கோயில்களில் வாசற்படியாக வைக்கப்படும் வாஹல்கட என்பதை குதிரை, சிங்கம், யானை, காளை ஆகிய விலங்குகளின் அணிவரிசைகள் பொருந்திய அலங்கார வேலைப்பாடுகள் அமைந்த பண்பாட்டுச் சின்னமாக உருவாக்கினார்கள். இதனைப் பற்றி மேலிடங்களில் உள்ளவர்களின் அறியாமை இந்நாட்களில் அரைவட்டக்கல் காணப்படும் சைவசமயக் கோயில்களுக்குப் பேரிடராகிவிட்டது.

**பௌத்த சிற்பங்கள்**

இலங்கையில் உன்னதமான வேலைப்பாடுகளான பௌத்த சிற்பங்கள் பெருந்தொகையிலே காணப்படுகின்றன. ஆதியில் தர்மச்சக்கரம், புத்தர்பாதம், போதிமரம் என்பனவே வழிபாட்டுச் சின்னங்களாக விளங்கின. ஆயினும் கிரேக்கரின் செல்வாக்கினால் உருவ வழிபாடு இந்திய சமயங்களிடையே வழமையாகிவிட்டது. இலங்கையில் இரண்டாம் நூற்றாண்டளவில் புத்தர் படிமங்களை வழிபடுவது வழமையாகிவிட்டது. யாழ்ப்பாணத்திலுள்ள புத்தர் படிமங்கள் கி.பி. 300-500 வரையான காலப்பகுதிக்குரியனவாகத் தெரிகின்றன. கந்தரோடை, சுன்னாகம், வல்லிபுரம், நவக்கிரி ஆகியவிடங்களிற் புத்தர் படிமங்கள் காணப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்துப் பௌத்த சமயந் தொடர்பான கலைப்பாணியில் ஆந்திரதேசத்து அமராவதி போன்றவற்றின் கலைமரபுகளின் செல்வாக்கு மிகுந்தளவிலே காணப்படுகின்றது. அமராவதியிற் போல யாழ்ப்பாணத்திலும் சிற்ப வடிவங்களுக்குரிய தலை, கைகள், கால்கள் முதலானவற்றை வெவ்வேறாகச் செதுக்கி உடலின் நடுப்பாகத்தோடு பொருத்தும் முறை வழங்கியது.



ஒரு மறைந்து போன நாகரிகத்தின் தரிசனங்கள்

சுன்னாகத்திலே 1917 இல் போல் ஈ பீரிஸ் கண்டெடுத்த சிற்பம் இவ்வாறாக அமைக்கப்பட்டது. நின்ற கோலமான இப்படிமம் 12 அடி உயரமானது. அதன் மார்பகம் 20 அங்குலம் அகலமானது. அதிலே தலைமயிர் நத்தை ஓடு போலச் சுருண்ட கோலமானது காதுகள் மிக நீளமானவை, மூக்கு நீண்ட கோலமானது உயிரோட்டமான வடிவமைப்பு அதன் சிறப்பான அடையாளமாகும் புன்சிரிப்புடன் விளங்கும் கோலத்து முகபாவம் அமைந்துள்ளமை மற்றுமொரு சிறப்பாகும். அதனை அநுராதபுர அருங்காட்சியகத்தில் வைத்துள்ளனர்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பேராசிரியர் செ.யோகராஜா

○ இயல்வாணன்

இலக்கிய வாசிப்பும் தேடலும், தேடலின் வழியான எழுத்தாக்கமும், ஆக்கபூர்வமான விமர்சனமும் எனத் தனது வாழ்வில் இடையறாது இயங்கியவர் பேராசிரியர் செ.யோகராஜா. பேராசிரியர் நா.சுப்பிரமணியன் போல இடையறாத வாசிப்பும், தேடலும் கொண்டவராக இவர் விளங்கினார். இவருடைய தமிழிலக்கிய ஆய்வுகளின் கனதி அந்த வாசிப்பைத் துலாம்பரப்படுத்தும்.

17.12.1949 இல் வடமராட்சியின் கரணவாயில் பிறந்த செல்லையா யோகராஜா தனது ஆரம்பக்கல்வியை கரணவாய் வித்தியாலயத்திலும், இடைநிலைக் கல்வியை நெல்லியடி மத்திய கல்லூரியிலும் பெற்றுக் கொண்டார். தொடர்ந்து கொழும்புப் பல்கலைக்கழகத்தில் கற்று தமிழ் சிறப்புக் கலைமாணிப் பட்டத்தைப் (1971) பெற்றுக் கொண்டார். அதே பல்கலைக்கழகத்தில் தத்துவமாணிப் பட்டத்தையும்(1972) பெற்றுக்கொண்டார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா (1984), முதுகலைமாணி



(1990), கலாநிதி (1999) பட்டங்களையும் பெற்றுக் கொண்டார். யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தால் நடத்தப்பட்ட பிரவேச பண்டிதர் பரீட்சையிலும், சைவ பரிபாலன சபை நடத்திய சைவப்புலவர் பரீட்சையிலும் இவர் சித்தியடைந்திருந்தார்.

1972இல் பல்கலைக்கழகக் கல்வியை நிறைவு செய்த பின்னர் தபால் அதிபராக கொழும்பிலும், மகோவிலும்(1972-76) கடமையாற்றினார். 1976இல் பட்டதாரி ஆசிரியர் நியமனம் பெற்று நுவரெலியா கோல்புறூக் தமிழ் மகா வித்தியாலயத்தில் கடமையாற்றினார். தொடர்ந்து கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியில் கடமையாற்றினார். இங்கு கடமையாற்றியவேளை மாணவர்களுக்கு ஆற்றிய சிறந்த சேவைக்காக வடமராட்சி வலயத்தால் நல்லாசிரியர் விருது (1980) இவருக்கு வழங்கப்பட்டது. 1991ஆம் ஆண்டு கிழக்குப் பல்கலைக்கழகத்தில் மொழித்துறை விரிவுரையாளராகப் பணியில் இணைந்து கொண்டார். சிரேஷ்ட விரிவுரையாளராகத் தரம் உயர்ந்த இவர் 2009இல் பேராசிரியராக உயர்வு கண்டார். பல்கலைக்கழகத்தில் இவர் பணியாற்றிய காலத்தில் பல்வேறு கட்டுரைகளையும், ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதியுள்ளார். அத்துடன் சர்வதேச ஆய்வரங்குகளிலும் கலந்து கொண்டு ஆய்வேடுகளைச் சமர்ப்பித்துள்ளார். தமிழ்நாட்டிலும், இங்கிலாந்து, பிரான்ஸ், சுவிற்சர்லாந்து, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளிலும் நடைபெற்ற ஆய்வு மாநாடுகளில் இவர் ஆய்வுக் கட்டுரைகளை வாசித்துள்ளார். பல்கலைக்கழக மாணவர்களை நன்கு ஆற்றுப்படுத்திய இவர், தான் இனங்கண்ட ஆற்றல்மிகு மாணவர்களுக்கு எழுத்துத்துறையில் வாய்ப்புகளையும் ஏற்படுத்திக் கொடுத்து, அவர்களை எழுத்தாளர்களாக மலரச் செய்துள்ளார்.

பல நூல்களையும், சிறு பிரசுரங்களையும், தொகுப்பு நூல்களையும் இவர் வெளியிட்டுள்ளார். ஈழத்துத் தமிழ் நாவல் வளமும் வளர்ச்சியும், இன்றைய இலக்கியங்களில் இதிகாசப் பெண் பாத்திரங்கள் (2003), ஈழத்து நவீன கவிதை புதிய உள்ளடக்கங்கள், புதியதரவுகள், புதிய போக்குகள் (2007), ஈழத்து முச்சந்தி இலக்கியம் (2013), ஈழத்து இலக்கியமும் இதழியலும் (2007), பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை முதலிய நூல்களை இவர் ஆக்கியளித்துள்ளார்.

இலக்கியத் தேட்டம் ஈழத்து நவீன இலக்கியம் (2000), கிழக்குப் பல்கலைக்கழகத்தில் சி.மௌனகுருவின் தடங்கள் (2014), ஈழத்து நவீன உருவாக்கத்தில் பெண் ஆளுமைகள் (2019), சுவாமி விபுலானந்தரும் ஆறுமுகநாவலரும் (1992), ஈழத்து நவீன இலக்கிய வளர்ச்சியில் வ.அ.இராசரத்தினத்தின் தடங்கள், ஈழத்து நவீன உருவாக்கத்தில் மண்டூர் பாரதியின் பங்களிப்பு, சங்ககாலம் முதல் சமகாலம் வரை(மௌனகுருவுடனான நேர்காணல்கள்), ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்கு வடமராட்சியின் பங்களிப்பு (2011), ஈழத்துத் தமிழ்ச் சூழலில் நவீனமயமாக்கமும் அதன் வெளிப்பாடுகளும் முதலிய இவரது சிறு பிரசுரங்களும் வெளியிடப்பட்டுள்ளன. இவற்றில் பெரும்பாலானவை இவரது ஆய்வுரைகளின் பிழிவாகும்.


இவரது தொகுப்பு முயற்சிகளும் கவனிக்கத்தக்கவை. முக்கியமாக சிறுவர் இலக்கியம் சார்ந்த இவரது கவனப்படுத்தல்கள் விதந்து கூறத்தக்கன. ஈழத்துச் சிறுவர் இலக்கியக் களஞ்சியம் (2007), ஈழத்துச் சிறுவர் பாடல் களஞ்சியம் (2007), அம்மாவைத் தேடிய குஞ்சுகள்(சிறுவர் கதைத் தொகுப்பு), ஈழத்து வாய்மொழிப் பாடல் மரபு (2002), மாற்று நோக்கில் சில கருத்துகளும் நிகழ்வுகளும் (2004), புதுத்துளிர் நூறு (சு.வில்வரத்தினத்துடன் இணைந்து 2004), ஈழத்துச் சிறுவர் அறிவியல் பாடல்கள்(2003), சுவாமி விபுலானந்தர் பன்முகப் பார்வை, பேராசிரியர் செ.யோகராஜாவின் ஈழத்து நவீன இலக்கியங்கள் படைப்பாளர்கள் பார்வைகள் முதலான தொகுப்பு நூல்கள் வெளிவந்துள்ளன.

ஆரம்ப காலங்களில் கருணையோகன் என்ற புனைபெயரில் சிறுகதைகளையும். கவிதைகளையும் எழுதிய இவர் பிற்காலங்களில் விமர்சனம், ஆய்வுத் துறைகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். இவரது அகதிகள்

## முன்றில் 24

என்ற சிறுகதை சிங்களத்தில் மொழிபெயர்க்கப்பட்டது. இவரது ஓய்வுக்காலத்தையொட்டி மட்டக்களப்பில் பெருவிழா ஏற்பாடு செய்யப்பட்டு, அங்கு வெளியிடப்பட்ட கருணையோகம் மலரில்(2016) இவர் ஆற்றிய பன்முக சேவையை நாம் அறிந்து கொள்ளலாம். வடமராட்சியில் பிறந்து, மலையகம் தலவாக்கலவில் திருமண பந்தத்தில் நுழைந்து, மட்டக்களப்பில் பணி செய்த பன்மைத்துவம் இவரது பேராளுமையாகும்.

இவரது நூல்களுக்கு இலங்கை இலக்கியப் பேரவை விருது (2007 பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை), சாகித்திய விருது(2007 ஈழத்து நவீன கவிதை புதிய உள்ளடக்கங்கள், புதிய தரவுகள், புதிய போக்குகள்), வட மாகாண விருது(2007 ஈழத்து நாவல் வளமும் வளர்ச்சியும், 2008 ஈழத்து இலக்கியமும் இதழியலும்) என்பன கிடைத்துள்ளன. மண்முனை வடக்கு கலாசாரப் பேரவையால் வழங்கப்பட்ட தேனக கலைச்சுடர் (2013), சுவிஸ் தமிழ் இலக்கிய சங்கத்தால் வழங்கப்பட்ட நிறைதமிழ் விருது -2014), வடமராட்சி தெற்கு - மேற்கு கலாசாரப் பேரவையால் வழங்கப்பட்ட கலைவாரிதி2011) என்பன இவரது வாழ்நாள் சேவைக்குக் கிடைத்த கௌரவங்களாகும். 07122023 இல் தனது 73வது வயதில் காலமான பேராசிரியர் செ.யோகராஜா ஈழத்து இலக்கியத்தைத் திசைப்படுத்தத்தக்க ஆவணப்படுத்தல்களைச் செய்துள்ளார். அவை அடுத்து வரும் ஆய்வாளர்களுக்குப் பெரிதும் உதவும். அவருக்கு எமது அஞ்சலிகளைச் சமர்ப்பிப்போமாக.



## உரிய நெறி காண்க...

விதைத்ததை அறுத்து வினைப்பயன் எடுக்கும்
படிப்பினை தானோ சொல்க–நாட்டு
நடப்பிதைப் பார்த்தால் நயப்பதுவா இல்லை
முறைப்பதுவா எது எங்ஙனமோ துயரே!

வலிக்கிறது நன்று வதைக்கிறது – எரி
பொருளதுவின் நிலையிதுவைக் – காண
துடிக்கிறது நெஞ்சு துவழ்கிறது மோச
எரிவாயு சமைப்பதற்கு இன்றி..

குடிப்பதற்கு இதமாய் சுவைத் தேநீருமில்லை
வருத்தமிது ஒன்றே போதும் – நாட்டில்
இருந்த வளம்எங்கேஇருப்பு நிலை இன்றும்
வறண்டிடுமா நாம் மறைந்திடமுன் சொல்க..

இருப்பதனை விட்டு பறப்பதற்கு சென்ற
எங்கள் குணவியல்புகளின் மாற்றம்
வளர்ச்சிகளை கண்டு மன உணர்ச்சிகளை விட்டு
மனித குணம் நாம் மறக்கலானோம்.

படைத்தவனும் அதர்மங்களைப் பார்த்தான்–இனி
திருத்த வழி எதுவெனவே குழம்பியவன் நின்றான்..
வருத்தமுறச் செய்வதனால் விழித்திட்டும் நன்மை
விதைத்ததனை அறுக்க
இப்படிப்பினையைக் கொடுத்தான் உண்மை.

அன்பு நெறி காட்டி அழுக்குகளை நீக்கி
மனிதருக்குரிய நல்ல மாண்புகளை வளர்த்து
நனி நல்ல வாழ்க்கை தனை வாழ்வாங்கு வாழ
உரிய நெறி உலகத்திலே இறையடியைத் தொழுக.....

**கலைஞானச்சுடர் ஸ்ரீமதி சுபாஷினி,**
கொழும்பு.

## ஒளிப்பார்வை

நிலவு முற்றத்தில்
நொருங்கிக்கிடக்கிறது

மரங்களில்
வெளிறி உலர்ந்த
இலைகளின் இடுக்குகளால்
நிலவு கொட்டிச்சரிக்கும்
ஒளித்துண்டங்களை
குழந்தைகள்
பாத்திரங்களில் பொறுக்கி
பெரும் மலையை
கட்டிக்கொண்டிருக்கிறார்கள்

எப்போதும்
குழந்தைகளுக்கு
ஒரு குழந்தையாய்
இருக்கும் நிலவு
பாட்டியின் மடியில்
ஒளியிறகுகளை உதிர்த்திக் கொட்ட
குழந்தைகளைப் பார்த்து
பாட்டி சொல்கிறாள்
நிலவு வானத்திலென!

- கருணை ரவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் கைவண்ணம்



சு.மஹிசன்
தரம் - 1
யா/ செட்டித்தெரு
மெதடிஸ்த பாடசாலை



சு. ஆருஷன்,
தரம் - 4B
யா/ செட்டித்தெரு
மெதடிஸ்த பாடசாலை



ஹ.கிருஸ்ணவி
தரம் - 2B
யாழ்.இந்து மகளிர்
ஆரம்பப் பாடசாலை



அபிஷேக்
தரம் - 1
யா/உடுவில் மகளிர்
கல்லூரி



கிஷாந் ரவிச்சந்திரன்
தரம் - 9
யா/ உடுவில் மகளிர்
கல்லூரி



ப. வெண்பா
வயது 4
உரும்பிராய்
கிட்ஸ் பார்க்





அ.நிதுஷனா
தரம் - 7F
யா/வேம்படி மகளிர்
உயர்தரப் பாடசாலை



## மாணவர்களே!

நீங்களும்
உங்கள் கைவண்ணங்கள்,
ஆக்கங்களை அனுப்பலாம்.

அனுப்ப வேண்டிய முகவரி!

உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555

# வேட்டையாடும் தாவரம்

பூச்சிகளை சிறு உயிரினங்கள் சாப்பிடுவதைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். ஆனால், பூச்சிகளை உண்ணும் தாவரம் பற்றி உங்களுக்குத் தெரியுமா? அப்படி ஒரு தாவரம் உள்ளது. அதன் பெயர் வீனஸ் ஃப்ளைட்ராப்!

வட அமெரிக்காவில் இந்தத் தாவரம் உள்ளது. ஈரமான சதுப்பு நிலப் பகுதிகளில் இவை வளர்கின்றன. இவற்றின் இலைகள் 3 செ.மீ. முதல் 12 செ.மீ நீளம் வரை வளரக்கூடியது. இலைகளின் அடிப்பாகம் பச்சையாகவும் மேல் பாகம் சிவப்பாகவும் இருக்கும். இலையை இரண்டாக மடிக்கும்படி இருக்கும். ஓரங்களில் நீண்ட முட்கள் வரிசையாக நீட்டிக்கொண்டிக்கும். இலையின் நடுப்பகுதியில் ஜீரணச் சுரப்பிகள்கூட உள்ளன.

இப்படி அழகான சிவப்பு இலைகளைப் பார்த்ததும் பூச்சிகள் ஆவலோடு அருகில் வருகின்றன. இலை மீது அமர்ந்தவுடன், பூச்சியைப் பிடிப்பதற்குத் தயாராகிவிடுகிறது. பூச்சி ஊர்ந்து போகும் போது, இலையில் உள்ள உணர் முடிகளிலிருந்து மின் சமிக்ஞைகள் வெளிவந்து, இலையை மூட வைத்துவிடுகின்றன. பூச்சி சுதாகரிப்பதற்குள் மிக வேகமாக இலை மூடிவிடும். இலையின் இரு பக்கங்களிலும் உள்ள முட்கள் ஒன்றோடு ஒன்று இறுக்கிப் பிடித்துக்கொள்கின்றன. கொஞ்சம் கொஞ்சமாகப் பூச்சியை இறுக்கிக்கொண்டே போனதும், ஒருகட்டத்தில் பூச்சிகள் இறந்து போய்விடுகின்றன.





அ .யதிஷ்கா
தரம் - 2'c'
யா/கொக்குவில் இந்து
ஆரம்பப் பாடசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



○ கே.வி.தவராசா



# அமிர்தலிங்கம் கொலை வழக்கு

## 4 நீதிக்கான நெடும்பயணம்

1977.07.21 ஆம் திகதி இடம்பெற்ற எட்டாவது நாடாளுமன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி படுதோல்வியடைந்து ஜே.ஆர். ஜெயவர்த்தன தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி வெற்றிபெற்றது. எட்டாவது நாடாளுமன்றத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி எதிர்க்கட்சியானது. கூட்டணியின் தலைவரான அ.அமிர்தலிங்கம் 04.08.1977 முதல் 24.10.1983 வரை எதிர்க்கட்சித் தலைவராக இருந்தார். முதன் முறையாக தமிழர் ஒருவர் எதிர்க்கட்சித் தலைவராகச் செயற்பட்ட காலப்பிரிவும் இதுவேயாகும். முதலாவது தமிழ் எதிர்க்கட்சித் தலைவர் என்ற பெருமையைப் பெற்ற அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் 1989 ஆம் ஆண்டு ஆடி மாதம் 13 ஆம் திகதி மாலை 7.35 மணியளவில் கொழும்பு 07 புல்லர்ஸ்லேன், இலக்கம் 410/27 இலக்க வீட்டில் வைத்து ஆயுததாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

துப்பாக்கி வெடிக்கும் சப்தம் கேட்டு பதைபதைப்போடு கீழ் மாடியிலிருந்து மேல்மாடிக்கு ஓடிச்சென்ற அமிர்தலிங்கத்தின் மனைவி மங்கையற்கரசி கண்ட காட்சி அவரது நெஞ்சை உறைய வைத்தது.

அங்கே யோகேஸ்வரன் இரத்த வெள்ளத்தில் மிதந்து கொண்டிருந்தார். முருகேசு சிவசிதம்பரம் அதிக குருதி வெளியேற்றத்தாலும் அதிர்ச்சியினாலும் மயக்கமுற்றிருந்தார். அமிர்தலிங்கம் அமரத்துவம் அடைந்திருந்தார்.

கொலையில் ஈடுபட்ட ஆயுததாரிகளான ராசலிங்கம் அரவிந்தன் அல்லது விசு, அலோசியஸ் லியோன் அல்லது பீட்டர் கந்தையா, சிவகுமாரன் அல்லது அறிவு என்ற மூவரும் சம்பவ இடத்திலேயே அமிர்தலிங்கத்தின் மெய்ப்பாதுகாவலர்களால் சுட்டுக்கொல்லப் பட்டனர். ஆயினும் இந்தக் கொலைச்சம்பவத்தில் நான்கு இளைஞர்கள் சம்பந்தப்பட்டிருந்ததாக பொலிஸாரின் புலன்விசாரணையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.



அதன்பிரகாரம் கொலையில் தொடர்புபட்டவர் என்ற சந்தேகத்தின் பேரில் பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட வின்சென்ட் வில்லியம் மரியதாஸ் என்பவர் தடுப்புக்காவல் உத்தரவின்கீழ் கொம்பனித் தெரு பொலிஸ் நிலையத்தில் இரண்டு வருடங்களாக தடுத்து வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். கொலையில் ஈடுபட்ட ஆயுததாரிகளான ராசலிங்கம் அரவிந்தன் அல்லது விசு, அலோசியஸ் லியோன் அல்லது பீட்டர் கந்தையா, சிவகுமாரன் அல்லது அறிவு என்ற மூவருடன் சேர்ந்து அமிர்தலிங்கத்தைக் கொலை செய்யச் சதி செய்ததாகப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் தண்டனை விதிக்கக் கூடிய குற்றத்தைப் புரிந்ததாக 1991ஆம் ஆண்டு ஜூலை மாதம் 06ஆம் திகதி வின்சன்ட் வில்லியம் மரியதாசுக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் சட்டமா அதிபரினால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.



கொலைச்சம்பவம் நடைபெற்றபொழுது கொலை அந்த வீட்டில் தங்கியிருந்த, தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவரான முருகேசு சிவசிதம்பரம், திருமதி மங்கயற்கரசி அமிர்தலிங்கம், சரோஜினி யோகேஸ்வரன், சோமசுந்தரம் சேனாதிராஜா மற்றும் பாதுகாப்புக்காகக் கடமையிலிருந்த பொலிஸார் ஆகியோரின் வாக்குமூலங்களின் பிரதிகளும் குற்றச்சாட்டுப் பத்திரத்தில் இணைக்கப்பட்டிருந்தன.

குற்றப்பத்திரத்தில் எதிரியாகப் பெயர் குறிப்பிடப்பட்டிருந்த வில்லியம் மரியதாசின் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தைப் பதிவு செய்த பொலிஸ் அத்தியட்சகர் ஜி.ஆரியசேன, புலன் விசாரணை செய்த அதிகாரியான ஆனந்த கல்கமுவ, சட்ட மருத்துவ அதிகாரிகளான திருமதி காரியவசம், பிரேமரத்ன, சோமசுந்தரம் நிரஞ்ஜன், அமிர்தலிங்கத்தின் மெய்ப்பாதுகாவலர்களாகக் கடமையாற்றிய பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஆகியோர்உட்பட 27 சாட்சிகளும், சட்டமருத்துவப் பரிசோதனை அறிக்கைகள், பிரேத பரிசோதனை அறிக்கைகள் உட்பட 16 தடயப் பொருள்களும் சட்டமா அதிபரினால் குற்றச்சாட்டுப் பத்திரத்தில் பெயர் குறிப்பிடப்பட்டிருந்தன. இந்த வழக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி T.B.வீரசூரிய முன்னிலையில் 1992 ஆம் ஆண்டு மாசி மாதம் 26ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

**உண்மை விளம்பல் விசாரணை**

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதியான மரியதாசினால் சுய விருப்பத்தில் பொலிஸாருக்குக் கொடுக்கப்பட்டதாகக் கூறப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை எதிரியான வின்சன்ட் வில்லியம் மரியதாஸ் தனது சொந்த விருப்பத்தில் சுயாதீனமாக உதவிப் பொலிஸ் அத்தியட்சகருக்கு வழங்கினாரா? அல்லது சுயவிருப்பின்றி பலவந்தமாகப் பெறப்பட்டதா? என்ற உண்மைவிளம்பல்விசாரணை முதலில் ஆரம்பிக்கப்பட்டது.

இந்த விசாரணையில் அரசு தரப்பில் எதிரியான மரியதாசின் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் என்று கூறப்பட்ட வாக்குமூலம் எதிரியினால் சுய விருப்பத்தின் பெயரில் பொலிஸாருக்கு வழங்கப்பட்டது என்பதை நிரூபிப்பதற்காக அந்த வாக்குமூலத்தை பதிவு செய்த சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜி.ஆரியசேன அரசுதரப்பின் முதல் சாட்சியாக அழைக்கப்பட்டார்.

பொலிஸ் அத்தியட்சகர் ஜி.ஆரியசேன தனது சாட்சியத்தில் எதிரி தனது சுய விருப்பத்தின் பேரில் தனக்குக் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் அளித்ததாக கூறினார். ஆனால் எதிரி தரப்பில்குற்ற 'ஒப்புதல் வாக்குமூலம் சுயமா கக்கொடுக்கப்படவில்லை. 10.08.1989, 11.08.1989, 12.08.1998, 13.08.1989 ஆகிய திகதிகளில் தொடர்ச்சியாக நான்கு தினங்கள் சந்தேகநபரைத் துன்புறுத்தி, சித்திரவதை செய்தே குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை பொலிஸார் பலவந்தமாகப் பெற்றனர்' என வாதம் முன்வைக்கப்பட்டது. சித்திரவதையினிடையே குற்ற ஒப்புதல் வாக்குமூலம் என்ற ஆவணத்தில் பலவந்தமாக கையெழுத்துப் பெறப்பட்டதாக எதிரியின் தரப்பில் வாதிடப்பட்டது.

மேலும் எதிரி போதியளவு ஆங்கிலஅறிவு அற்றவரெனவும் ஆங்கிலத்தில் பதியப்பட்டுள்ள இந்தக் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தில் என்ன விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதை எதிரி புரிந்து கொள்ளவில்லையெனவும் ஒப்புதல் வாக்குமூலத்தில் ஆங்கிலத்தில் என்ன பதியப்பட்டுள்ளது என்பதை எதிரிக்கு பொலிஸாரினால் வாசித்துக் காட்டப்படவில்லையெனவும் ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ளதை தமிழ் மொழியில் மொழிபெயர்த்து எதிரிக்கு விளங்கப்படுத்தியதாக எந்தவித பதிவும் பதியப்படவில்லையெனவும் சுட்டிக்காட்டப்பட்டது.


இதில் மிக முக்கியமான விடயமானது யாதெனில் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தைத் தட்டெழுத்துச் செய்த சாட்சியான பீரிஸ் என்பவர் அரசுத் தரப்பினால் சாட்சியத்துக்கு அழைக்கப்படவில்லை. மேலும் தட்டெழுத்துச் செய்த பீரிஸ் தான்தான் தட்டெழுத்துச் செய்ததாக உறுதி செய்தார். ஆனால், பொலிஸ் அத்தியட்சகர் ஜி.ஆரியசேன தனக்குக் கூறியதையே தான் தட்டெழுத்துச் செய்ததாகக் அவர் கூறினார். இது நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

இதிலிருந்து மிகத் தெளிவாகத் தெரியவருகிற விடயம் யாதெனில் பொலிஸ் அத்தியட்சகர் ஆரியசேன கூறிய விடயங்களே 27 பக்கங்கள் தட்டெழுத்தாளரான பீரிஸினால் தட்டெழுத்துச் செய்யப்பட்டுள்ளன. குற்ற ஒப்புதல் சுயமாகக் கொடுக்கப்பட்டதா அல்லது பலவந்தமாகப் பெறப்பட்டதா என்ற விசாரணையின் முடிவில் நீதிபதி குற்ற ஒப்புதல் வாக்குமூலம் சுயமாகவே அளிக்கப்பட்டதாகக்கட்டளை வழங்கியதுடன் அரச தரப்பினருக்கு குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தைச் சாட்சியமாக ஏற்று வழக்கில் அடையாளப்படுத்தவும் மேல் நீதிமன்ற நீதிபதி அனுமதி வழங்கினார். அதைத் தொடர்ந்து எதிரியினால் சுயமாக வழங்கப்பட்டதாகக் கட்டளைவழங்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலம் அரச தரப்பின் முக்கியமான சான்றாகவும் எதிரிக்கு பாதகமான சான்றாகவும் நீதிமன்றால் ஏற்றுக்கொள்ளப்பட்டு குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை ஒப்புறுதிப்படுத்தும் மற்றைய சாட்சிகளை அழைத்து பிரதான வழக்கைத் தொடர்ந்து நடத்துவதற்காகத் திகதி குறிப்பிடப்பட்டது.

(அடுத்த வாரம் தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாபூஷணம்
அலெக்ஸ்பரந்தாமன்
புதுக்குடியிருப்பு



# போகுமிடம்

சஞ்சீவி சிறுகதை

பொழுது மெல்லச் சரிந்து கொண்டிருந்தது. இருள் மெல்லப் பரவத் தொடங்கியிருந்தது. ஒரு காற்சுண்டு பச்சையரிசி இருந்ததில், அதை உப்புப்போட்டுக் கஞ்சி காய்ச்சி குழந்தைக்குப் பருக்கியிருந்தாள் பவளம். அவளது வயிறு பசியில் புகைந்து கொண்டிருந்தது. நேரமும் நகர்ந்து கொண்டிருந்தது.

அதிகாலைப்பொழுது புலர்ந்து கொண்டிருந்தது. குடிசையின் கோடிப்புறத்தே வளர்ந்து நின்ற வேப்பமரக் கிளையிலிருந்த சேவலொன்று கூவிக்கொள்கிறது. சேவல் கூவும் ஒலி கேட்டு, பவளம் கண்விழித்துக் கொள்கிறாள். 'ஓ... விடிஞ்சு போச்சுதா...?' எனத் தனக்குள் கேட்டுக்கொண்டவள், திரும்பி சுவரோரம் பார்த்தாள். மாணிக்கன் இன்னமும் துயில் கலையாத நிலையில் நிமிர்ந்து படுத்திருந்தான். அவனது வாய் திறந்தபடி இருந்தது. மூச்சை ஆழமாக உள்ளிழுத்தபடி... அவன் உறங்கிக் கொண்டிருந்தான். அவனுக்குப் பக்கத்தில் அவர்களது இரண்டுவயது ஆண் குழந்தை மல்லாக்கப் படுத்தபடி... சிறுநீர் ஈரத்துக்குள் கிடந்தது.

பவளத்துக்கு உடலும் உள்ளமும் சோர்வாக இருந்தன. அவள் நேற்றிரவு எதுவும் சாப்பிடவில்லை. சமைப்பதற்கு எதுவும் இருக்கவில்லை. மாணிக்கன் ஒரு தினக்கூலி. அன்றன்று ஏதோ தேடிவரும் வேலைகளை ஏற்றுச் செய்துவிட்டு, மாலைப்பொழுதில் நிறைந்த மதுபோதையுடன் வீட்டுக்கு வருவான். அவன் வரும்போது, மாலைநேர மீன்வியாபாரிகள் தவறணை முன்பாக வைத்திருக்கும் ஆற்றுநீரில் பிடிக்கப்பட்ட யப்பான் மற்றும் கௌிறு போன்ற சிறுமீன்களில் ஏதாவதொன்றை வாங்கிக் கொண்டு வருவான். அவன் வரும் நேரத்துக்குப்பின், பவளம் அடுப்பில் உலை வைத்துச் சோறாக்கும்போது, நேரம் முன்னிரவைக் கடந்து நள்ளிரவை நெருங்கிக் கொண்டிருக்கும். மாணிக்கம் போதை தெளியா மயக்கத்தோடு, குடிசைக்குள் குந்திய இடத்திலேயே படுத்துறங்கி விடுவான். இது அவர்களது வாழ்வினில் அவ்வப்போது நடந்தேறும் ஓர் அவலநிகழ்வு.

வேப்பமரக் கிளையிலிருந்த சேவல் மீண்டுமொரு முறை கூவிக் கொள்கிறது. பவளம் படுக்கையை விட்டு எழுந்து கொண்டாள். உடல் அசதிகொண்டிருப்பதை அவளால் உணர்ந்து கொள்ள முடிந்தது. அடுப்புக்கரி எடுத்து வாய்க்குள் போட்டுப் பல்லைத் தீட்டியபடி... கிணற்றடியை நோக்கி நடந்தாள். கிணற்றின் அருகே துணி துவைக்கும் கல்லின்மீது இருந்தபடி... பற்களைத் துலக்கத் தொடங்கினாள். கிழக்கே பொழுது மெல்ல மெல்லப் புலர்ந்து கொண்டிருந்தது. பவளத்தின் மனதுள்ளே இருள் அமிழ்ந்திருந்தது. அவளது எதிர்கால வாழ்வின் கற்பனைகள் சடுதியாக பின்நிலைப்படுத்தப்பட்டுப் போயின. தனது அவசரத்தனத்தை நினைத்து அவள் வருந்தாத நாள்களே இல்லை. இதற்கெல்லாம் காரணமாக அமைந்தது பருவ வயதின் உணர்வுகளின் தூண்டல்களே!

பவளம் அழகியல்ல. ஆனால், பொதுவான நிறத்தோடு முகவசீகரம் பொருந்திய, இளவயதுப் பெண்ணாக இருந்தாள். எட்டாம் வகுப்புவரை கல்வி கற்றிருந்தாள். குடும்பத்தில் நிலவிய வறுமை காரணமாக அவளது படிப்புத் தடைப்பட்டு விட்டது. பவளத்தின் தாய், அருகில் உள்ள ஓர் அரிசி ஆலைக்கு வேலைக்குச் சென்று வந்து கொண்டிருந்தாள். குடும்பத்தின் பொருளாதார நெருக்கடியைத் தவிர்க்கும் முகமாக, பவளமும் அந்த அரிசி ஆலைக்குச் சென்று வரத் தொடங்கினாள். ஆலையுள் கடினமற்ற வேலைகளையே பெண்கள் செய்து கொண்டிருந்தார்கள். ஆண்கள் முதுகிலும் தலையிலும் மூடைகள் சுமப்பது... நீர்த்தொட்டியினுள் ஊறப்போட்ட நெல்லை எடுத்து நீராவியில் அவிப்பது... தளத்தில் புழுங்கல்களைக் காய விடுவது... காய்ந்த புழுங்கல்களை இயந்திரத்தில்போட்டு அரிசியாக்குவது... போன்ற வேலைகளைச் செய்து கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருவனாக மாணிக்கன்.

மாணிக்கன் பத்துமைல் தொலைவிலிருந்து ஆலைக்கு பேருந்தில் வந்து செல்வான். நல்லதொரு உடல் உழைப்பாளி. ஆலை முதலாளிக்கும் அவனில் ஒரு பிடிமானம் இருந்தது. மாலைப்பொழுது நெருங்கும் வேளைகளில், ஆலைக்கு வெளியே உள்ள சிமெந்துத் தளத்தில் காயப்போட்ட புழுங்கல்களை ஆண்கள் தள்ளுப்பலகை கொண்டு இழுத்து, ஓரிடத்தில் குவியலாக்குவார்கள். பின்பு கடகப்பெட்டிகளில் அள்ளிப் பெண்களின் தலைகளில் சுமக்க வைப்பார்கள். இவ்வகை வேலையின் நிமித்தம் ஒருவர் முகத்தை ஒருவர் நேருக்குநேர் பார்க்க வேண்டிய நிலையில், மாணிக்கனும் பவளமும் தங்களது பார்வைகளால் மோதிக்கொள்வார்கள். பெரும்பாலும் கடகத்தை பவளத்திடமிருந்தே மாணிக்கன் வாங்குவான். அதனுள் புழுங்கலை நிரப்புவான். பின் அதை இருவருமாக கடகத்தின் நார்வட்டத்தைப் பிடித்து இழுத்துத் தூக்கும்போது, மாணிக்கனின் கண்கள் பவளத்தின் பார்வையைச் சந்திக்கும். பவளத்தின் முகத்தில் மெலிதான புன்முறுவல் அரும்பும். இந்தச் 'சந்திப்பு' தொடர்ந்தும் நிகழ்ந்து கொண்டிருந்ததை பவளத்தின் தாயோ, சக தொழிலாளர்களோ தவறாக நினைக்கவில்லை. ஒருநாள் தாயோடு வேலைக்கு வந்த பவளம், மாலையில் வீட்டுக்குத் திரும்பவில்லை. அன்றிலிருந்து மாணிக்கனும் அந்த அரிசி ஆலைக்கு வேலைக்கு வருவதில்லை.

குடிசைக்குள்ளிருந்து குழந்தை அழும் ஒலி கேட்கிறது. பவளம் சுயநிலையடைந்தாள். அவசரமாக வாயைக் கொப்பளித்தவள், முகத்தைக் கழுவிக்கொண்டு குடிசைக்குள் நுழைந்தாள். குழந்தையைத் தூக்கி மார்போடணைத்தபடி... குசினிப்பக்கம் வந்தாள். மாணிக்கன் இயற்கை உபாதையின் பொருட்டு, அருகில் உள்ள பனங்கூடலுக்குச் சென்றிருந்தான். அடுப்புக்கல்லில் கேற்றிலை வைத்து, அடுப்பை மூட்டிவிட்டு, குழந்தையோடு வெளியே வந்தாள் பவளம். ஈரத்துணி கொண்டு குழந்தையின் இடுப்புப் பகுதிகளைத் துடைத்துவிட்டுத் திரும்புகையில், மாணிக்கன் பனங்கூடலில் இருந்து திரும்பி வருவது தெரிந்தது அவளுக்கு.

கேற்றிலில் நீர் கொதித்துக் கொண்டிருந்தது. மாணிக்கன் குசினிக்கொட்டிலின் வாசலின்முன் குந்திக்கொண்டான். பவளம் கொடுத்த தேநீரை உள்ளங்கைச் சீனியுடன் நாவினால் தொட்டு, நக்கிக் குடித்தபடி... சோறு, கறிச்சட்டி வைக்கும் இடத்தைத் திரும்பிப் பார்த்தான். பவளம் அதைப் புரிந்து கொண்டிருக்க வேண்டும். குழந்தையை அந்த இடத்தில் இருத்தி விட்டு, திரும்பி மறுபுறமாக முதல்நாள் இரவு பானைக்குள் மிஞ்சிக் கிடந்த சிறிதளவு சோற்றை எடுத்து, சட்டிக்குள் போட்டுப் பிரட்டினாள். பின் அதைச் சட்டியோடு மாணிக்கனுக்கு முன்பாக வைத்தாள். மாணிக்கன் தேநீரைக் குடித்து முடித்துவிட்டு, அந்தச் சோற்றை எடுத்து உண்ணத் தொடங்கினான். அப்போது பவளம் அவனைப் பார்த்து, "இஞ்சை உப்போட சேர்ந்த முப்பத்திரண்டும் இல்லை. இண்டைக்காவது கிடைக்கிற கூலியை ஒழுங்காகக் கொண்டுவரப் பார்..." எனக்கூறிவிட்டு, குழந்தையைத் தூக்கிக் கொண்டு வெளியே வந்தாள்.

மாணிக்கன் எதுவும் கூறவில்லை. மௌனமாகச் சட்டிக்குள் கிடந்த சோற்றை உண்டு முடித்தான். கள்ளுவாய்க்கு அச்சோறு ருசிப்பட்டிருக்க வேண்டும். கைவிரல்கள் அனைத்தையும் சூப்பிக் கையைக் கழுவிவிட்டு, தனது மிதிவண்டியை எடுத்துக் கொண்டு வெளியே புறப்பட்டான்.

அவனுள் ஆயிரம் சிந்தனைகள்... 'நான் ஏன் இப்படி நடந்து கொள்கிறேன்.' என்ற அவனது மனக்கேள்விக்கு, அவனால் பதிலளிக்க முடியாமல் இருந்தது. 'எல்லாம் அந்தக் கேடுகெட்ட அந்தக் கூட்டத்தாலைதான்...' என அவன் தன்னோடு வேலைக்குச் சேரும் கூட்டாளிமாரைக் குறித்து, ஆத்திரப்பட்டான். 'இனிக் குடிக்கக்கூடாது. சாமான் சக்கட்டுகளை வாங்கிக்கொண்டு நேரத்தோடை போயிட வேணும்...' என்று அவன் நினைப்பான். ஆனால், அவனது நினைப்புக்கு எதிர்மாறாக அவனது கூட்டாளிமார்களின் செயற்பாடுகள் பதில்களாக அமைந்துவிடும்.

"இண்டைக்கு நான் வரேல்லை. நீங்கள் போங்கோ... நான் வீட்டையொருக்கா அவசரமாகப் போகவேணும்..." தனது கூட்டாளிமாரைப் பார்த்து மாணிக்கன் கூறுவான். அதற்கு அவர்கள் "இஞ்சை பாரடா! இவற்ர கதையை. இவ்வளவு நாளும் எங்கட காசில மாறி மாறிக் குடிச்சிட்டு, இப்ப 'காய்' வெட்டப் பார்க்கிறான். அதெல்லாம் முடியாது. இண்டைக்கு நீதான் வாங்கித் தரவேணும்.. "

மாணிக்கனால் எதுவும் செய்ய முடியாத நிலை. ஏற்கனவே அவர்கள் தங்களது பணத்தில் வாங்கி, ஊற்றித்தந்த கடனைக் கழிக்கச் சொல்லிக் கேட்பதை மனதுக்குள் நினைத்துத் தகித்துக் கொண்டு, அவர்களுக்கு வாங்கிக் கொடுப்பான். தானும் குடிப்பான். மறுநாள் அவர்கள் தமது பணத்தில் கள்ளு வாங்கி, இவனுக்கு வற்புறுத்திக் கொடுப்பார்கள். இவ்வாறு நாளாந்தம் பண்டமாற்று முறைபோன்று, பருகிக் கொண்டிருப்பார்கள். ஒரு கட்டத்தில் கூட்டாளிமாரிடம் காசில்லையெனில், அவர்கள் மாணிக்கன் வேலை செய்யும் இடத்திற்குச் சென்று, வெளியே காவல் நிற்பார்கள். வேலை முடிந்ததும் மாணிக்கனை அழைத்துக்கொண்டு, நேரே தவறணைக்குச் செல்வார்கள். மாணிக்கன் வீடு திரும்பும்போது, அவனிடம் அன்றைய வேதனம் எதுவும் இருக்காது. அன்றிரவு அவனது குசினி அடுப்புக்குள் பூனை உறங்கிக்கொள்ளும்.

இதனையிட்டும் பவளம் அவனோடு தர்க்கப்படுவாள். வாய்த்தர்க்கம் நீண்டநேரம் சூடு பிடிக்கும். இந்தச் சூட்டோடு சூட்டாக பவளம் அவனது கூட்டாளிமாரைத் திட்டுவாள்.

"அந்தப் பாழ்படுவார்... நாசமாப்போவார் தான் உன்னை இந்த நிலைக்குக் கொண்டுவந்து விட்டிருக்கிறாங்கள்.." "எடியேய்... என்னைப்பற்றி எப்படியும் பேசு. என்ர கூட்டாளிமாரைப்பற்றி நீ வாய் திறக்காதை... "

" ஏன் அவங்கள் ஒவ்வொருநாளும் உனக்கு ஊத்தித்தாறதும், உன்ர பணத்தில குடிக்கிறதும் மனசில சுடுகுதோ... இனி என்னால உன்னோட இருந்து குடும்பம் நடத்த ஏலாது. உன்னோட வந்த நாள்ள இருந்து ஒரு வருசம் வரைக்கும் என்னோட சந்தோஷமாத்தானே குடும்பம் நடத்தினனி. பிறகேன் உந்தக்கோலம் கொண்டனி?இனியும் நீ இப்படிக் குடிச்சிட்டு, வெறுங்கையோட வருவியெண்டால், நான் குழந்தையோட என்ர ஊருக்குப் போயிடுவன்..." பவளம் கூறுவதைக் கேட்டு, மாணிக்கன் நிறைவெறியிலும் மெதுவாக நக்கலாகச் சிரிப்பான்.

"நீ என்னோட நெடுகச் சண்டை போடுற நேரமெல்லாம் உப்பிடித்தான் சொல்லுகிறாய். உன்னால என்னை விட்டிட்டுப் போக முடியாது. இனி நீ திரும்பப் போனால் உன்ர அப்பன் ஆத்தை உன்னை ஏற்பினமே?"

பொழுது மெல்லச் சரிந்து கொண்டிருந்தது. இருள் மெல்லப் பரவத் தொடங்கியிருந்தது. ஒரு காற்சுண்டு பச்சையரிசி இருந்ததில், அதை உப்புப்போட்டுக் கஞ்சி காய்ச்சி குழந்தைக்குப் பருக்கியிருந்தாள் பவளம். அவளது வயிறு பசியில் புகைந்து கொண்டிருந்தது. நேரமும் நகர்ந்து கொண்டிருந்தது.

அவ்வேளையில், தெருவோரப் படலைத்தட்டி திறபடும் சத்தம் கேட்டது. பவளத்தின் பார்வை அங்கு நோக்கியது. மாணிக்கன் நிறைவெறியில் தள்ளாடியபடி... கைகளிலே எதுவித பொருள்களுமற்று உள்ளே வந்து கொண்டிருந்தான். பவளத்துக்கு நிலைமை புரிந்து விட்டது.

"ஆ... அழிவானே... முறிவானே... இண்டைக்காவது எப்பன் வயிறாறத் தின்னலாம் எண்டு பார்த்தால்... உன்னை நம்பி வந்த எனக்கு, ஒரு பிள்ளையையும் தந்துபோட்டு, அதையும் பட்டினி போட்டுக்கொண்டு, நீ உன்ரபாட்டுக்கு குடிச்சு வெறிச்சு ஆடிக்கொண்டு திரியுறாய். , நான் எங்கை போறது? இனி உனக்கும் எனக்கும் சரிப்பட்டு வராது. நான் என்ர வீட்டை போறன்..."

அவள் சொன்ன கடைசிவார்த்தை குறித்து, மாணிக்கன் அதைக் கவனத்தில் எடுக்கவில்லை. அவள் இதைத்தானே தினமும் சொல்கிறாள் என நினைத்துக் கொண்டான்.

"எடியேய்... பொத்தடி வாயை. உனக்கிப்ப சாமான் சக்கட்டு வாங்கிறதுக்கு காசுதானே வேணும். கொஞ்சம் பொறு வாறன்..." என்றவன், முற்றத்தில் கொய்யா மரத்தோடு சாத்தி வைக்கப்பட்டிருந்த கொக்கத்தடியை எடுத்தான். இருள் பரவிக்கொண்டிருந்த அந்த நேரத்திலும், வேலி அருகோரம் இளங்கன்றாக வளர்ந்து நின்ற ஒரு தென்னை மரத்திலுள்ள சில தேங்காய்களைப் பறித்தான். மண்வெட்டியின் முனைமூலம் உரித்துக் கொண்டு, தனக்குத் தெரிந்த கடைக்காரரிடம் விற்றுப் பணமாக்குவதற்கு விரைந்தான்.

கடைக்காரர் தேங்காய்களைப் பார்த்துவிட்டு, " இதென்ன எல்லாம் இளசாக் கிடக்குது. உள்ளுக்கை வழுக்கல்தான் இருக்கும்..." என்று கூறி, அத்தேங்காய்களை வாங்க மறுத்து விட்டார். மாணிக்கன் வெகுநேரமாக நின்றும், கடைக்காரர் வாங்காதது ஏமாற்றமாக இருந்தது. அவன் திரும்பத் தேங்காய்களுடன் வீட்டுக்கு வந்தான். வீட்டினுள் பவளத்தையும் குழந்தையையும் காணாதது அவனுக்குப் பெரும் அதிர்ச்சியாக இருந்தது.

"பவளம்... பவளம்... எடியேய் பவளம்..." வீட்டு முற்றத்தில் நின்றபடி பலமாகக் கத்தினான் மாணிக்கன். அவனது கத்தலில் பவளம் வரவில்லை. பக்கத்து வீட்டுப் பரமர்தான் வந்தார்.

"டேய் மாணிக்கா... ஏன்ராப்பா உதிலை நிண்டு கத்துறாய்...?" தெருப்படலையடியில் ஒலித்த குரலைக் கேட்டு, பரமரிடம் வந்தான் மாணிக்கன்.

"பரமு அண்ணை இவளை வீட்டில காணேல்லை அண்ணை..."

" அவள் உன்னோட இனி வாழேலாது எண்டு சொல்லிப்போட்டு, பஸ்சுக்கு என்னட்டை காசும் கடனாக மாறிக் கொண்டு, குழந்தையோடு தன்ர ஊருக்குப் போறனெண்டு போயிட்டாள்..."

பரமர் கூறிவிட்டு அமைதியாக நின்றார். மாணிக்கன் மேலும் அதிர்ச்சிக்குள்ளானான். மறுகணம் மிதிவண்டியைத் திருப்பிக் கொண்டு, பஸ் நிலையத்தை நோக்கி விரைந்தான்.

அவன் போவதைப் பார்த்தபடி... பரமர் தனது கைத்தொலைபேசியை எடுத்து, அதிலுள்ள நேரத்தை நோக்கினார். பவளத்தின் கிராமத்துக்கு இறுதியாகச் செல்லும் பேருந்தில் அவள் புறப்பட்டு, வெகு நேரமாகிவிட்டிருப்பது தெரிந்தது அவருக்கு. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



○ பாலாஜினி பாலசிங்கம்

# மரங்கள் என்னும் புனிதர்கள்...

எனது வீட்டைச் சூழ மூன்று பக்கங்களிலும் என் தந்தையின் சகோதரிகளின் காணிகள் தான். காணிகள் என்பதைக் காட்டிலும் ஒரு அடர்ந்த குட்டிக் காடென்றே அதைச் சொல்லிவிடமுடியும். இதுவரையிலும் சிங்கராஜவனத்தையே பார்த்திராத எனக்கு அது ஒரு குட்டிச்சிங்கராஜவனமாகத் தான் எப்போதும் தோன்றும். அத்தைமார்களால் கவனிக்கப்படாதிருந்த அந்த அடர்ந்த பற்றைக்காடு தான் என் ஆட்டுமந்தைகளின் மேய்ச்சல் வெளியாக இருந்தது. ஆனால் அதனை துப்புரவு செய்யவேண்டுமென்ற நோக்கில் அந்தக் காடு அழிக்கப்பட்டுவிடும் என்பதை நான் ஒருபோதும் நினைத்துக் கூடப் பார்த்ததில்லை. இன்று அது நிகழ்ந்திருக்கின்றது.

அந்த அடர்ந்து கிடக்கும் பற்றைகளிலும் ஓங்கி உயர்ந்த பனைகளிலும் பனைகளுடன் உறவாடும் வேம்புகளிலும் நாவல்களிலும் ஏதோ ஒன்று எனக்காக இருந்திருக்கின்றது என்பதை இப்போது என்னால் உணரக் கூடியதாக இருக்கின்றது.என் சோகங்களிலும் சந்தோசங்களிலும் அவை பங்கெடுத்துக் கொள்ளும். என் ஆட்டுமந்தைகளுக்கு உணவாக அவற்றின் கொப்புகளையும் கிளைகளையும் நான் அடிக்கடி கவர்ந்து கொள்வதுண்டு. கொக்கத்தடியினால் அவற்றை இழுக்கும் போது அவற்றுக்கு நொந்திருக்கக் கூடும். ஏனெனில் மரங்களுக்கும் உணர்வுண்டாமே. ஆனால் அதற்காக அவை என்னை ஒருபோதும் வஞ்சித்ததேயில்லை. கோடை நேரங்களில் குளிர்காற்றையும் அலாதியான மழை நேரங்களில் இலைகளை விசிறி மழைத்துளிகளாலும் அவை என்னை வாழ்த்தியிருக்கின்றன. என் ஆட்டு மந்தைகளை அந்த வனாந்தரமெங்கிலும் மேய விட்டு விட்டு என்னை நானே ஆசுவாசப்படுத்திக் கொள்வது அங்கு தான். எனக்குள் இருந்து எழுந்த எத்தனையோ கவிதைகளுக்கு கருப்பொருளானதும் அந்தக் காட்டு மரங்களும் பற்றைகளும் தான்.பறவைகளாலும் காற்றினாலும் விதை எறியப்பட்டு உருவாக்கப்பட்ட அந்த விருட்சங்கள் ஒவ்வொன்றும் இறக்கும்போது கதறி அழுத ஓசை என் காது வழி வீழ்ந்து என் இதயத்தை பிளந்திருந்ததை யாராலும் புரிந்துகொள்ள முடியாது.அந்தப் பச்சை உடுத்திய காட்டினில் இத்தனை காலமும் வாழ்ந்திருந்த அந்தப் பட்சிகள்தான் இனி என்ன செய்யும்.இருப்பிடங்களுக்காக அவை என்ன செய்யக் கூடும்.

**வானத்தை பாதி மூடி நின்றிருந்த அந்த காட்டினில் நின்ற பனைகள் ஒவ்வொன்றும் எனக்கு ஒவ்வோர் மனிதர்கள். என்னை பொறுத்தவரைக்கும் மௌனமாக நின்று என் ஒவ்வோர் அசைவுகளையும் அவதானித்துக் கொண்டிருக்கும் பெரிய அறிவாளி மனிதர்கள் அவர்கள். அவை கனரக வானகத்தால் ஒவ்வோர் பக்கமாக பிடுங்கி எறியப்பட்ட போது அந்த அறிவாளிப்பனைகள் என்ன எண்ணியிருக்கும்?**

வானத்தை பாதி மூடி நின்றிருந்த அந்தக் காட்டினில் நின்ற பனைகள் ஒவ்வொன்றும் எனக்கு ஒவ்வோர் மனிதர்கள். என்னைப் பொறுத்தவரைக்கும் மௌனமாக நின்று என் ஒவ்வோர் அசைவுகளையும் அவதானித்துக் கொண்டிருக்கும் பெரிய அறிவாளி மனிதர்கள் அவர்கள். அவை கனரக வாகனத்தால் ஒவ்வோர் பக்கமாகப் பிடுங்கி எறியப்பட்டபோது அந்த அறிவாளிப்பனைகள் என்ன எண்ணியிருக்கும்? அந்தப் பனை மரங்கள் தந்த நுங்குகளையும் பனம்பழங்களையும் நானும் என் ஆட்டு மந்தைகளும் எத்தனை தடவைகள் ருசி பார்த்திருக்கின்றோம் தெரியுமா? சாக்குப்பை நிறைய பனம்பழங்களை ஓடி ஓடிப் பொறுக்கிக் கொள்வதில் அத்தனை பிரியம் எனக்கு. உப்பிட்டவரை உள்ளளவும் நினை என்று சொல்வார்களே திகட்டும் வரை ருசித்து விட்டு கடைசி வரைக்கும் காப்பாற்ற வரவில்லையே என்று என்மேல் அவை பழிசுமத்தியிருக்குமோ? நான் என்ன செய்யமுடியும். காணி என்னுடையதல்லதாக உள்ள போது காடு மட்டும் எப்படி என்னுடையதாகும்?

இன்னுமொரு விடயம் என்னவென்றால் அந்த குட்டிக்காட்டுக்கும் எங்கள் வீட்டுக்கும் இடையில் எல்லையாக இருப்பது வேலி ஒன்று மட்டுமே. அந்த வேலியால் பார்க்கும்போது இரவு நேரங்களில் அந்த மரங்களெல்லாம் ஒவ்வோர் கரும்பூதங்களைப்போல் என்னைப் பயமுறுத்தும்.அந்தப் பயத்தினையும் தாண்டி நான் அவற்றின் ஒவ்வோர் அசைவுகளையும் ஒவ்வோர் உருவங்களாக கற்பனை செய்து கொள்வேன். அதில் எனக்கு ஏனோ ஓர் மனநிறைவு இருந்திருக்கிறது.காலையிலும் இரவிலும் அந்தப்பெரு மரங்களில் குடியிருக்கும் பட்சிகள் தான் எனக்கு அலாரம்.ஒவ்வோர் பட்சியும் ஒவ்வோர் விதமாக ஒலியெழுப்பிக் கொண்டிருக்கும். அதிலும் வேம்பு,நாவல் பழங்கள் பழுக்கும் காலங்களில் பறவைகளுக்கு குறைவேயில்லை.நள்ளிரவிலும்கூட பறவைகள் பழங்களுக்காக ஒன்றுடன் ஒன்று சண்டையிடுவதும்,கத்துவதும் எனக்குக் கேட்டுக் கொண்டேயிருக்கும்.அவற்றை இனி ஒரு முறை கேட்கமுடியும் என்று எனக்குத் தோன்றவில்லை. கனரக வாகனத்தால் தூக்கி எறியப்பட்டு தள்ளிச் செல்லப்படும் ஒவ்வோர் மரமும் கையறுபட்டும் கால் துண்டாடப்பட்டும் உயிரற்ற உடல்கள் போல் அலங்கோலமாகத் தோற்றமளிப்பது எனக்கு மட்டும் தானா அல்லது மற்றையவர்களுக்குமா என்பது எனக்குத் தெரியவில்லை.அத்தை அடிக்கடி சொல்லிக் கொள்வார் "இந்த மரமெல்லாம் கனகால மரங்கள் அழிக்கிறது கஷ்டம்" என்று.அவரது மனதில் நீண்டகாலமாகவே அந்த எண்ணம் இருந்திருக்கிறது போலும். அவை பிடுங்கப்படுவதை அவர் எவ்வித கவலையுமில்லாமல் பார்த்துக் கொண்டு நின்றிருந்தார்.

இப்போது அந்தக் குட்டிக் காடு அழிக்கப்பட்டு காணி மண் நிரவி விடப்பட்டிருக்கிறது. நீல வானத்தை மூடியிருந்த பச்சை இலைகள் இப்போது இல்லை.அவர்களுக்கோ இது காணி.எனக்கோ கனரகவாகனம் எனும் பேரரக்கனால் அழிக்கப்பட்ட பூமி.பெருமரங்கள் எல்லாம் வெற்றிடமாகிப் போனதால் இப்போது என் மனமெங்கும் சுமையேறிக் கிடக்கிறது. அந்தப் பட்சிகளுக்கு வேறு மரங்கள் கிடைக்கக் கூடும்.என் ஆட்டு மந்தைகளுக்கு இன்னோர் மேய்ச்சல் வெளி கிடைக்கக் கூடும். ஆனால் எனக்கு இதைப்போலொரு குட்டிச் சிங்கராஜவனம் கிடைக்காதல்லவா? வாழ்தல் என்பது மனிதர்களுக்கு மட்டும் சொந்தமானதல்லவே!

"ஓ... புனிதர்களே என்னை மன்னித்து விடுங்கள். எங்கள் பிறப்பினையும் மன்னித்து விடுங்கள். நீங்கள் வாழவைத்தீர்கள். நாங்களோ வாழ்வை அழிக்கின்றோம்" ■



# உணர்ந்தினம்

பாகம் 2

○ இராகவன்

நவரத்தினம் மாஸ்ரர் எங்கட வகுப்புக்குச் சைவசமயம் படிப்பிச்சவர். அவர் பாடமெடுக்கேக்குள்ள வகுப்பே கலகலப்பாயிருக்கும் "சக்தி பின்னமிலான் எங்கள் பிரான்" என்ற திருவாசக வரிக்கு அவர் தரும் விளக்கம் வெகுசிறப்பாயிருக்கும். அப்ப எங்கட வகுப்பில நிமலன் எண்டொரு பொடியன் படிச்சவன். ஆள் சரியான கட்டை.அதால முதலாம் வாங்கில முதலாம் ஆளாயிருப்பான். நவரத்தினம் மாஸ்ரர் வகுப்புக்கு வந்து பாடமெடுக்கத் தொடங்கின கையோட நிமலன் என்ன செய்வானெண்டால் சைவசமயப்புத்தகத்தை விரிச்சு வைச்சு, முகத்தை மறைச்சுக் கொண்டு பக்கத்திலயிருக்கிறவனோட கதைக்கத்தொடங்கியிடுவான். கதைக்கிற சத்தம் நவரத்தினம் மாஸ்ரருக்குக் கேட்ட உடனை "டேய் மூதேசி நான் இஞ்சை முக்கி முக்கிப் படிப்பிக்கிறன், நீ புத்தகத்தை வைச்சு மறைச்சுக்கொண்டு ஞை! ஞை! எண்டிறாய். வையடா மேசையில புத்தகத்தை. கவனியடா இஞ்சை" எண்டு சொல்லுவார். ஆனால் அடிக்கமாட்டார்.அவர் அப்பிடிச்சொல்லேக்குள்ள வகுப்பு முழுக்கச் சிரிக்கும். அவர் அந்த 'ஞை! ஞை!' என்பதற்குக் கொடுக்கும் அழுத்தம் நல்ல கலைத்துவமாகவிருக்கும் . ஒவ்வொரு சைவசமயப்பாட வேளையிலும் நிமலன் அவரிடம் ஏச்சு வாங்குவது ஓர் அன்றாட நிகழ்வாக மாறியிருந்தது.அவரிடம் ஏச்சு வாங்க வேண்டுமென்பதற்காகவே நிமலன் அவ்விதம் நடந்து கொள்வதாகத் தோன்றும்.

17

மற்றது சைவசமயப்பாட வேளையொன்றின்போது நவரத்தினம் மாஸ்ரர் உளத்தூய்மையோடும் மெய்யன்போடும் சிவபெருமானைக் கும்பிட்டால் அவர் ஏதோவொரு விதத்தில் காட்சி தருவார் என்று சொல்லிவிட்டு 'செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப் பல்லோருமேத்தப் பணிந்து எண்டு சிவபுராணத்தை முடிக்கேக்குள்ள நீங்களெல்லாம் ஐயோ எண்டெல்லே கத்திறனீங்கள்.
உங்களக் கண்டால் சிவபெருமான் பின்னங்கால் பிடரியில அடிபடத்தான் ஓடுவார், உங்கட பக்கமே தலை வைச்சுப்படுக்கமாட்டார்' என்றும் சொல்வார். இப்போது இதை நினைத்தாலும் சிரிப்பு வரத்தான் செய்யும். எனக்கு முதலில் அவரது பாட்டுத்திறன் பற்றித் தெரியாது.
1993 நடுப்பகுதியில் பாடசாலையில் நடைபெற்ற உயர்தரமாணவர் மன்ற வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வின்போது 'பொதி நகர்வில்' கலந்துகொண்டு நவரத்தினம் மாஸ்ரர் 'செந்தமிழ்த் தேன்மொழியாள்... 'என்ற பாடலைப்பாடி எல்லோரையும் வியப்பிலாழ்த்தினார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org